வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்

MILK WHITE SOAP

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

சுதந்திரம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 சித்திரைத் திங்கள் 13-ம் நாள் (25—4—1965) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 22 | இதழ் 48

## 3 எம். பி.கள் நியமனத்துக்கு ஆட்சேபனை

நியமன எம். பி. களில் மூன்று பேர்களின் நியமனத்தை ரத்துச் செய்யுமாறு கோரி மலாய் சமூகத்தைச் சேர்ந்த சாலிம் சிடீன் என்பவர் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடரவிருப்பதாக அறியப்படுகிறது. அத்துடன் மலாய் சமூகத்தின் பிரதிநிதி ஒருவரைப் பாராளுமன்றத்துக்கு நியமனம் செய்யலாமென அறிவிக்குமாறும் அவர் கோருகிறார் என்று தெரிகிறது.

திருவாளர்கள் சேர் ராஸிக் பரீத், வி. அண்ணாமலை, ஏ. ரத்னபால என்ற மூவரின் நியமனங்களையே அவர் ஆட்சேபிக்கிறார்.

அவர்கள் மூவரையும் நியமனம் செய்யாவிட்டாலும் அவர்கள் பிரதிநிதித்துவம் தாங்கும் மக்கள் பகுதியினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் உண்டு என்றும், பிரதிநிதித்துவம் போதியளவு இல்லாத சமூகங்கள் சார்பாக பிரதிநிதிகள் 6 பேர்களை நியமிக்க தேசாதிபதிக்குள்ள அதிகாரங்களை உபயோகித்து, இம்முறை செய்த நியமனங்களில் மலாய் சமூகப் பிரதிநிதி ஒருவர் இடம் பெறவில்லையென்றும் அவர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார் என அறியப்படுகிறது.

## சமசமாஜிகளின் சதி திட்டம் தவிடு பொடி

தேசிய அரசாங்கத்துக்கு இடையூறுகளை விளைவிக்கத்தக்க வகையில் பொது வேலை நிறுத்தம் ஒன்றினை ஏற்படுத்தும் நோக்குடன் சமசமாஜக்கட்சி செயற்பட்டதாகவும், அந்நோக்கத்தை அண்மையில் கைவிட்டு விட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. சமசமாஜக்கட்சியினதும், வேறு இடதுசாரி இயக்கங்களினதும் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்ததாகக் கூறப்படும் பல தொழிற் சங்கங்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ள தேசிய அரசாங்கத்தை ஆதரிக்க முற்பட்டுவிட்டமையே சமசமாஜிகளின் சதித்திட்டம் தவிடுபொடியானதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஒரு பொது வேலைநிறுத்தத்தை நடாத்துவதன்மூலம் அரசாங்கத்துக்கு இன்னல்களையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி அரசாங்கத்தை முறியடித்துவிடலாம் என சமசமாஜக்கட்சித்தலைமைப் பீடம் கருதியதாகக் கூறப்படுகிறது. கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்கள், இ. பொ. ச., புகையிரத தொழிலாளர் சங்கங்கள், அரசாங்க லிகிதர் சேவா சங்கம், வர்த்தக தொழிலாளர் சங்கங்கள் ஆகியவற்றின் துணையினையும் சமசமாஜக்கட்சியினர் அணுகி தமதுதிட்டத்துக்கு ஆதரவு தேட முற்பட்டனராம். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு விரோதமாகவே தொழிலாளர்கள் நடந்துகொண்டனராம்.

சமசமாஜக் கட்சி சில காலம் சுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஆட்சிபீடமேறியிருந்தபோது ஏற்படுத்திக் கொண்ட செல்வாக்கையும் இதற்காக உபயோகித்தும் பலன் சிறிதும் கிட்டவில்லையாம். இதுவரைகாலமும் சமசமாஜக்கட்சிக்கு ஆதரவு நல்கிவந்த பல தொழிற்சங்கங்களே இன்றுள்ள அரசாங்கத்துக்கு ஆதரவு காட்டத் தலைப்பட்டுவிட்டன.

அதுமட்டுமல்லாமல் சமசமாஜக் கட்சிக்குள்ளும் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் ஏற்கனவே ஏற்பட்ட பிளவுகளாலும் தொழிற் சங்க பலத்தை சமசமாஜ—கொம்யூனிசக் கட்சிகள் வெகுவாக இழந்துவிட்டன.

21 அம்சக் கோரிக்கையை உருவாக்கி முன்னணியில் நின்றவரான டாக்டர் என். எம் பெரேரா நிதிமந்திரிப் பதவி ஏற்றதும் அக்கோரிக்கைகளை உதாசீனம் செய்ததுடன், தொழிலாளர்களைப் 'பாராமுக'மாக விருந்தமையினாலும் தொழிலாளர்கள் அவரிடம் வைத்த நம்பிக்கையையும் அவர் இழந்துவிட்டார்.

பொது வேலைநிறுத்தத்துக்கு ஒழுங்குகள் செய்யும் போதே தொழிலாளர்கள் காட்டிய வெறுப்புணர்ச்சியினாலேதான் சமசமாஜக்கட்சி தனது நடவடிக்கைகளிலிருந்தும் வெற்றிகரமாகப் பின்வாங்கி விட்டது.

பெரும்பாலான தொழிலாளர்களின் ஆதரவு அரசாங்கத்தின்பக்கமேசாய்ந்துவிட்டது என்பதற்கு கொழும்புத் துறைமுகத்தில் சரக்கு ஏற்றுமதி இறக்குமதியில் ஏற்பட்டுவரும் திடீர் திருப்பமே ஒரு எடுத்துக்

(9-ம் பக்கம் பார்க்க)

## சபைக்குள் வந்த தோசை, வடை, நல்லெண்ணெய்

புதன்கிழமை பிரதிநிதிகள் சபையில்தோசைகளும் வடைகளும் பரிமாறப்பட்டன. இத் தோசைகளுக்கும் வடைகளுக்கும்



அன்று ஏற்பட்ட கிராக்கி போல் வேறு என்றும் ஏற்பட்டதில்லை அது மட்டுமா? 'நல்லெண்ணெய்' முதற்கொண்டு பாராளுமன்றத்தில் இடம்பிடித்துக் கொண்டது தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் பேச எழுந்ததும் தான் இச் சுவையூட்டும் பதார்த்தங்கள் சபையில் பரிமாறப்பட்டன, என்று பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

புதன்கிழமை சபையில் திரு அமிர்தலிங்கம் இடது

(9-ம் பக்கம் பார்க்க)

## அறிஞர் அண்ணாதுரை இலங்கை வருகிறார்?

ஜூன் மாதம் 11-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு. அண்ணாதுரை அவர்களுடன் தமிழ் நாட்டைச் சேர்ந்த இரு பேராசிரியர்களும் மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று தமிழ் மறைக் கழகப் பேச்சாளர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.



தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு ஜூன் திங்கள் 11-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. ஜூன் திங்கள் 11, 12, 13-ம் திகதிகளில் கிளிநொச்சியிலும், 14-ம் திகதி துணுக்காயிலும், 15-ம் திகதி பூநகரியிலும், 16-ம் திகதி பளையிலும் இம்மாநாடு நடைபெறும்.

உரையரங்கு, உடற்பயிற்சியரங்கு, கருத்தரங்கு, கவியரங்கு, இசையரங்கு, பட்டி மன்றம் என்றவாறு மாநாட்டு நிகழ்ச்சி நிரல் வகுக்கப்படும்.

மாநாட்டு ஒழுங்குகளைக் கவனிக்கும் பொறுப்பை கிளிநொச்சி வாலிபர்கள் பொறுப்பேற்றுள்ளார்களாம். மாநாட்டு நிகழ்ச்சி நிரலை ஒழுங்கு படுத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று இத்திங்கள் 25-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கொழும்பில் நடைபெறும் என்றும், இவ்வாலோசனைக் கூட்டத்தில் தமிழ் அறிஞர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த கொழும்பு வாழ் இளைஞர்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு உள் நாட்டு வெளி நாட்டு தமிழ் அறிஞர்கள் சிலருக்கு கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கடிதம் எழுதியுள்ளார். தமிழ் நாட்டைச் சேர்ந்த இரு பேராசிரியர்களுக்கும், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகியோரும் கடிதம் எழுதியுள்ளார்.

'மாநாட்டில் அறிஞர் அண்ணா கலந்துகொள்வார்'

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தொழிலாளரின் மே தின ஏற்பாடு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அட்டன் ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் மொழி வழித் தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை அவ்வப்பகுதிகளில் உள்ள தொழிற் சங்கப் பிரமுகர்கள் கவனித்து வருகிறார்கள் என்று எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமை நிலையத்திலிருந்து வெளியான ஒரு அறிக்கை கூறுகிறது.

தனியார் துறை, பொதுத் துறை ஆகியவற்றில் உள்ள சகல மொழிவழித் தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்து மேதினக் கூட்டங்களை நடாத்த முடிவு செய்துள்ளன மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டம் சிறப்பு வாய்ந்ததாக விளங்கும். இக் கூட்டத்தில் எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் பி ஏ. கலந்து கொள்வார்.

மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டத்தில் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் திரு எம். எஸ். நடராசாவும், இ. தொ. கழகத்தின் சார்பில் திரு மு. எல்லாளனும், ஆசிரிய சங்கத்தின் சார்பில் திரு. டோ. செ. க. வணசிங்காவும், கூட்டுத்தாபன ஊழியர் சார்பில் திருவாளர்கள் கோவிந்தசாமி, இளையதம்பி, அ. குரூஸ், ஆகியோரும், நெல்லளவைத் தொழிலாளர் சார்பில் திரு. வ. பாலசிங்கமும் கலந்துகொள்வார்கள்.

திருவாளர்கள் செ. இராசதுரை, சி. மூ. இராசமாணிக்கம் ஆகியோரும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள் என்று தெரிகிறது.

கூட்ட ஒழுங்குகளை எழுதுவினைஞர் சங்க கிளைச் செயலாளர் திரு அ. புவனேசன் கவனித்து வருகிறார்.

### திருமலையில்

திருகோணமலையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் அ. எ. வி சங்கச் சார்பில்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

கணேசனுடைய ஆணித்தரமான வாதங்கள், தலைமையாசிரியருடைய பூதக்கண்ணாடி மனப்பாங்கை நொறுக்குவதற்குப் பதில், இன்னுமொரு பெரிய பூதக்கண்ணாடியை அவருடைய கலைகளில் பொருத்தவே உதவி செய்தன. ஆனால் இப்பொழுது பொருத்தப்பட்ட அந்தப் பூதாகாரமான பூதக்கண்ணாடியால், பிறரை நோக்குவதற்குப் பதில் தம்மைத்தாமே கூர்ந்து நோக்கினார் தலைமையாசிரியர். அப்பொழுது அவர் கண்ட காட்சிகள் மிகவும் விநோதமானதாகவும் வெட்கப்படக்கூடியதாகவும் இருந்தன. தாம் மாணாக்கனாகப் பாடசாலையில் பயின்ற காலத்திலிருந்து, இந்த இருபத்தைந்து வருடகாலமாக ஆசிரியப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்நாள் வரையும் தாம் செய்த காரியங்களனைத்தும் மிகத் தெளிவாக அந்தக் கண்ணாடி மூலம் தெரிந்தன.

ஐந்து வயதில் பாடசாலைக்குப்போக ஆரம்பித்த அவர், இன்று ஐம்பது வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் இந்தத் தள்ளாத வயதிலும் பாடசாலைக்குப் போய்க் கொண்டே இருக்கின்றார். இப்படியாக அறியாப் பருவம்தொட்டு, அறிவு முதிர்ந்த பருவம் வரையும் பாடசாலையிலேயே அவருடைய வாழ்நாளில், பெரும் பகுதி கழிந்து விட்டதால், அவருடைய 'வம்புதும்பு'களும், பலவீனங்களும் பாடசாலையோடு தொடர்புடையனவாகவே அமைந்து விட்டன.

சும்மாவா? எட்டாம் வகுப்பு மாணாக்கனாகப் படிக்கும் போதே களம் கண்ட தீரர் அவர்! தம்மோடு பயின்ற மாணாக்கி ஒருத்தி அமரும் ஆசனத்தில், அவள் வருமுன்னதாகவே மையை—அதிலும் சிவப்பு மையைத் தெளித்து—அவள் பின்புறப் பாவாடைக்கு வர்ணம் தீட்டி அதற்குப் பரிசிலாக ஆசிரியரின் கைப்பிரம்பால் பல வீரத் தழும்புகள் பெற்றவர் அவர்! அப்பவும் அதற்குப் பின்னும் பருவக்கோளாறால் அவர் புரிந்த 'திருவிளையாடல்'கள் அனந்தம். படிப்பிக்கவென்று பாடசாலையில் காலடி எடுத்துவைத்ததன் பின்னர், ஆசிரியருக்கும், மாணாக்கருக்குமிடையிலுள்ள உரிமையை வைத்துக் கொண்டு அவர் புரிந்த லீலைகள் ஏராளம்! மாணாக்கப் பரம்பரையினருக்குள்ள கீழ்ப்படிதல், அஞ்சுதல் முதலான இயல்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களைத் தண்டிக்கும் சாக்கிலும் அவர் கண்டிக்கும் சாக்கிலும், பாராட்டும் சாக்கிலும் அவர் அநுபவித்த சுகம் எண்ணில் அடங்கா! இப்ப என்ன? நரை திரை கண்ட பருவம் என்னும் கவசத்துள் புகுந்து கொண்டு, மிகத் தைரியத்தோடு வயது வந்த மாணாக்கியரைத் தொட்டு, அந்தத் தீண்டும் இன்பத்தைத் திருட்டுத்தனமாக அனுபவிப்பதற்கும் அவருடைய தொழில் இடம் தந்தது!

கணேசனுடைய வாதங்கள் அவர் மனக்கண்ணில் மாட்டிவிட்டுச் சென்றிருந்த பூதக்கண்ணாடியின் துணைகொண்டு தம் கடந்தகால நிகழ்ச்சிகள் அனைத்தையும் முழுமையாகப் பார்த்த தலைமையாசிரியருக்குக் கணேசன் மீது ஓர் அன்பும், இலட்சுமியின்பால் ஒரு மதிக்கும் மனப்பக்குவமும் ஏற்படச் செய்தது. தம்மைத்தாமே நினைந்து கூச்சப்பட்டுக் கொண்ட அவர், கணேசன் அப்படி வேறு இருக்கை தேடிப் புறப்பட்டதை நினைத்து மனம் மிக நொந்தார். கணேசன் திரும்பி வந்ததும், அவனை எப்படியும் சமாதானப்படுத்தி, தம்முடனேயே அவனைத் தங்கச் செய்ய வேண்டுமென்று சங்கல்பம் எடுத்துக்கொண்டு, தம் விடுதிக்குத் திரும்பினார் அவர்.




"மார்பிருந்த தாவணியும் வசமிழந்து
நழுவிவிட, மதர்த்த முல்லைக்
கூர் இரண்டைப் போர்த்த வரும்
கொங்கையணி பகல்கிறது குளுகுளுத்த
ஆர்வமுறும் பொற்கலசம் அமுதூறித்
துடிக்கிறது............"

—நிமிலைத்துமிலன்

## 14. வற்றாத புனல்

கணேசனுக்கு நெஞ்சினுள் திக்கென்றது.

'நானும் உங்களுடன் வருகிறேன்' என்று கூறிக்கொண்டு தைரியமாகத் தன்னை நோக்கி இலட்சுமி வருவதைக் கண்டதும் கணேசனுக்கு உடலெல்லாம் வியர்க்கத் தொடங்கி விட்டது. உடலெல்லாம் அப்படி வியர்த்ததே தவிர, உள்ளம் என்னவோ, அவள் அப்படிக் கூறியதையும், தன்னை நோக்கி நடைபயின்று வருவதையும் முழுமையாக அங்கீகரித்து மகாதோரணங் கட்டி வரவேற்றது! தன்னுடைய வாதத்திறன், தலைமையாசிரியரின் முன் கோழையாக நின்ற அவளை இத்தனை விரைவில் தைரிய பூசணியாக மாற்றிவிட்டதா? என்பதை எண்ண, அவனை அறியாமலேயே அவனுள் தன்னெடுப்பு மிகுந்தது!

கணேசனை நெருங்கிய இலட்சுமி கண்ணிலும், முகத்திலும் பாவம் குலுங்கக் கேட்டாள். 'பயந்து விட்டீர்களா?' என்று.

'ஆம், மிக மிகப் பயந்துவிட்டேன்!' என்றான் கணேசன்.

தன்னுடைய கேள்விக்குக் கணேசனிடமிருந்து தான் எதிர்பார்த்த பதில் கிடைக்காமல் போகவே, அகல விரிந்த தன் கண்களால், ஆச்சரியத்தோடு அவனை ஏறிட்டு நோக்கினாள் இலட்சுமி.

இலட்சுமியின் இந்தத் திண்டாட்டத்தை மனதுள் இரசித்துக் கொண்டே கணேசன் சொன்னான். 'தலைமையாசிரியருடைய மிரட்டலால் எங்கே உங்கள் கண்கள் பெருக்கெடுத்து விடுமோ? என நான் மிகவும் பயந்து போனேன்!'

இலட்சுமியின் இதயம் உயர்ந்து தாழ்ந்தது. 'நான் அதைக் கேட்கவில்லை'.

'பின் எதைக் கேட்டீர்கள் டீச்சர்?'

'நானும் உங்களுடன் வருகிறேன் என்று கூறி உங்களைத் தடுத்ததால் நீங்கள் பயந்து போனீர்களோ? என்றுதான் கேட்டேன்'

'நான் பயப்படுவதுண்டுதான்! போலித்தனத்தையும், நடிப்பையும், இரகசியத்தையும் கண்டு நான் அருவருப்பதுண்டு!'

'நான்கூட சற்று முன்னால் மிகவும் பயந்து விட்டேன்.'

'தலைமையாசிரியரின் சீற்றத்தைக் கண்டா?'

'இல்லை; உங்களைக் கண்டு!'

'அத்தனை பயங்கரமாகவா நான் தோற்றுகின்றேன்?'

'கபோதிகள் வேண்டுமானால் பயப்படலாம். நான் பயப்பட்டதெல்லாம், எனக்காகத் தலைமையாசிரியரோடு நீங்கள் வாதாடிவிட்டு, அந்த ஆத்திரத்திலும், மனக்கசப்பிலும் இந்தப் பாடசாலைக்கே முழுக்குப் போட்டுக் கொண்டு போய் விடுவீர்களோ! என்றுதான்!'

கணேசனின் மேனியை மந்தமாருதம் நிறைப்படுத்தியது. செவிகளில் இனிய சங்கீதம் பாய்ந்தது. எடுத்த எடுப்பிலேயே; சந்தித்த சில மணி நேரத்திலேயே ஓர் இளம் பெண்ணின் அக்கறைக்குத்தான் ஆளாகி விட்டதை எண்ணியபோது, அவன் தோற்றத்தில் அவனுக்கே என்றுமில்லாத ஒரு நம்பிக்கை பிறந்தது.

'முன்பின் தெரியாத நான் பாடசாலைக்கு முழுக்குப் போட்டால், இந்தப் பெண்ணுக்கு ஏன் பயம் சூழவேண்டும்?' சம்பிரதாயத்துக்கு மனம் இந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தாலும், அவள் அஞ்சுவதன் காரணத்தை அவன் மனம் நன்கு தெரிந்து வைத்திருந்தது. 'பருவம் மிக இயலாமை மிக்கது!'

'எல்லாம் இருக்கட்டும்; எதற்காக டீச்சர் நீங்கள் எனக்குக் கடிதம் வரைந்தீர்கள்?' சூழலை முறித்துத் திசை திருப்பினான் கணேசன்.

'இங்களே பாருங்கள்' என்று புத்தகத்துள் திணித்து வைத்திருந்த-தலைமையாசிரியர் அவளிடம் திருப்பிக் கொடுத்த-அந்தக் கடிதத்தை அவனிடம் கொடுத்தாள் இலட்சுமி.

கடிதத்தை மௌனமாகப் படித்துப் பார்த்துவிட்டு, சிரித்துக் கொண்டான் கணேசன். 'இந்த அற்ப விசயத்துக்குத்தானா தலைமையாசிரியர் அப்படித் தலைபோகிற மாதிரி விசாரணை நடத்தினார்?... நீங்களும் தவறு செய்த மாதிரியே எனக்குத் தோன்றுகின்றது.'

'கடிதம் எழுதி உங்களிடம் உதவி கோரியது தவறு என்று நீங்களும் குற்றம் சுமத்துகின்றீர்களா?'

'உதவி கேட்டது தவறு அல்ல; அதற்கு நீங்கள் கையாண்ட வழிதான் தவறு மிக்கது! நேரிடையாகவே என்னிடம் நீங்கள் கேட்டிருக்கலாம்!'

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் மேலும் கீழும் தலையை அழகாக அசைத்துக் கொண்டு இலட்சுமி சொன்னாள், 'இனிமேல் எதையும் உங்களிடம் பெற வேண்டுமானால், நேரிலேயே கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான தைரியம் எனக்கு வந்திருக்கின்றது!'

'எனக்குக்கூட இப்பொழுது நல்ல தைரியம் வந்திருக்கின்றது. நானும் உங்களிடமிருந்து எதையாவது பெற வேண்டியிருந்தால் நேரிலேயே கேட்டுப் பெற்றுக் கொள்ளுகிறேன்!...இப்பொழுது நாம் போகலாமா?'

சாப்பிடாமல் கொள்ளாமல் இந்த மதியப் பொழுதில் எங்கே கிளம்பி விட்டீர்கள்?' என்றாள் இலட்சுமி.

'இரண்டு சந்தர்ப்பங்களில் எனக்குப் பசி எடுப்பதில்லை. உணர்ச்சி வசப்படும் பொழுதும், அப்படி ஏற்பட்ட உணர்ச்சியை அடக்கி மனதில் நிதானத்தை ஏற்படுத்தும் பொழுதும் எனக்குப் பசி எடுப்பதில்லை! மற்றும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு அஜீரணக் கோளாறு தலை நீட்டுவதில்லை!'

'இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அஜீரணக் கோளாறுக்கு, உணர்ச்சி வசமானதோ? அன்றி உணர்ச்சியை அடக்கி நிதானம் அடைந்ததோ காரணம்?'

'இரண்டும்தான்!' - அழுத்தம் கொடுத்துச் சொன்னான் கணேசன்.

அதைப் புரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை இலட்சுமி.

'எனக்கு ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான் பசி எடுப்பதில்லை!'

நான் தெரிந்து கொள்ளலாமா?' என்றான் கணேசன்.

'தாராளமாக! நன்றாக மூக்கு முட்டச் சாப்பிட்ட அடுத்த கணத்தில் எனக்குத் துளியும் பசிப்பதில்லை!'

இலட்சுமியின் சுவையான இந்தப் பதில் கணேசனைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கப் பண்ணிவிட்டது. 'உங்களுக்கு ஆட்சேபனை இல்லையானால் என் கூடவே நீங்கள் வந்து சாப்பிட்டு விட்டுச் செல்லலாம்'

'நீங்கள் இப்பொழுது தந்தசிரிப்பு விருந்தொன்றே போதும். நான் வருகின்றேன்' என்று கூறிவிட்டு, வளைந்து சென்ற அந்தப் பாதைவழியே தன் பயணத்தை மேற்கொண்டான் கணேசன்.

அந்த வளைந்த பாதையில் தான் அவன் உள்ளத்தையும், வாழ்வையும், ஏன் அவன் உயிரையும் வளைத்துச் சிறைப்படுத்திய தாமரைகுமாரி என்ற வற்றாத புனல் இருந்தது!




## பாடுவோர் யார் இனி?

'வெளிமடை, வடிவழகன்'

தமிழைப் பிழிந்தின்பக் கவிதை அமுதெடுத்து
தரணிக்கு ஈந்த நல்லோன் - அத்
தமிழைப் பழிக்கின்ற தரங்கெட்ட கூட்டத்தைத்
தாள்விழ வைக்கும் பொல்லான்—முத்
தமிழே அமுதென்றும் அதுவே உயிரென்றும்
தமிழ்மானம் காத்த வல்லோன் செந்
தமிழின் புகழ்காக்க தமிழின் சுவையூட்ட
தரணியில் நிகரு மில்லான்

எழுகின்ற தமிழ்வீரர் இனத்தோடு அவர்சேர்ந்து
எழுச்சியை மிக வூட்டினார்—புகழ்
விழுகின்ற நிலைமாற்றி உயர்கின்ற நிலைகாண
விழைந்து வெற்றியுமீட்டினார்—இனம்
அழுகின்ற கதைமாற்றி அகமகிழ்ந் தின்புற
அறிவான வழி காட்டினார் - அவர்
பழுக்கின்ற வேளைகல் லடிபட்ட காயென
பாதிவாழ்வே யீட்டினார்

சாவென்ற ஒன்றன்று ஏனங்கு அவர்வாழ்வில்
சந்தியில் வந்த தோடா - அதைச்
"சா"வென்று சாற்றிச் சாவினைத் தான்வென்று
தமிழ்காக்க மறந் தானடா—கூறி
தூவென்று துப்பிப்பின் தூளென்று வீசிதமிழ்
துரோகியை எதிர்ப் பானடா— மீண்டும்
"பாவேந்தன்" தமிழ்கொண்டு பாடியெம்
தமிழ்வாழ

பாடுவார் யார் தானடா?

பாவேந்தர் பாரதிதாசன் நினைவை ஒட்டி இக்கவிதை [illegible] நினைவு நாள் 21-4-65.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. தங்கத்துரை, ஏரூவூர்-5.

கே: உமக்கு யார் மேலும் காதல் கிதல் உண்டா?

ப: யார் மேலோ கிரேமா காதல் கிடையாது. ஆனால் கிதல்......?

ஃ

செல்வி புஷ்பாஞ்சலி, புங்குடுதீவு.

கே: சிறிமாவின் கட்சி தமிழுக்கு சம உரிமை கொடுக்க வேண்டும் என்று ஒருதனிப்பட்ட மசோதா கொண்டுவந்தால் அதை யு. என். பி. எதிர்த்து வாக்களிக்கலாம். அதனை தமிழ் அரசுக்கட்சி எதிர்க்க முடியுமா? அரசாங்கத்தை வீழ்த்த இதைக் கையாளலாமல்லவா?

ப: இது போகாத ஊருக்கு வழி காட்டுவதாகும். தனது அடிப்படைக் கொள்கைக்கு மாருக மசோதா கொண்டு வர சிறிமாவின் கட்சி எப்படி முன்வரமுடியும்?

ஃ

பி. எம். ராமையா, தலவாக்கொல்லை.

கே: பொதுத் தேர்தலில் ஐ. தொ. கா. கூட்டு அரசாங்கத்தை ஆதரித்தது அல்லவா? இப்பொழுது அது தேசிய அரசாங்கத்தை ஆதரிப்பதாக சொல்கிறதே அதன் கொள்கையென்ன?

ப: ஆட்சியிலிருக்கும் கட்சியை ஆதரிப்பதில் பயனுண்டு என்று கருதியிருக்கலாம்.

ஃ

உரிமைவீரன், அச்சுவேலி.

கே: அரியணைப்பிரசங்கத்தின் போது எதிர்க்கட்சித் தலைவி ஏன் பேசா மடந்தையாக இருந்தார்.

ப: அரியணை உரைமீது நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சி சார்பில் இறுதியிற் பேசினுர் எதிர்க்கட்சித் தலைவி. ஜனப்பிரதிநிதிகள் சபையில் அதுதான் அவரது கன்னிப் பேச்சு.

ஃ

எம். நாதன், முள்ளியவளை.

கே: தந்தை செல்வாவுடன் பொன்னம்பலம் ஒப்பந்தம் ஏதும் எழுதியிருக்கிறாரா?

ப: கிடையாது. இப்படி ஒரு புரளியைக் கிளப்பிவிட்டிருக்கின்றனர் காங்கிரஸ் வாலாக்கள்.

ஃ

"சிங்கம்", பருத்தித்துறை.

கே: ஒரு எம். பிக்கு ஒரு மகளிர் பாடசாலை அதிபர் (செல்வி...) மலர்மாலை சூட்டினுர். இதன் மர்மம் என்ன?




ப: மாலை சூட்டுவதில் மர்மம் உண்டா என்பது அவர்கள் இருவருக்கே தெரியும்.

ஃ

ஆர். பி. கண்ணன், புதுவட்டகொடை.

கே: காதலுக்குத் தேவை அன்பா, அழகா, பணமா?

ப: இது காதலிப்போரின் உளப்பாங்கைப் பொறுத்த விஷயம். பொதுவாக உடற் கவர்ச்சிதான் முதலிடம் பெறுகிறது. காதல் கனிந்து விட்டால் உடலழகின் முக்கியத்துவமும் குறைந்து விடுகிறது

ஃ

மு. கந்தையா, வடலியடைப்பு.

கே: தமிழரசுக்கட்சி யு. என். பி. யுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ப-செ. ஒப்பந்தம் மாதிரி இடையில் முறியாதிருக்கும் என நம்ப என்ன காரணம் உண்டு?

ப: அரசாங்கத்தின் அமைப்பும், அதன் கொள்கையும் போக்கும் நல்லெண்ணமும் அந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

ஃ

சு. பாலகிருஷ்ணன், வெள்ளவத்தை.

கே: உலக அரசாங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பொது உலக அரசாங்கம் அமைத்தால் எப்படி இருக்கும்?

ப: அகில உலகமும் ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் வந்துவிடும்.

ஃ

என். முத்துலிங்கம், கந்தளாய்.

கே: மூதூர் இரண்டாவது எம். பி. ஏ. எல். அப்துல் மஜீத் கூறுகிறார் யு. என். பி. யுடன் சேர்ந்ததால் சிறுபான்மையோரின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதென்று, இது உண்மையா.

ப: அவர் கூறுவது ஆருடம். சற்று பொறுத்திருங்கள். அவர் கூற்று தவறு என்பதை உலகறிய நிரூபித்து விடலாம்.

ஃ

எம். பி. கே. ராஜலிங்கம், புதுவட்டகுடை.

கே: சிலர் என்னை அவதூறுகப் பேசுகிறார்களே! நான் என்ன செய்வது.

ப: தன்னைப்பற்றி பிறர் என்ன பேசுகிறார்கள், என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் யோசித்து கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், உங்கள் நேரம் கவலைப்படத்தான் சரியாக இருக்கும். எனவே பிறர் என்னென்ன பேசுகிறார்கள் என்று துருவிக்கொண்டிருக்காமல் உங்களின் சொந்த அலுவல்களை கவனியுங்கள்.

ஃ

மு. இராசேந்திரன், காங்கேசன்துறை,

கே: ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு, கிழக்குமாகாணங்களில் தமிழுக்கு நிர்வாக அந்தஸ்து அளிக்குமா?

ப: ஆருடம் கூறுவதற்கு இது சமயமன்று. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சரிவரக் கவனித்து வரவும்.

ஃ

வே. வை. தெய்வநாயகம், அக்கரைப்பற்று-7.

கே: மாமா! நான் புத்தாண்டு வாழ்த்தொன்று அனுப்பினேன். கிடைத்ததா? அத்துடன் ஹஜ், ஈஸ்டர் முதலியவற்றின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப: பேஷ்! இதுதான் உண்மையான தேசிய ஒற்றுமை! எல்லா மத விழாக்களுக்கும் நீங்கள் ஒருவரே வாழ்த்துக் கூறுகிறீரே!

கே: சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் எப்படி?

ப: எப்படி என்பது இன்னும் தெரியவில்லை. அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டுமென்பது மலையகத் தமிழர்களின் பிரார்த்தனை.

திருவாளர் குயுக்தியார்
மே/பா தினகரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ச. த. செயரட்னம், இணுவில்.

கே: நாம் காரில் பிரயாணம் செய்யாமல் நம் சைக்கிளிலேயே பாராளுமன்றத்தைச் சென்றடைவோம் என்று வீறுப்புப்பேசினுர்களே காங்கிரஸ் காரர்கள். அவர்கள் இப்போது என்ன செய்கிறுர்கள்?

ப: சைக்கிளில் சட்டசபைக்குச் செல்வது புதுமையல்ல. காமன்ஸ் சபை உறுப்பினர்கள் அநேகர் சைக்கிளிலேயே சபைக்குச்செல்கிறார்களாம். வீறுப்பு பேசியவர்கள் அடுத்த தேர்தல்வரை வேறு வேலை தேடித் திரிகிறுர்களாம்.

ஃ

சி. சிவபாதம், ஆலிஎல.

கே: தேசிய அரசாங்கத்தில் தோ. பா ஆசிரியர்களுக்கு விமோசன முண்டா?

ப: தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொண்டால் விமோசன முண்டு.

கே: என் மனைவி அடிக்கடி என்னுடன் வாய் வீச்சுக் காட்டிக்கொண்டு வந்தவள் இந்த மாதத்திலிருந்து அமைதியாக இருக்கிறுள், காரணம் என்ன?

ப: அல்லிராணி ஆட்சி அகன்று விட்டதால்.

ஃ

கே. எம். சிங்காரம், லெசர்வத்தை.

கே: சீன கம்யூனிஸ்ட ஆதரவாளர்களின் நிலை தற்போது எப்படி இருக்கிறது?

ப: கம்யூனிஸ்ட் நாடுகளின் தூதராலயங்களில் கடமையாற்றும் அன்னியர்களின் தொகையைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கையால் அவர்கள் கிலிலடைந்துள்ளனர். சீனத் தூதராலய அதிகாரிகள் விசயத்திலும் அரசாங்கம்கைவைத்துவிட்டதே. இனி படிப்படியாக இத்தூதராலயங்கள் கடையைக் கட்டவேண்டியதுதான்.

## மதுவில் வீழ்ந்தோரே!

—'கல்-கவிவாணர்'—

ஐயா பெரியவரே! அகம் மதுவில் வீழ்ந்தோரே;
கையாலே யாகாத கைங்கரியம் செய்வதிலே
வல்லவரே! பெற்றவளை வாய்கழுவ விற்பவரே!
கல்லணையில் மோதுகிற களிமண் கலயர்களே!
எல்லோரும் எங்கே இருக்கின்றீர்? நாடறிந்த
நல்லவர் போல் அன்று நடித்தீரே; இன்று வெளி
யாரையுமே காணவில்லை! ஐயையோ கைக்கூலிச்
சாராயம் தீர்ந்ததுவோ? சரிசாமம் ஊர்ந்ததுவோ?
அண்டையிலே மாற்றங்கள்; அலைதோடு ஓரிடத்தில்
பெண்டிலுக்கு உத்யோகம்; பிள்ளை(கு) 'அப்பொயின்மன்ட்'
கேட்டுக் குலம் விற்கும் 'கிரிசகெட்ட' செய்கையினுல்
கூட்டணியைத் தூற்றுகிற கோடாரிக் காம்பர்களே!
கள்ளனுக்கு ஊர்காக்கும் கடமையினை யீவதற்கு
உள்ளம் இசையும் ஊனறிவுக் கண்ணுடையீர்!
கோயிற் பொது நிதியில் குடல்கழுவும் கூட்டுறவோய்!
வாயில் நெருப்பிட்டால் குலம் கரியாய்ப் போகாதோ?
வாத்திமையின் பேரை மண்ணுக்கும் 'புண்ணியரே!'
பாத்திரமும் நன்று; பகல் வேடமும் பொருத்தம்!
மாசு கழையும் மாபெரிய ஆசிரியன்
கூசுகிறுன் நீ குடித்துக் குப்பையிலே தூங்குவதால்;
நலங் காக்கும் ஏழையிடம் நாணயம்தான் உண்டப்பா
குலங்காக்கும் அன்னவர்குக்கொள்கையொன்றே தெய்வமப்பா!
பூசல் மணியே! புறக்கதவு வீரர்களே!
தேசபிதா எங்கள் 'செல்வா'வைத் தூற்றுகிறீர்;
புலம்பலுக்குப் பொன்னுடை போர்த்துபவர் நாங்களல்ல;
தலைக்குள் இல்லாரிடத்தில் தம்பட்டம் கொட்டுகிற
நஞ்சிருக்கும் நெஞ்சகமே! நற்சிந் தனையெதற்கு?
கொஞ்சம் சிரட்டையுப்பில் குழியோடிச் சாகீரோ?

### சரியான கேள்வி

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு நாட்டு மக்கள் அதிகாரம் கொடுக்கவில்லை. மக்களின் கருத்தை அறிய முனையாமல் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் ஒன்றை யூ. என். பி. நிறுவியுள்ளது.

—கெனமன்

மக்களைக் கேட்டுக் கொண்டுதான் கொம்யூனிஸ்டுகள் புரட்சி செய்கிறுர்களா? இல்லையே! அப்படியிருக்க இந்த சனநாயகோதயம் கொம்யூனிஸ்டான தோழர் கெனமனுக்கு வருவானேன்? இவ்வாறு ஒரு கொம்யூனிஸ்ட் (சீனு) தோழர் கேட்கிறுர்.

### பின்புற வாயில்

தமிழரசுக் கட்சியை யு. என். பி. பின்புற வாசலால் அழைத்துக் கொண்டது.

—கெனமன்

தமிழரசுக் கட்சியின் ஆதரவைக்கோரி தோழர் கெனமனின் சகாக்கள் (சுதந்திரக்கட்சி—சமசமாஜக்கட்சி கூட்டரசாங்கத்தார்)பல தடவைகளில் தமிழரசுக்கட்சித் தலைவர்



களின் வீட்டுப் பின்புற வாயில்களில் தவமிருந்ததை யார்தான் மறந்திருப்பார்கள்?

### சற்றுப் பொறுங்கள் ஐயா!

கூட்டரசாங்கம் ஏற்பட்ட போது 14 அம்சத்திட்டம் ஒன்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. அதுபோல் செல்வநாயகம்—டட்லி ஒப்பந்தத்தை மக்கள் முன்வைத்து அதன் பின்னர் மக்களின் ஒப்புதலை பொதுத் தேர்தல் மூலம் கேட்க வேண்டும்.

—கெனமன்

கூட்டரசாங்கம் சேர்ந்ததையும் 14 அம்சத்திட்டத்தையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் பொதுத் தேர்தலில் அப்பட்டமாக வெளியாகி விட்டதே! பின் மீண்டும் எதற்காகக் கொக்கரிக்க வேண்டும்? தேசிய அரசாங்கத்தை மக்கள் ஆதரிக்கவில்லையா என்பதை அறிய அடுத்த பொதுத் தேர்தல்வரை இருந்து பொறுமையுடன் எதிர்பாருங்கள்.

### 'எத்த' வேண்டாம்

இன ஒற்றுமையை நாங்கள் வரவேற்கிறோம்......!

—கெனமன்

கொழும்பு பொறலை கொட்டா வீதி 91ம் இலக்க இல்லத்தில் உள்ள கொம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்துக்குச் சொந்தமான லங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளிவரும் கொம்யூனிஸ்ட் சிங்கள தினசரியான 'எத்த' என்ற தமிழ் துவேஷத்தைத் தூண்டும் பத்திரிகையை உடனே நிறுத்தி விட்டு, இன ஒற்றுமையை வரவேற்ருல் நாங்கள் உங்கள் கருத்தை நிச்சயம் ஆமோதிப்போம்.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனாமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நெ. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. பண்டார கிளப்பிய 'பண்டாரம்' மௌன விரதம் தொடருகிறது

# சுற்றி வளைத்துப் பேசினார் கெனமன்

# சீறிப் பாய்ந்தார் திரு. அமிர்தலிங்கம்

அரியணை உரையைத் தொடர்ந்து 9ம் திகதியன்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசன ஒழுங்குகள் பற்றி எதிர்க்கட்சியினர் பெரிய பிரச்சினையை கிளப்பியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பைத் தொடர்ந்து சபாநாயகர் எடுத்த நடவடிக்கையின் பயனாக தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அரசாங்கக் கட்சியின் முதல் வரிசையில் இடம் பிடித்துள்ளார்கள். அமைச்சரல்லாதவர்கள் அரசாங்கக் கட்சியின் முதல் வரிசையில் அமர்ந்திருப்பது—இலங்கைப் பாராளுமன்றத்தின் வரலாற்றில்—இதுவே முதற் தடவையாகும்.

அரசாங்கக் கட்சியின் மெய்க்காப்பாளர்களைப் போன்று திரு. செல்வநாயகம் அவர்களும், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் முன்வரிசையின் இரு முனைகளிலும் அமர்ந்திருக்கிறார்கள். உண்மையிலேயே தேசிய அரசாங்கத்தின் காவலர்கள் இவர்கள் என்று கூறினால் தவறாகாது. இதில் தந்தை செல்வாவின் பங்கு அளவிடற்கரிது என்பது அரசியல் நோக்கர்களின் அசைக்க முடியாத அபிப்பிராயமாகும்.

அரசாங்கக் கட்சியின் இரு முனைகளிலும் இவர்கள் அமர்ந்திருக்க, அரியணை உரைமீதான முதற் திருத்தப் பிரேரணையை கொழும்பு மத்திய தொகுதியின் மூன்றாவது பிரதிநிதி திரு. கெனமன் முன்மொழிந்து விவாதத்தைத் தொடக்கிவைத்தார்.

### இரங்கற் தீர்மானம்

அரியணை உரைமீதான விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வீ. வீரசிங்கம், சு. நடேசபிள்ளை, டேவிட் வணிகசேகரா ஆகியோரின் மறைவையொட்டி ஒரு இரங்கற் தீர்மானத்தை திரு. சி. பீ. டி. சில்வா முன்மொழிந்தார்.

இப்பிரேரணை மீது பாராளுமன்றத்தின் இரு பகுதி உறுப்பினர்களும் உரை நிகழ்த்தினார்கள். தமிழ்ப்பிரதிநிதிகள் மூவர் இப்பிரேரணை மீது தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் பேசினார்கள்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் தமிழிற் பேசினார். தமிழ் காங்கிரசு சார்பில் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் ஆங்கிலத்தில் பேசினார். நியமன உறுப்பினர் திரு. வீ. அண்ணாமலை தமிழிற் பேசினார்.

இதைத் தொடர்ந்து திரு. கெனமன் அரியணை உரை விவாதத்தை 'அரியோம் நம' என்று ஆரம்பித்தார். வழமையான குதிரை மீதேறிய திரு. கெனமன் சவாரி செய்தார். "தேசிய விரோத, முதலாளித்துவ, ஏகாதிபத்திய வாதிகள்" என்ற சொற்களை திரு கெனமன் சரிவசாதாரணமாக அள்ளி வீசினார்.

### யார் யாரை எடுத்தது?

'முந்திய அரசாங்கம் பத்திரிகைகளை எடுக்க முயன்றது, ஆனால் பத்திரிகைகள் இன்றைய அரசாங்கத்தை யெடுத்துவிட்டன' என்ற குறிப்புடனேயே திரு.

## நமது நிருபர்

கெனமனின் பேச்சு ஆரம்பமாகியது. தமிழரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கையும், தமிழரசுத் தலைவர்களின் பேச்சுக்களைக் கொண்ட அண்மைக் கால பத்திரிகை நறுக்குகளும் கெனமனின் பேச்சுக்குத் தீனியாக அமைந்திருந்தன.

'ஐ. தே. கட்சியும், தமிழ் காங்கிரசும் செல்வா—பண்டா உடன்படிக்கையை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பின. இன்று எப்படி தமிழரசு—ஐ. தே. க. உடன்பாட்டை ஆதரிக்க முடியும்' என்ற குண்டை—ஐ. தே. கட்சியின் பழைய வெளியீடுகளையும், த. கா. தலைவரின் பழைய பேச்சுக்களையும் எடுத்துக்காட்டி—'டமார்' என்று போட்டார். அப்பொழுது சபையில் மயான அமைதி நிலவியது.

கடந்த வாரம் தந்தை செல்வா பேசியதாகப் பத்திரிகையொன்றில் வெளியான பேச்சை வைத்துக்கொண்டு சில பிரச்சினைகளை திரு. கெனமன் கிளப்பிய பொழுது, தந்தை செல்வா அவர்கள் அமைதியாக எழுந்து நின்று புன்சிரிப்புடன் திரு. கெனமனின் கருத்தை மறந்து பத்திரிகைச் செய்தி தவறு என்று எடுத்துக் கூறினார்.

பிற்பகல் சரியாக இரண்டு மணி பதினேழு மணித்துளிகளுக்கு பேச்சை ஆரம்பித்த திரு. கெனமன் (தேனீர் இடைவேளையையும் சேர்த்து) ஐந்து மணி இருபது மணித்துளிகளுக்கு முடித்துக்கொண்டார். 'தமிழரசுக்கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்குமிடையில் ஒப்பந்தம் ஏதாவது உண்டா; அப்படியாயின் அவ்வொப்பந்தத்தில் இருப்பது என்ன" என்பதை பகிரங்கமாகத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடனேயே திரு. கெனமன் பேச்சை நிகழ்த்தினார் என்றால் சற்றும் தவறாகாது. சுற்றி வளைத்து, இடையிடையே வகுப்புவாதப் பொடியையும் தூவி திரு. கெனமன் மிகவும் அழகாகப் பேசினார்.

### பண்டார கிளப்பிய பண்டாரம்

திரு. கெனமனின் பேச்சில் பலர் குறுக்கிட்டார்கள். பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் 'எங்கள் பிரச்சினைகளைப் பற்றிக் கவலைப்படாது தொடர்ந்து பேசுங்கள்' என்றார் ஒரு சந்தர்ப்பத்தில். கல்வி அமைச்சர் திரு. இரியக்கொல்ல பல தடவைகள் குறுக்கிட்டார். இடையிடையே எதிர்க்கட்சியினரின் பலமான தாக்குதல்களையும் பெற்றுக்கொண்டார் திரு. இரியக்கொல்ல.

அரச அமைச்சர் திரு. செயவர்த்தினாவுக்கும், அமைச்சர் திரு. பிலிப்புக்குமிடையில் கடந்த பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்குவாதம் ஒன்றை பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து திரு. கெனமன் படித்துக் காட்டிய பொழுது அச்சம்பவம் பலருக்குக் கசப்பாகவே இருந்தது. தேசிய அரசாங்கத்தில் இடம் பெற்றிருப்பவர்களை பிரித்து விடும் தொனியிலும் திரு. கெனமனின் பேச்சு அமைந்திருந்தது.

எதிர்க்கட்சியைச்சேர்ந்தவரான பதுளைப் பிரதிநிதி திரு. பி எச். பண்டார பேசுகையில் "பண்டாரம்" பற்றிய பிரச்சினையொன்று எழுந்தது. நியமன உறுப்பினர் திரு வீ. அண்ணாமலையைச் 'செட்டியார்' என்றார் பதுளைப் பிரதிநிதி. 'நான் செட்டியார் அல்ல' என்றார் திரு. அண்ணாமலை; அப்பொழுது 'நாடார்' என்றார் பதுளைப் பிரதிநிதி, 'நான் நாடாரல்ல பண்டாரம், என்றார் திரு. அண்ணாமலை. ஒரு சந்தர்ப்பத்தில் நல்லூர்ப் பிரதிநிதி திரு நாகநாதன் பதுளைப் பிரதிநிதி திரு. பண்டாரவின் பேச்சில் குறுக்கிட்டு இலஞ்சப் பிரச்சினையைக் கிளப்பி அவரின் பேச்சை மட்டம் தட்ட முற்பட்டார்.

### தினசரியின் திண்டாட்டம்

ஒத்திவைப்புப் பிரேரணை மீது முதலாவதாகப் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. இராசமாணிக்கம் பேசுகையில் அன்றைய 'டெயிலிமிரர்' பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளியான 'இராணுவ பொலீஸ் படையில் மாற்றம்' என்ற செய்தி உண்மையா என்ற பிரச்சினையைக் கிளப்பினார். ஒத்திவைப்புப் பிரேரணையின் இறுதியிற் பேசிய பிரதமர் 'அச்செய்தி தவறு என்றும் தான் காலையில் அச் செய்தியைப் படித்ததும் அதிர்ச்சியடைந்ததாக' கூறினார்.

டெயிலிமிரர் பத்திரிகை இப்படியான செய்திகளைப் பிரசுரிப்பதில், எப்பொழுதுமே முன்னணியில் நிற்கிறது. குறிப்பாக தமிழரசுக் கட்சியைப் பாதிக்கும் தவறான செய்திகளைப் பிரசுரிப்பதில் இப் பத்திரிகைக்கு தனியான ஒரு விருப்பம் உண்டு. 'டெயிலிமிரர்' பத்திரிகையின் பதினைந்தாம் திகதிய இதழின் 9ம் பக்கத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு திருச்செல்வத்தின் பேச்சு ஒன்று வெளியாகியுள்ளது. உடுப்பிட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. திருச்செல்வம் 'வேற்றுமைகளைப் புதைத்துவிட்டு ஐ. தே. கட்சியின்கொடியின் கீழ் ஒன்று படுக' என்று பேசியதாக அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

நமது பருத்தித்துறை நிருபர் திரு. திருச்செல்வம் அப்படிப் பேசவில்லையென்று அறிவித்துள்ளார். அதே நேரத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த பலரும் அதேபோன்று நமக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளார்கள்.

### கல்வி அமைச்சர் முன்னாள் அதிகாரி

இருபதாம் திகதி பாராளுமன்றம் கூடிய பொழுது—வேடிக்கையானது மட்டுமல்ல—வெட்கப்படவேண்டிய சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. முதலை உறுப்பினர் ஒருவரைத் தெரிவதற்காக நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் இரு வாக்குகள் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளுக்கே சரியாக வாக்களிக்கத் தெரியவில்லையென்றால், ஏழைப் பொதுமக்கள் என்ன செய்வார்கள்.

செவ்வாய்க்கிழமையன்று அரியணை உரைமீது நடைபெற்ற விவாதத்தில் பங்குபற்றியவர்கள் பெரும்பாலும் சிங்களத்திலேயே உரை நிகழ்த்தினார்கள். இன்றைய கதாநாயகனாக எதிர்க்கட்சியின் முன்வரிசையில் அமர்ந்திருக்கும் திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா விளங்கினார்.

கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லாவிற்கும் டாக்டர் என். எம். பெரேராவிற்குமிடையில் பல தடவைகள் வாக்குவாதம் ஏற்பட்டது. சபாநாயகர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினார். ஒரு சந்தர்ப்பத்தில் திரு. இரியகொல்லாவைப் பார்த்து 'பொய்யன்' என்றார் டாக்டர் பெரேரா. சபாநாயகர் குறுக்கிட்டு 'அப்படிக் குறிப்பிட முடியாது' என்றார். அப்பொழுது திரு. இரியகொல்ல 'அவர் குழம்பியிருக்கிறார்' என்றார். 'எனக்குத் தெரிந்தவற்றை வெளியில் கொண்டுவந்தால் நீர் இங்கு இருக்கமாட்டீர்' என்றார் பெரேரா. தர்க்கம் வேகமாக முன்னேறியது. அதனால் வாசகர்க்ள் ஒரு செய்தியை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. கல்வி அமைச்சர் திரு. இரியகொல்ல அரசியலில் ஈடுபட முன்னர் ஒரு பொலீஸ் அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார். இது பலர் அறியாத ஒன்று.

### புலியெனப் பாய்ந்தார் அமிர்தலிங்கம்


அரியணை உரைமீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்த திரு. கெனமனின் பேச்சில் வகுப்புவாதப் பொடி தூவப்பட்டதென்றால், திரு ஆர் ஜீ சேனநாயக்காவின் பேச்சில் வகுப்புவாதம் கொப்பளித்துப் பாய்ந்தது. தென்னக திராவிட முன்னேற்றக் கழகம் உலகத் தமிழர்களை ஒன்று திரட்டி ஒரு சமஷ்டி அரசியலை உருவாக்க முனைந்தது என்றும், இதற்கு தமிழரசுக்கட்சி ஆதரவு கொடுத்தது என்றும் கருத்துப்படப் பேசினார்.

திரு. ஆர். ஜீ. சேனநாயக்காவின் பேச்சை ஓரளவு புரிந்துகொண்டதும் புலியெனப் பாய்ந்தார் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம். 'பேடிகளைப்போன்று நமக்குப் புரியாத மொழியைத் துணைகொண்டு நம்மைத் தாக்குகிறார் தம்பதேனியாப் பிரதிநிதி. அவர் பேசுவது அர்த்தமற்றது துணிவிருந்தால் புரியும் மொழியில் பேசட்டும், நான் சரியான பதில் கொடுக்கிறேன்' என்று சவால் விடுக்கும் தோறணையில் பேசினார் திரு. அமிர்தலிங்கம்.

"இதற்காகத்தானே உங்களைச் சிங்களம் படியுங்கள் என்கிறேன்" என்றார்

(9-ம் பக்கம் பார்க்க)

இது புதிது!
இது முதல்தரமானது!
ஹன்சயா
கல்வனேஸ்ட் தகர வாளிகள்

★ இலங்கையில் செய்யப்பட்டது
★ பாவனைக்கு சிறந்தது
★ சிக்கனமானது

'அன்னம்' அடையாள கல்வனேஸ்ட் வாளிகளையே கேளுங்கள்.
சென்ற் அந்தனிஸ் இண்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை விஸ்தரிக்கப்படும்

## தமிழரசாருக்கு இரு பதவிகள்

"யு. என். பி. தமிழரசு கூட்டரசாங்கத்தின் மந்திரிகளின் தொகை அண்மையில் 20 வரை உயர்த்தப்படுமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிகிறது." என்று "எத்த" பத்திரிகை 19-4-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தி கூறுவதாவது:—

"தங்களுக்கு ஒரு மந்திரிப் பதவி போதாதென்றும் இன்னும் இரு மந்திரிப்பதவிகள் கிடைக்க வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சி கூறுகிறது.

தமிழரசுக் கட்சிக்குப் பதவி கொடுக்கப்பட்டிருப்பதால், தனக்கும் ஒரு பதவி கொடுக்க வேண்டுமென்றும் கொடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் தனது சகாக்களின் முகத்தில் விழிக்க முடியாது போய்விடுமென்றும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார்.

அவ்வாறு பதவிகள் அளிக்கப்பட்டால், பதவி கிடைக்காமலிருக்கக்கூடிய கோஷ்டி திரு. தொண்டமான் கோஷ்டிதான். அதற்குப் பதிலாக அவர்களுக்கு இரு நியமன எம். பி. பதவி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் திரு. தொண்டமானுக்கு அல்லது திரு. அன்னமலைக்கு புதிதாக நிறுவப்படவிருக்கும் புதிய அமைச்சொன்றில் உதவி மந்திரி பதவி கிடைக்கக் கூடும்.

மந்திரிகளின் எண்ணிக்கையில் இன்னும் மூன்று கூடுதல் மந்திரிகள், உதவி மந்திரிகள், சபாநாயகர், உதவி சபாநாயகர், கமிட்டித் தலைவர் ஆகியோர்களின் தொகை அரசாங்க எம். பி. களின் தொகையிற் சரிபாதியாக இருக்கும்."

## துரைசிங்கம் தகராறு

"கல்வி இலாகாவில் ஆசிரியர் இடமாற்றக் குழுவின் தலைவர் திரு. வி. துரைசிங்கத்தை இடமாற்றம் செய்வதற்குக் கல்வி மந்திரி திரு. இரியகொல்ல செய்த முடிவால் அரசாங்கத்துள் புகைச்சல் ஏற்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பாகத் திரு. செல்வநாயகம் இதுபற்றி தனது எதிர்ப்பைத் திரு. டட்லி சேனநாயகாவுக்கு அறிவித்துள்ளார். உள் நாட்டு மந்திரி திரு. திருச்செல்வம்? தகநாயக்காவும் இதுபற்றி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், திரு. துரைசிங்கத்தை இடமாற்றம் செய்வதென்ற முடிவை மாற்றும்படி பிரதம மந்திரி கல்வி மந்திரிக்கு அறிவித்துள்ளாரெனினும், அவர் அந்த முடிவை மாற்றுவதாகத் தெரியவில்லை."

—எத்த (15-4-1965)

## இரு மந்திரிப் பதவிகளை ஏற்க தமிழரசார் முடிவு

'தமிழரசுக்கட்சி எம். பி. களுக்கு மேலும் இரு மந்திரி பதவிகள் கேட்பதென்று சென்றவாரக் கடைசியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் முடிவுசெய்ததாக அறியப்படுகிறது' என்று எதிர்க்கட்சியை ஆதரிக்கும் 'ஜனசத்திய' என்னும் வார இதழ் 18-4-65ந் திகதி ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகள் சம்பந்தமாக அரியணை உரையில் தெளிவாகக் குறிப்பிடப்படாது பற்றி இக் கூட்டத்தில் தலைவர்கள்மீது குறைகூறப்பட்டது. விசயங்களை விளக்கிக் கூறிய திரு. செல்வநாயகம் திரு. டட்லிசேனநாயக்காவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் போன்றதென்றும் ஆயினும் அதனை அமுல் நடத்த சிறிது காலதாமதமாகுமாதலின் அதுவரை பொறுத்திருக்கும்படியும் கூறினர்.

யு. என். பியுடன் ஒப்பந்தம் செய்து அரசாங்கத்தில் சேர்ந்ததைக் குறைகூறிய வாலிபமுன்னணியினர்கள் கடைசியில் தமிழரசுக்கட்சிக்குக் கொடுக்கப்பட்ட மந்திரிகளின் எண்ணிக்கை போதாதென்று கூறினர்.

இப்பொழுது மந்திரிபதவியைஏற்றுக்கொண்டாகிவிட்டது எனவே கட்சி மந்திரிகளின் எண்ணிக்கையாவது கூட்டும்படி அவர்கள் கேட்டுக்கொண்டனர். இதற்கேற்ப உடனே இன்னும் இரு மந்திரிபதவிகள் தமிழரசுக்கட்சி எம். பி களுக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

ஆசிரியரின் குறிப்பு:- 'பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் என்றுமே அமுல் நடத்தப்படவில்லை. அதனை திரு. பண்டாரநாயக்காவே கைவிட்டுவிட்டார். அதற்கு எதிராக அன்று பௌத்த மகாசங்கம் எழுந்து நின்றது. ஐ. தே. கட்சியும் அதனை எதிர்த்து பெரிய இயக்கமொன்றினை நடத்தியது.'

### சிங்களத்தில் மட்டும்

'பாராளுமன்றத்தில் எல்லாவித நடவடிக்கைகளும் இனிமேல் சிங்களத்தில் மட்டுமே செய்வதென்று எதிர்க்கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

இன்றுள்ள நிலைமையில் புதிய அரசாங்கத்திற்குச் சிங்களத்தில் மட்டும் கடமையாற்ற முடியாது. சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து பெரிய இயக்கங்களை நடத்திய தமிழரசுவாதிகளும் அரசாங்கத்தில் சேர்ந்திருப்பதால் முந்திய மொழிக்கொள்கையை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சிங்கள மொழி உபயோகத்தைத் தமிழ் எம். பிகள் எதிர்க்கக்கூடும் தமிழ் மொழி உபயோகத்தைச் சிங்கள எம். பிகள் எதிர்க்கக் கூடும், எனவே இரு சாராரின் வசதியையும் கருதி ஆங்கிலத்தை உபயோகிப்பதற்கு இடம் ஏற்படும்.'

—ஜனசத்திய (18-4-65.)

## சிங்கள இதழ்களில்...

# தமிழ் எம். பி. கள் தொகை மேலும் அதிகரிக்குமாம்

"நாட்டின் அமைதிக்கு ஆபத்து" என்ற தலைப்பின் கீழ் 'ஜனசத்திய'வார இதழ் 18-4-65ந் திகதிஎழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

'ஐ. தே. கட்சி தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றுவதற்காக அவர்களுடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்திருப்பதும், இலங்கையிலுள்ள இந்தியரைத் திருப்திபடுத்துவதற்காக மலைநாட்டில் 10 தொகுதிகள் இரட்டை உறுப்பினர் தொகுதிகளாகச் செய்வதற்குக் கொடுத்துள்ள வாக்குறுதியும் இந்நாட்டு மக்களின் வாழ்வுக்கும், பொதுவாக நாட்டின் அமைதிக்கும் ஆபத்தாகியுள்ளது.

தமிழரசுவாதிகளின் கோரிக்கைகளை வழங்குவதால் நாடு தமிழ்—சிங்களமென இரு கூறுகப் பிரிந்துவிடுவது திண்ணம். தமிழ் ஒரு மேலதிக அரசாங்க மொழியாகும்போது வட—கிழக்கு மாகாணங்களில் மட்டுமின்றி, ஊவா, மத்திய சப்ரகமுவா மாகாணங்களில் வசிக்கும் தமிழர்களுக்காக அந்தப் பிரதேசங்களிலும் தமிழ் அரசாங்கமொழியாகுமென்பதைப் புரிந்துகொள்வது கடினமன்று. இந்த நிலைமை ஏற்பட்டால் சிங்களவர்களுக்கென எத்தனை மாகாணங்கள் எஞ்சி நிற்கும்? அந்த மாகாணங்களிலுமுள்ள சிறு நகரங்களில் தமிழ் உபயோகம் ஏற்பட்டால் நிலைமை படுமோசமாகிவிடும்.

இந்தியர்களின் கோரிக்கைகளுக்கிணங்க இந்நாட்டுப் பிரசாவுரிமையைப் பெறும் அவர்களின் பெயர்கள் பொதுவாக்காளர் இடாப்பில் சேர்க்கப்பட்டால், தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துவிடும். தற்போது பொதுவாக 25 தமிழ் எம். பிகள் உள்ளனர். மலையகத்தில் இரட்டை உறுப்பினர் தொகுதிகள் ஏற்பட்டால் இன்னும் 10 தமிழ் எம். பிகள் அதிகப்படியாகத் தெரிவு செய்யப்படுவர். அத்தோடு சுமார் 15 தொகுதிகளில் எம். பிகள் யாராக இருக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கும் வல்லமை இந்திய வாக்காளர்களுக்குக் கிடைக்கும். சனத்தொகையின்படி பார்க்கும்போது இது எவ்வளவு பெரிய அநீதி என்பது விளங்கும்.

இந்நாட்டுச் சிறுபான்மையோருக்குரிய மனித உரிமைகளை வழங்காதிருப்பதை நாம் என்றுமே அனுமதிக்க மாட்டோம். யு. என். பியைவிட பெரிய கட்சியாக இருந்தாலும் அவ்வாறு செய்வதை நாம் அனுமதிக்கமாட்டோம். ஆனால் பெரும்பான்மையோருக்குரிய உரிமைகளைப் பறித்து சிறுபான்மையோருக்கு வழங்கும் நயவஞ்சக சூழ்ச்சித் திட்டத்தை நாம் எதிர்ப்போம்.

தேசிய ஒற்றுமை என்னும் சொல்லில் மறைந்து நின்று பெரும்பான்மையோரின் உரிமைகளைப் பிடுங்கி சிறுபான்மையோருக்குக் கொடுப்பதற்கு யு. என். பி—தமிழரசு அரசாங்கம் செய்யும்முயற்சி வகுப்புவாதத்தைத் கிளறிவிடும் முயற்சியே யாகும்.'

## வர்த்தகம் கைமாறும்?

"தேசியமயமாக்கப்பட்ட வர்த்தகம் மீண்டும் போராகாரர்களுக்கும் இலங்கை வியாபாரிகளுக்கும் கையளிக்கப்படுமென்பது நிச்சயமாகிவிட்டது. அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியாவிட்டால், சாமான் இறக்குமதியைத் தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொடுப்பதாக வர்த்தக மந்திரி டாக்டர் பிரிஸ் பெரிய வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் திரு. ஒலிவர் பெரேராவுக்கு வாக்களித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் சாமான் இறக்குமதி செய்வது விரைவில் அடியோடு கைவிடப்படுமென்றும் கூ. மொ. விற்பனவு ஸ்தாபனத்தின் கடைகளை மூடி மொத்த, சில்லறை வியாபாரத்தைக் கறுப்புச் சந்தைக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுமென்றும் விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்."

—எத்த (19-4-65)

## தமிழரசு பலம் கூடுகிறது

"தொழில் இலாகாவின் முக்கிய அலுவலகங்களில் தமிழரசு, கத்தோலிக்க நடவடிக்கையாளரின் பலம் மீண்டும் உக்கிரமாக எழுந்துள்ளது. இந்த இலாகாவில் நிர்வாகப்பகுதியில் முக்கிய நான்கு பதவிகள் தமிழரசுவாதிகள் கையில் இருக்கின்றன. ஒரு முக்கிய பதவியைக் "கத்தோலிக்க நடவடிக்கை"யைச் சேர்ந்த ஒருவர் வகிக்கிறார்.

உயர்தர அதிகாரிகள் சிங்கள பௌத்த ஊழியர்களுக்கு இடைஞ்சல் செய்கின்றனர். சிங்களத்தில் எழுதப்பட்ட உத்தியோகக் கடிதங்களை நிராகரிக்கின்றனர்.

இத் திணைக்களத்தில் சிப்பந்திகளை நியமிக்கும் பொறுப்பும், வெளி நாட்டு உபகாரச் சம்பளம் பற்றிய பொறுப்பும் இரு தமிழரசு அதிகாரிகள் வசமே விடப்பட்டுள்ளன. சிங்களம் படிக்க விரும்பும் தமிழ் ஊழியர்களைச் சிங்களம் படிக்க வேண்டாமென இந்த அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். எனவே, ஏற்கனவே சிங்களம்படிப்பதை நிறுத்திவிட்டனர். இனிமேல் தங்களுக்குச் சிங்களம் தேவையில்லை என அவர்கள் கூறுகின்றனர்."

—எத்த (19-4-66)


## உங்களுக்கு வேண்டிய காரணங்கள் இருக்கின்றதா என்று பாருங்கள்!

எந்தவகையான காரணத்தாலும் மனவேதனை, தொல்லை, துக்கம், துன்பம் இருப்பின், அந்த ரகசியப் பிரச்சினை வெளியிடப்படாது தீர்த்துக் கொடுக்கப்படும். மனைவி—கணவன் பேதம், வழக்கு விவகாரம், பகைவர் தொல்லை, நிந்தனை, பழி, விரும்பியவர்களை அடைதல், தேவையற்றவர்களை விலக்கிவிடல், காதல், அன்பை நிலை நிறுத்தல், பிழை செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்த வகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, வயது கூடி விவாகமின்றி, விவாக சம்பந்தங்கள் முறிந்து போகிறவர்களுக்கு சந்தோஷமான திருமணம் நடைபெற, பட்டம், பதவி, உத்தியோகம், வியாபாரம் அபிவிருத்தியாவதற்கு, ரகசிய நோய்கள், பெண்களின் உடல் இளைத்தல், வேறு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு சிக்கலையும் குப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மைவெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரிகத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும். உண்மையாக யாவற்றையும் எழுதுங்கள் அல்லது நேரடியாக வந்து கூறுங்கள். ஞாயிறு, திங்கள் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனி வரை 105, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானையிலும் சந்திக்க முடியும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரிக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா,

அருத எண்ணெய் மருந்துச்சாலை,

கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினை மயமான வாழ்க்கை

செல்வி எழுதும்

## 2. ஆணும் பெண்ணும்

நமது மனமும் அம்மனத்திலே துளிர்விடும் ஆசைகளுமே பலதரப்பட்ட பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன என்பதை அறிந்தோம். பணம் படைத்தவனுனாலும், ஏழையானாலும், ஆணானாலும் பெண்ணானாலும் அனைவரையும் ஏதாவது ஒரு பிரச்சினை வாட்டி வதைப்பதையும் உணர்ந்தோம். இப்பிரச்சினைகள் குடும்பப் பெண்களை அதிகமாக வாட்டி வதைக்கின்றன என்று கொள்ளப்படுகிறது. ஆனால் பொதுவாக இக்கருத்து சரியானதல்ல.

இன்றுள்ள நமது சமுதாய அமைப்பின்படி பிரச்சினைகள் ஆண்களையே வாட்டி வதைக்கின்றன எனக்கூறலாம்.

நமது நாடுகளில் குடும்பத்தலைவனே குடும்பத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பான பணியினைச் சுமக்கிறான். அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருளாதாரத்தை ஈட்டும் பொறுப்பு அவன் மேல் சுமத்தப்படுகிறது எங்காவது குடும்பப் பெண்கள் தொழில் செய்து சம்பாதிக்கலாம். ஆனாலும் அதனை சீர்தூக்கிப் பார்ப்பதற்கில்லை. ஏனெனில், நமது நாடுகளில் பொருளீட்டும் பெண்களின் தொகை வெகு குறைவு.

### யாருக்கு அதிகம் கவலை?

குடும்பத்தைச் சீராக்கும் பொறுப்பை மேற்கொள்ளும் ஆண்மகன்தான் தனது குடும்பத்தை நடாத்த பொருளீட்டும் முயற்சியில் அதிக கவலையை அடைகிறான். அவனுடைய வருவாயை அனுசரித்தே குடும்பச் செலவுகளைச் செய்ய வேண்டிய பக்குவத்தை பெண்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

கணவனின் வருவாயை அனுசரித்து நடக்க முற்படும் பெண்தான் முதன் முதலில் பிரச்சினைகளை அனுகுகிறாள். குடும்பத்திலீடுபடுதற்கு முன்னரே அவள் மாணவப் பருவத்தில், பள்ளிக் கூடத்தில் ஏதாவது பிரச்சினைகளில் உள்ளத்தை அலட்டிக் கொண்டிருக்கலாம். எனினும் உண்மையான பிரச்சினைகள்தோன்றுவது குடும்பத்துள் புகுந்துவிட்ட பின்னர்தான் எனலாம்.

### கற்பனை சிதைந்தால்......!

கலியாணமாகுமுன், பருவமடைந்த ஒரு மங்கையின் உள்ளத்தில், பற்பல ஆசைகள் துளிர் விட்டு, அவள் கற்பனைகள் சிறகடித்துப் பறப்பதுண்டு. தனக்கு அமையப்போகும் வாழ்க்கை வாய்க்கப்போகும் கணவன் முதலியவற்றிலே தன் கருத்துக்களைச் செலுத்தி கனவு காணுகிறாள். அவள் காணும கற்பனைக் கனவுகளுக்குசற்று ஏறுமாறாக அவளுடைய வாழ்க்கை அமைந்து விடுமானால் அவளுக்கு வாழ்க்கை ஒரு பிரச்சினையாகிவிடும்.

தனது கற்பனைகள் பொடிப் பொடியாகும் பெண்மனம் சற்று வலிவு குன்றியதாக இருக்குமேயானால், இந்த நிலையில் குடும்பமே இப்பெண்மையினால் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும் உலகமே தன்னை வெறுப்பதாக அவள் கற்பனை செய்து கொள்ளுகிறாள்.

குடும்பத்தில் தலைதூக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் பெண்களின் மனதில் இயற்கையாகத் தோன்றும் சந்தேகமே வித்தாக அமைந்து விடுகிறது இதனால் கணவன் அவளுக்கு ஒரு விளங்காத புதிராக ஆகிவிடுகிறான்.

தனது உற்றார் உறவினர் உட்பட கணவனுடைய இனத்தவர்கள்—ஏன், தனது குழந்தைகளே அவளுக்கு பிரச்சினைகளை உருவாக்கும் பூதங்களாகப்படுவார்கள்.

குடும்பங்களுக்குள் சந்தேகம் தோன்றுவது ஒரு அபாய அறிவிப்பாகும். ஆகவே சந்தேகத்தைப் போக்கடிக்கும் தந்திரோபாயத்தை அறிந்து கொள்ள வேண்டியது குடும்பப் பெண்களின் கடமையாகும்.

**அடுத்த வாரம் குடும்பத்தில் புகும் சந்தேகம்**

# மங்கையர் சங்கம்

## இரசிகமணி

அழகு என்ற சொல்லுக்கே இலக்கணமாக அமைந்தவள் அவள். எலுமிச்சம் பழ நிறத்தினள். கொடி உடல். அங்கங்களிலெல்லாம் பருவத்தின் படைப்பு. அப்பப்பா! அவளை வர்ணிக்க எனக்கு வார்த்தைகள் எதுவுமே தட்டுப்படுவதாயில்லை.

அவள் அழகு உருவத்துக்கு மென்மேலும் அழகூட்டுவதாக அமைந்திருந்தது, சூழ்ந்திருந்த இயற்கை வளம். தெள்ளிய நீரைச் சுரந்து தரும் அருவி. நிர்மலமான ஆகாயம், மதுர மரங்கள் கொடுக்கும் நிழல்—அத்தனையும் அவளுடைய பேரழகு கண்டு பெருமிதத்துடன் பூரித்துக் காணப்படுகின்றன.

ஓடிச் செல்லும் அருவியிலே அவளுடைய கால்களை விட்ட வண்ணம் ஓடை ஓரத்தில் இருக்கிறாள் அவள். குளித்து முடித்து விட்டாள். எனினும் அருவி நீரின் தண்மையை விட்டு அகல அவ அவளால் முடியவில்லைப் போலும். அப்படியே மெய் மறந்து நீர்தரும் சுகத்தை அனுபவித்துக் கொண்டே இருக்கிறாள்.

**நிமிடக் கதை**

ஈரமான ஆடை அவள் மேனியைத் தழுவி ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கிறது வயது பின்னிய வனப்புகளை அந்த ஈர ஆடையால் மறைத்து விட முடியுமா?

அவள் மனதிலே ஏதோ ஒருவகை இன்பக் கிளுகிளுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அதைத்தான் அவளுடைய இதழ்க் கோடியில் அரும்பியும் அரும்பாத நிலையில் நின்று தவழும் புன்னை காட்டுகிறது அதுவும் அந்த அழகியின் பருவம் படுத்தும பாடுதான்.

நானோ ஒரு இரசிகன். இரசிகனான என் முன்னே அழகு குவிந்திருந்தால் அதை அள்ளிப் பருகாதிருக்க முடியுமா? அருவி ஓரத்தில் அவள் இருந்தாள். அவளையே பார்த்துக் கொண்டு நான் எவ்வளவு நேரம்தான் அப்படியே அவளைப் பார்த்தபடி இருந்தேனோ தெரியாது. நண்பன் ஆனந்தன் வந்து என் தோள்களை உலுப்பிய போதுதான் இந்த உலகத்துக்கு வந்தேன். "என்னடா என்னை வெளியே உட்கார வைத்துவிட்டு ஓவியர் குமாரை பார்த்துவிட்டு வருவதாக உள்ளே வந்து ஒரு மணி நேரமாக குமார் வரைந்த ஓவியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்து விட்டாயே? ஏனப்பா இரசிகமணி! எழுந்து வா—சினிமாவுக்கு நேரமாகுது. சித்திரத்தைப் பார்த்தே இப்படியிருந்தாயானால், நிஜமாகவே பார்த்தாயானால்...!" என்று ஆனந்தன் கூறிமுடிக்க முன்னமே அவன் வாயைப் பொத்தினேன்.

—விஜயா

# மக்கள் குரல்

## தலைவர்களுக்கு ஓர் வேண்டுகோள்

தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைவதற்கு ஒத்துழைத்ததை தமிழ் பேசும் மக்களில் கணிசமான தொகையினர் வரவேற்கின்றனர். இக்கூட்டு முயற்சியை எதிர்ப்பவர்கள், தமிழரசுக் கட்சியை எப்பொழுதும் எதிர்ப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களேயன்றி வேறு எவரும் அல்ல. கட்சியில் பற்றுக் கொண்டுள்ள எவரும் தந்தை செல்வாவின் முடிவை என்றும் ஏற்றே நடப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழரசுக் கட்சிக்கும்—யூ. என். பிக்கும் இடையில் தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பொறுத்தமட்டில், ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருப்பதை அனைவரும் அறிவர். பதவிக்காகவோ, சுயநலத்துக்காகவோ தமிழரசுக் கட்சி யூ. என். பி. யை ஆதரிக்கவில்லை என்பதும், கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர் பதவிகளை ஏற்காத நிலையிலிருந்து தெட்டெனத் தெளிவாகியிருக்கிறது.

இன்றுள்ள நிலையில் தமிழ் பேசும் மக்களை சேர்த்துக் கொள்ளாமல் எந்த அரசும் நிலைபெற முடியாது என்பதும், தமிழ் பேசும் மக்களை விரோதித்துக்கொண்டு சுபீட்சம் தேட முடியாதென்பதும் புலப்பட்டு விட்டது.

தமிழரசுக்கும்—யூ. என். பிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மையமாகக் கொண்டு எதிர்க் கட்சிகள் நாட்டிலே மீண்டும் ஒரு பிரளயத்தை உண்டாக்கிவிடலாமா என்று அங்கலாய்த்துக் கொண்டுள்ளன. சிங்கள மக்களிடையே, 'தமிழருக்கு சிங்களவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது யூ. என். பி.' என்று பிரசாரம் செய்யத் தலைப்பட்டு விட்டனர். இது நீடிக்குமானால் துவேசத்தில் கொந்தளிக்கும் சிங்கள மக்களிடையே குரூரமான தன்மைகளும் தலைகாட்ட நேரிடும். தேசிய அரசாங்கமும் ஆட்டம் காண நேரிடும்.

இந்த நேரத்தில் சில தமிழ்த் தலைவர்கள் தாங்கள் வெளியிடும் கருத்துக்களை வெகு கவனமாக வெளியிட வேண்டியது கடமையாகிறது. 'ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம். இவ்வொப்பந்தத்தை மீறினால் ஆட்சியையே கவிழ்ப்போம்' என்றவாறெல்லாம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தற்போது சூழுரைக்கவேண்டிய அவசியமில்லை. இதனால் யூ. என். பி. கட்சியினருக்கு இரு பகுதியிலும் இடிபட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுகிறது. காலக் கிரமத்தில் காரியம் எதையும் செய்யாமல், காலம் கடத்திவிடக்கூடிய நிலையினையும் அவர்கள் கைக்கொள்ளலாம். அவர்களுடைய கருத்துக்களைச் சிதைத்துச் சின்னா பின்னப்படுத்துவதாக நமது தலைவர்கள் பேசுவதை உடனடியாக நிறுத்திக்கொண்டு, நமது இனத்துக்கான சேவைகளை சந்தர்ப்பத்துக்கேற்றபடி செய்வதே சாலச் சிறந்தது.

எஸ். சிறீதரன்
தெல்லிப்பழை.

# கோதையரின் கூந்தல்

**'கமல மலர்'**

சிரசின் பாதுகாப்புக்காக வளரும் முடி பெண்களுக்கும் ஆண்களுக்கும் அழகைக் கொடுக்கிறது. பெண்களும் ஆண்களும் சிகையை அலங்கரிப்பதற்காக ஆன்றுடம் செலவிடும் பொழுதே மிகவும் அதிகம். தத்தமது தலை முடிகளை அலங்கரிப்பதற்காக ஒவ்வொருவரும் செலவிடும் காலத்தையும் பொருளையும் கருத்தில் கொண்டாலே, ஒவ்வொருவரும் தத்தமது சிகையில் வைத்துள்ள சிரத்தையை அறியலாம்.

சிகை அலங்காரம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கும் பணியாகிவிட்டது. எண்ணெய் தேய்த்து தலைமுடியை அழகாக வாரிவிடுவதை சகலரும் கைக்கொள்ளுகின்றனர். சடாமுடி தரித்த சந்நியாசிகளும் தங்கள் தலைமுடியை ஓரளவு அலங்கரித்துக் கொள்ளுவதுண்டு சிகை அலங்காரம் எவ்வகையினருக்கும் பொதுவானதால் சிகை பாதுகாக்கப்பட வேண்டியதும் இன்றியமையாததாகிறது.

### கருங் கூந்தல்

நமது நாட்டில் வாழும் மக்களுக்கு பொதுவாக கூந்தல் கருமையாகவே வளருகிறது. கருங்கூந்தலையே நம்மவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். சிலருடையஉடற் கூறுகளில் ஏற்படும் சில பல மாற்றங்களினால் தலையில் உள்ள 'ஹோமேன்' என்ற உபபொருட்களின் இயக்கம் பாதிக்கப்படுகின்றது. இதனால் செம்பட்டையாக மயிர் தென்படுகிறது. தலையில் சூடு அதிகமாகக்கிரகிக்கப்படுவதனால் தலைமுடி நரைத்தும் விடுவதுண்டு.

### நரை

தலைமுடி நரைத்து வெண்மை அடைவதற்கு சூடு மட்டும் காரணமாகா. சிலருக்கு நரைவிழுவது குடும்பப்பழக்கமாகும். தேன் போன்ற பொருட்கள் மயிர்க்கால்களுக்குள் புகுந்து விடநேர்ந்தாலும் நரை ஏற்பட்டு விடுகிறது.

இளமையில் நரை விழுந்தால் அதனால் துன்பமடையும் இளைஞர்களைப் பார்க்கிறோம். இளம் பெண்களின் கூந்தலில் நரைவிழுந்து விட்டால் புதுப்பிடவையில் பொத்தல் விழுந்துவிட்டது மாதிரித்தான் பலர் கருதுவார்கள். ஆகவே தங்கள் கூந்தலில் நரைவிழுந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு பெண்ணின் கடமையுமாகும்.

### முடி உதிர்தல்

உஷ்ணம் சம்பந்தமான சிரசு நோய்களினாலும் தலைமுடி உதிர்ந்து தலைவழுக்கையாகிவிடுகிறது. அடர்த்தியான நெடிய கேசத்தை விரும்பும் அழகு மங்கையர்க்கு உதிரும் ஒவ்வொரு மயிரும் பொன்னெனக் கொள்ளப்படும்.

தலைக்கு கண்ட கண்ட தைலங்களைத்தேய்த்தலினால் நரை விழுவதுடன் மயிர் உதிர்வதுமுண்டு. வியாபாரத்துக்காக விளம்பரப்படுத்தப்படும்எல்லாத்தைல வகைகளும் கேசத்தை வளர்க்கவோ, நரையைப் போக்கவோ செய்யா. இவற்றையிட்டு சகல பெண்களும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

### சுத்தம்

'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்', என்று கூறப்படுகிறது. மனிதன் சகல விதமான உணர்ச்சிகளையும் கிரகித்து அவனை இயக்கிவைப்பது மூளை, அம்மூளை சிரசிலே இருப்பதனால் சிரசே பிரதா

(12-ம் பக்கம் பார்க்க)

**மழலைகளின் மரணத்தை தடுக்க முடியுமா?**

அடுத்த வாரம் இடம் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

## பேராசிரியை திருவாட்டி தே. தியாகராசன் எம். ஏ.

தித்திக்கும் தீந்தமிழிற் றேன் கவிதை திரட்டித் தந்த ஒப்பரிய புலவர் உள்ளங்கவர் ஓவியம்படைக்கும் பாவேந்தர் பாரதிதாசனுவார். தமிழை உயிர் என்ற நகைச் சுவை வேந்தனும் உவமைக்கு ஒரு விளக்காய் அழகின் சிரிப்பாலேயே அன்பரைத் தேடுபவராய் எண்ணியதை மறைக்காது இயம்புந் துணிவுடையராய்த் தற்காலக் கவிஞர்கட்கு ஆசானுய், நாடக, படக்காட்சிக் கவிஞர்கள், ஆசிரியர்கட்கு வழிகாட்டியாய் அமைந்த பெருமை இவரையே சாரும். பிறவிக் கவிஞரிவர்.

மனித சொற்களால் அடையமுடிந்த மகிழ்வூட்ட வல்லதும் செம்மை நிறைந்ததுமான கூற்றே கவிதையாகும் என்பது மாத்யூ ஆர்னல்டு என்பார் கவிதைக்கு வகுத்த இலக்கணமாகும். புரட்சிக் கவிஞர் மானிடச் சொற்களால் அடைய முடிந்த மகிழ்வூட்ட வல்ல கவிதையைப் படைத்தற்குச் சான்ருக,

''வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப் போல்
துள்ளியே அலைகள் மேன் மேல்
கரை மிசைச் சுழன்று வீழும்''

என்பதைக் கொள்வோம்.

செம்மை நிறைந்த கூற்றிற்குச் சான்ருகக் ''கைம்மைத்துயர்'' என்ற கவிதையில்,

''பெண்ணுக்கொரு நீதி
கண்டீர்
பேதமெனும் மதுவை
யுண்டீர்
கன்னி யொன்றைப்
பழுது செய்தால்
கான்று மிழாதோ
கான்று மிழாதோ புவிதான்
[பழியாதோ'' என்ருர்.

''உள்ளத்துள்ளது
கவிதை இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது
கவிதை''

என்ற கவிமணி கூற்றுக்கேற்ப,

''வெண்ணிலாவும்
வானும் போலே
வீரனும் கூர் வாளும் போலே
வண்ணப் பூவும்
மணமும் போலே
மகரயாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும்போலே எனது
கன்னல் தமிழும்
நானும் அல்லவோ''

என்று பாடினுர்.

### புதிய காதல்

இசையமுது படைத்து உன்ன உன்னத் தெவிட்டாது வழங்கினுர். ஐந்து வகை நிலமாகப் பிரித்து அந்த அடிப்படையில் தலைவர் தலைவியர் காதல் செய்ததைச் சங்க நூல்கள் கூறும். பின்னர் வந்த சைவ, வைணவ இலக்கியங்கள் சமய அடிப்படையில் காதலைக் கூறுவன. சிற்றிலக்கியங்கள் கூறிய பொருத்தமான, பொருத்தமற்ற காதல் முறைகட்கோ கணக்கில்லை. இவரோ புதுமையாகப் புரட்சியாகத் தொழிலாளி காதலைச் சிறப்பாகப் பாடினுர்.

காலம் மாறும்போது, மக்கள் வாழ்க்கைமுறை மாறும்போது தொழிலாளியுகத்தில் அவனே காதற் றலைவனுகின்ருன். அவ்வாறே பூக்காரி காதற் றலைவியாகி, அவள் பூமட்டுமா விற்கிருள்? காசு தருவோர்க்குப் பூத்தருதல் போலத் தன் காதலன் விரும்பிக் கேட்டவிடையுமல்லவா விடுக்கிருள்! வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், உழவன், ஆலைத் தொழிலாளி கூடைமுடைவோன் இவர்களும், உழத்தி, சுண்ணம்பிடிக்கும் பெண்கள் முதலியவர்களும் கொண்ட உள்ளப் பாங்கு புதுமையாக விளங்குகிறது.

உவமையிற்ருன் அவர்புதுமையைக் கேட்கவேண்டுமா? 'சிப்பம் பிரித்தெடுத்த சீனத்துப் பொம்மை' வேண்டுமா? 'தென்னம்பாளை பிளந்து சிந்திடும் சிரிப்புக்காரி' தேவையா? 'இளங்கரும் பிடைச் செங் கரும்பு போல்' களையெடுக்கும் கன்னி விளங்கினுல் 'கன்னலின் சாறே கனிச்சாறே நீயுறங்கு என்றுகுழந்தையைப் பாடுவதில் வியப்பென்ன?

''குத்துண்ட கண்ணுடி
கொண்டபடி விரல்கள் போல்
துத்திக்காய் போலச் சுடர்
[முகத்தை நீ சுருக்கி
ஏனழுதாய் என்றன் இசைப்
[பாட்டே'' என்று,

தாலாட்டுப் பாடப்பெறும் குழந்தைக்குத் தான் எத்தனை உவமை! 'ஆலை அடிபோல் அதிரசம் சுட்டடுக்கி' விடமாட்டாரா?

''கொட்டித் தும்பைப்பூ
குவித்தது போல் உன்னெதிரில்
பிட்டு நறு நெய்யில் பிசைந்து
வைக்க'' [மறுப்பாரா?

''விழுந்துபடும் செங்கதிரை வேல்
[துளைத்ததைப் போல்
உழுந்து வடை நெய் பொழுக
உண்ணொன்று'' தருவாரே!

இவற்றைப் படிக்கும் போதே நாவில் நீர்சொட்ட வைக்கும் கவிஞரல்லவா அவர்!

செப்புச் சிலைபோல் குப்பன் நிற்பான். நாகம்போல் சீறும் நாதனுக மாறுவான். ஆனுல் 'அச்சப் பதுமை' வஞ்சிமுன் அவன் கோபம் நிற்குமா? கிட்டற்கரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப்பாயாதோ? ஏனெனில்?

''கன்னியின் கடைப் பார்வை
[காதலியர் காட்டி விட்டால்
மண்ணில் குமரருக்குமாமலையும்
[ஓர் கடுகாம்'' அன்ருே?

சஞ்சீவி மலையைத்தூக்கிய அனுமன் மலையைக் கடுகளவும் ஆடாமல் கண்ணுடிப் பாத்திரத்தைக்கற்தரையில் வைப்பது போல் அல்லவா வைக்கிருன்?

### மறுமணம்

இன்னும் அறிவிற்குப் பொருத்தமான பகுத்தறிவைத் தூண்டவல்ல ஆழமான கருத்துக்களையும் எளிய முறையில் தந்திடுவார். மனைவி இறந்தால் அணவன் மணக்கிருன். மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? என்ருர். ஏன்? பெண் மறுமுறை மணமாகாது இருக்கக் கூடாதா வென்ருல்,

''பாடாத தேனீக்கள்
உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு
பார்த்ததுண்டோ''?

எனவே பெண்டிரைக் கைம்மை நோன்பில் வாட்டல் கொடுமை, இயற்கைக்கு மாறு என்ருர்.

''கோரிக்கை அற்றுக்
கிடக்குதண்ணே இங்கு
வேரில் பழுத்த பலா
கொடியதென் றெண்ணிப்
பட்டதண்ணே குளிர்
வடிக்கின்ற வட்டநிலா.''

இதென்ன கொடுமை என உளந்துடிக்கிருர். ஏனெனில் ஊமை யென்று பெண்ணை உரைக்கும் நான்மட்டும் ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு என்ருரே! பின்னே பெண்கள் என்ன செய்யவேண்டும் என்று கூறியிருக்கிருர்,

''தமிழ் காத்து, நாட்டினைக்
காப்பாய்—பெண்ணே
தமிழரின் மேன்மையைக்
காப்பாய்!
தமிழகம் நம்மதென் ருர்ப்பாய்
தடையினைக் காலிஞல்
தேய்ப்பாய்'' என்று

அறிவுரையல்லவா புகட்டுகிருர்!

இவர் ஆணும் பெண்ணும் நிகர் எனக் கூறினுர்.

''ஆண் உயர் வென்பதும்
பெண்ணுயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம்
பெண்கள்நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்''

என்ருர்.

### புரட்சி

அடுத்து இவரது புரட்சிக் கருத்துக்களோ மிகப்பல. அவரது 'புரட்சிக்கவி' இதற்கோர் சான்று. உதாரன் அரசன் மகள் அமுதவல்லிஇவர்களிடையே ஏற்பட்டகாதலையறிந்த மன்னன் கடுஞ்சினங்கொண்டு இருவரையுமே கொல்லப் பணித்தான். அப்போது 'அரசனுக்குமெனக்குமொரு வழக்குண்டாக அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்பதேதான் சரியென்றேன். 'ஒப்பவில்லை அரசன்' என்ருன் உதாரன். 'அரசன் குற்றவாளி எனப்படும் போது குற்றவாளியே நீதிபதியாய் இருத்தல் அறமா? என்கிருன்.

அரசனுக்குப் பின்னிந்த தூய நாட்டை ஆளுதற்குப் பிறந்த ஒரு பெண்ணைக் கொல்ல அரசனுக்கோ அதிகாரம் உங்களுக்கோ? என்ற அடுத்த வினவால் அரசின் அதிகார மற்றவன் என்று புரட்சி செய்கிருன்! சிரம் அறுத்தல் வேந்தனுக்குப் பொழுது போக்கும் சிறிய கதை! தமக்கெல்லாம் உயிரின் வாதை! என்று அரசனைப் பழிக்கிருன். அதற்கும் மேலே மன்னராட்சிக்கு முடிவு கட்டி மக்களாட்சிக்கு வழிகோலி;

'அரசன் மகள் தன் நாளில் குடிகட்கெல்லாம் ஆளுரிமை பொதுவாக்க நினைத்திருந்தாள்' என்ற உண்மையையும் உடைத்தார். இவற்றின் பின்னருமா குடிமக்கள் அறிவு வராமலிருப்பர்? உடனே, இருவரும் கொலையுண்ணப் போவதை நிறுத்தினர். அரசனிடம் புலியாட்கி தலையுனைக்கு தாரோம் என்று போயுரைக்க முற்பட்டார். அதற்குள் அரசனே அவ்வுரிமையை மக்களிடம் தந்து பேருள் தட்டிக்கொண்டான்!

அந்தணனுகிய ஆசிரியனை உயிர்க்கொலை செய்தல் தவறு என்றிருந்த 'பில்ஹணீயம்' என்ற மூலக்கதையை மாற்றி, எத்தனை புரட்சி முத்துக்களை வாரி வழங்குகிருர் கவிஞர்!

இது அவருக்கெவ்வாறு எளிதாயிற்றென்ருல்,

''இதயமெல்லாம் அன்புநதியில்
[நனைப்போம்
இது என தென்னுமோர்
[கொடுமையைத்தவிர்ப்போம்''.

என்று கூறிப் புதிய உலகு, புதிய சமுதாயமிவற்றைப் படைக்கும் புத்துலகச் சிற்பியாயிற்றே அவர்!

இனி அவரது நகைச்சுவையை விட முடியுமா?

### நகைச்சுவை

குலுக்கென்று சிரிக்கும் முல்லையாக இருப்பது தொடங்கிக் குலுக்குலுக்கென்று சிரித்து வயிற்றைப் பிடிப்பவனும், விலாவைப் பற்றுபவனுமாகத் தன்னைப் படிப்பவனை ஆக்குகிருர் இவர். சர்க்காருக்குத் தாசனை அவர் விருது பெற வழி பார்த்தார். பொய்க் காய்ச்சல் வந்தது. சர்க்கார் வயித்தியர் சடுதியாய் வந்து சரி பார்த்து விருமுறையும் தந்துவிட்டார். அவர் வெளியே போனுரோ இல்லையோ இந்த சர்க்கார் தாசனை விழுங்க வந்த இமயனை எலி விழுங்கி விட்டதென்று கத்திவிட்டு வெளியூருக்குப் பிடித்தாரே ஓட்டம்!

'இருண்ட வீட்டி'ன் நெஞ்சிலை நினைத்தாலே பொங்கும் சிரிப்பு! வீட்டுத் தலைவன் சினம் கொண்டுபோகும் காட்சி என்னே!

''கண்டெலி வால்போல்
தொங்கும் தலைமயிர்

(14-ம் பக்கம் பார்க்க)

## நேருவும் கென்னடியும் போற்றிய இயற்கைக் கவிஞர் ரொபர்ட் பிராஸ்ட்

உலகின் இரு கோடிகளைச் சேர்ந்த இரு பெரும் தலைவர்களைக் கவர்ந்தது ஒரு செய்யுள். உலகம் முழுதும் மதித்துப் போற்றிய இரு தலைவர்கள், அவர்கள். ஒருவர், ஜனுதிபதி ஜான் எப்.



கென்னடி; மற்றவர் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு. இருவரும் போற்றிய செய்யுளை இயற்றிய கவிஞர், ரொபர்ட் பிராஸ்ட். கென்னடி தமது தேர்தல் இயக்கத்தின் போது அந்தச் செய்யுளை மேற்கோள் காட்டினுர். நேருவோ அச் செய்யுளை தம் கைப்பட எழுதி தனது மேசை மீதே வைத்திருந்தார்.

அவர்களைக் கவர்ந்த அச் செய்யுள்:

"The woods are lovely,
dark and deep
But I have promises to keep
And miles to go before I sleep
And miles to go before I sleep"

### அர்சிம்ரான் மாலிக்

தமிழில்:

''எளமிகு காடுகள் வாவென
அழைக்கும்,
ஆயினும் எனக்கோ ஆயிரம்
கடமைகள்,
துயில் கொளு முன்பு
முடித்திட வேண்டும்,
தொலைவோ பல கல்,
நடந்திட வேண்டும்.''

அமெரிக்க நாட்டுப் பெருங் கவிஞர் பிராஸ்ட் படைப்புகளைப் படிப்பது, இயற்கையழகு கொழிக்கும் ஒரு உலகில் நுழைவது போல; படித்துவிட்டால் வாழ்க்கையில் மனிதன் அன்பு கொள்ளாமலிருக்க முடியாது.

கவிஞரோ மக்கள் குலத்திடம் அன்பு பாராட்டினுர். மக்கள் குலத்தின் குறைகளை, அநீதிகளை, அல்லல்களை அவர் வெறுத்தார்; ஆனுல் அவை இருக்கத்தாம் செய்யுமென்ற உண்மையை உணர்ந்தார். ''நாம் அன்பு கொள்வனவற்றுடன் அன்பு கொள்கிரேம் அவை எப்



படியிருந்தாலும்'' என்று அவர் கூறினுர்.

அவரது இந்த மனப்பாங்கை, இந்தக் கொள்கையைப் பின்வரும் எளிய செய்யுள் வலிமையுடன் எடுத்தியம்புகிறது

''கல்லில் என் கதை
எழுதுவதென்ருல்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஏப்ரல் மாதம் 25 ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183

# காங்கேசந்துறை துறைமுகத்திட்டம்

காங்கேசந்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் தேசியமயச் சேவை அமைச்சர் திரு. சுகததாஸாவுக்கு சென்ற வாரம் எழுதியுள்ள ஒரு கடிதத்திற் கோரியுள்ளார். இத்துறைமுக அபிவிருத்தி குறிப்பாக வடபகுதிக்கும் பொதுவாக தேசம் முழுவதற்கும் பயன்படும் திட்டமாதலின், அந்தக் கண்ணோட்டத்தில் பிரச்சினையை அணுகுமாறு தமிழரசுத் தந்தை அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

துறைமுகத்துக்கான வசதிகள் இல்லாவிட்டாலும் நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே காங்கேசந்துறைத் துறைமுகம் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு இத்துறைமுகத்துக்கு பிரயாணிகள் கப்பல்கள்கூட வந்ததாகவும், அப்பொழுது வடபகுதி மக்களில் அநேகர் காங்கேசந்துறையில் கப்பலேறி மலேயா முதலிய நாடுகளுக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது. பிற்காலத்தில் இத்துறைமுகத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. சாமான் போக்குவரத்து அதிகரித்ததும், தொழிற்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியுமே இதற்குக் காரணம்.

இத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமாயின் காங்கேசந்துறைச் சிமெந்து தொழிற்சாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால் பொருளாதாரத்துறையில் சிமெந்துக் கூட்டுத்தாபனம் பெரும்பயன் அடையுமென்பதைக் கூட்டுத்தாபனமே அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

வடபகுதியிலே ஏனைய தொழில்கள் முன்னேற்றம் பெறவும் இத்திட்டம் ஆக்கமளிக்கும். அத்துடன் வட இலங்கை மக்களிடையே ஒரு பெரிய பிரச்சினையாக உருவாகிவரும் வேலையின்மையைப் போக்கவும் இஃது உதவியாயிருக்கும்.

இலங்கை மக்கள் உணவுக்காக இன்னும் வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்பவர்களாகவே இருக்கின்றனர். இன்று அரிசி, சீனி, மாவு முதலிய உணவுப்பொருட்களைக் கொழும்பில் இறக்குமதிசெய்து, தரைமார்க்கமாக வடபகுதிக்கு அனுப்பிவைக்கின்றனர். கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் ஓர் உணவுக்கப்பலிலிருந்து பொருட்களை இறக்குமதிசெய்ய சிலசமயங்களில் பல வாரங்களாகின்றன. இதனால் செலவு அதிகரிக்கிறது தரைமார்க்கமாக அவற்றை வடபகுதிக்கு அனுப்பும்போது செலவு மேலும் கூடுகிறது. இந்நிலையில் வடபகுதியிலுள்ள மக்கள் அதிக விலை கொடுத்தே பொருட்களை வாங்க வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது.

காங்கேசந்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் இந்த அவலநிலையைப் போக்கலாம். தரை மார்க்கமாகப் பொருட்களை அனுப்புவதைவிட, கடல் மார்க்கமாக அனுப்புவதால் செலவும் குறையும் அத்துடன் தென்னிலங்கை மக்கள் சாமான்களை வாங்கும் விலைக்கே வட இலங்கை மக்களும் வாங்க முடியும்.

சில சரக்குக் கப்பல்களை — குறிப்பாக ஒருசில உணவுக் கப்பல்களை வடபகுதிக்குத் திருப்பிவிடுவதின்மூலம் பல நன்மைகள் ஏற்பட முடியும் இதனால் கொழும்புத் துறைமுகத்திலே நெருக்கடி குறையும், உடனுக்குடன் சரக்குகளை இறக்குமதி செய்யவும் முடியும். ஒரு கப்பலுக்கு நாளொன்றுக்கு ரூ. 3500 வீதம் "தாமதக் கட்டணம்" செலுத்த வேண்டிய தேவையும் ஏற்படாது. வர்த்தக வளர்ச்சிக்கு வழி ஏற்படுவதுடன் பொருள் வினியோகத்தையும் சிறந்த முறையில் நடத்த முடியும். ஆகையாற்றான் காங்கேசந்துறை துறைமுக அபிவிருத்தி நாடு முழுவதற்கும் பயன்படுமெனத் தமிழரசுத் தந்தை தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

காங்கேசந்துறை துறைமுகம் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பூரணமான துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்பது வடபகுதி மக்களின் நீண்டகாலக் கிளர்ச்சியாகும். ஒரு துறைமுகத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கும்போது அதற்கேற்ப அத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படாவிட்டால், அதனால் நாட்டின் வர்த்தகமும் பொருளாதாரமும் பாதிக்கப்படும். காங்கேசந்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தைத் தமிழரசுப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் பன்முறை விளக்கிக் கூறியுள்ளனர். தமிழரசுத் தந்தையும் 1947—48-ம் ஆண்டிலும், 1948—49-ம் ஆண்டிலும் வரவுசெலவுத் திட்ட விவாதங்களின்போது இவ்விசயத்தை வற்புறுத்திக் கூறியுள்ளார்.

ஆனால் முன்னைய அரசாங்கங்கள் காங்கேசந்துறை துறைமுக அபிவிருத்தி விசயத்தில் அக்கறை செலுத்தவேயில்லை. கடந்த அரசாங்கம் இப்பிரச்சினையை அடியோடு கைவிட்டுவிட்டது. வடபகுதி தொழில்துறையிலும், வர்த்தகத்துறையிலும் முன்னேற்றம் கண்டால், அது முழு தேசத்தின் முன்னேற்றமே என்ற பரந்த எண்ணம் அந்த அரசாங்கத்திடம் இருக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் ஏனைய பிரச்சினைகளைப்போல துறைமுக அபிவிருத்தித் திட்டத்தையும் வகுப்புவாதக் கண்ணோட்டத்துடனேயே பார்த்தனர் முன்னைய ஆட்சியாளர்கள். வடபகுதியிலே முதந்தரமான ஒரு துறைமுகம் ஏற்பட்டால் வடபகுதி அபிவிருத்தியடைந்துவிடுமே என்று அவர்கள் அஞ்சினர். அவர்களிடம் இன்றும் அந்த அச்சம் காணப்படுகிறது.

இப்பொழுது நாட்டின் அரசியல் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டனர். இன்று ஒரு தேசிய அரசாங்கம் தோன்றியுள்ளது. சிறுபான்மைப் பிரதிநிதிகளும் அதில் அங்கம்வகிக்கின்றனர். சிறுபான்மை மக்களுக்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை பிறந்துள்ளது காரணம் ஜனநாயகப் பாதையில் இந்த அரசாங்கம் செல்வதுதான் பூரண ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் ஓர் அரசாங்கம் சிறுபான்மையோரின் கோரிக்கைகளை அலட்சியம் செய்ய முடியாதல்லவா?

ஆதலின் இந்த அரசாங்கம் காங்கேசந்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றிவைக்குமென்று எதிர்பார்க்கின்றோம். இது நாடு முழுவதற்கும் பயன்படும் திட்டமாதலின் சிங்களப் பெருமக்களின் ஆதரவும் நிச்சயம் கிடைக்கும். இவ்விசயத்தில் ஒருசில சிங்கள வகுப்புவாதிகளின் கூச்சலை அரசாங்கம் சட்டைசெய்ய வேண்டியதில்லை. தமிழ் பேசும் மக்களின் இந்த நீண்ட காலத் தேவையை நிறைவேற்ற வேண்டியது தேசிய அரசாங்கத்தின் கடமையாகும். இதில் இனியும் தாமதம் கூடாது.

# நிலையான கொள்கையற்ற அரசியல் வாதிகள்

## நயவஞ்சகத்தால் நாட்டைக் குழப்புவர்

அரசியல் என்பது நிலையானதல்ல என்று முதியவர்கள் கூறுவதுண்டு. அரசியல்வாதிகளையும் பல சமயங்களில் பச்சோந்திக்கு ஒப்பிடுவதுமுண்டு-அடிக்கடி அவர்கள் கொள்கைவிட்டு கொள்கைமாறுபவர்களான தனால் போலும்! இன்று சொல்லும் ஒரு கருத்தை மறுதலித்து நாளை கூறுவார்கள். நாளை கூறுவதற்கு முற்றிலும் மாறுபட்டு அடுத்த நாள் நடப்பார்கள். பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு இது சகஜம்.

தாங்கள் முன்பு சென்ற பாதை தவறானது என்பதை உணர்ந்திருந்திருந்துகொண்டு சரியான பாதை வழி செல்பவர்களை அரசியலில் யோக்கியர்கள் என்று கூறலாம். அதே வேளையில் சரியான பாதையிலேயே நடை போட்டு விட்டு, சுய நலத் திட்டங்களை நிறைவேற்றுதற்காக பிழையான பாதையில் காலடி எடுத்து வைத்துக்கொண்டு, தங்கள் மனச்சாட்சிக்கு மாறாகவே, தவறான புதிய பாதையே சரியான பாதை என்று கூறுபவர்களை அரசியல் அயோக்கியர்கள் என்று கூறுவதை விட வேறு கூற்றுக்கள் பொருந்தாது.

### அன்றைய வேடம்

சமசமாஜக் கட்சியினரும் கொம்யூனிஸ்ட் கட்சியினரும் முன்பெல்லாம் தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கை அனைத்திலும் சம அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்று கொக்கரித்தவர்கள், மலைநாட்டுத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் சகல உரிமைகளும் வழங்கவேண்டும் என்று பிரசாரம் செய்துவந்தவர்கள்.

சிறுபான்மையினர் பால் அவர்கள் கொண்டிருந்த அக்கறையையிட்டு நாட்டுநலம் விரும்பிகள்—நடுவு நிலைமையாளர்கள் அனைவரும் வரவேற்பு நல்கினர். இடதுசாரிகளின் பரந்த கண்ணோட்டத்தையும் விரிந்த மனப்பான்மையையும் போற்றினர். அதுமட்டுமல்லாமல் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டிலும் இடதுசாரிக்கட்சித் தலைவர்களின் கருத்துக்களுக்கு ஆதரவுகளும் துளிர்த்தன.

காய்ச்சிய பசும்பாலிலே ஒரு துளி விஷம் விழுந்துவிட்டதற்கொப்ப, இன்று இதே இடதுசாரிகள் தாங்கள் இது வரை சென்றுவந்த பாதையைப் புறக்கணித்துவிட்டு, கொடிய பாதையிலே நடைபோடத் தலைப்பட்டு விட்டனர். அர்ப்ப ஆதிக்க வெறி ஒன்றேதான் இந்த 'நல்லவர்'களையே பொல்லாரீகளாக்கிவிட்டுள்ளது என்று விடயமறிந்த அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

### அதிகார ஆசையா?

மறுமுறையும் சுதந்திரக் கட்சி—சமசமாஜக் கட்சி—கொம்யூனிஸ்ட்கட்சி முதலியவற்றின் கூட்டரசாங்கம் அமையப்பெற்றிருந்தால், ஆளும்கட்சி முதல் வரிசையில் திரு பீட்டர் கெனமன் வீற்றிருந்திருக்க வசதி கிட்டியிருக்கும் என்று நம்ப இடமிருக்கிறது. அத்தகைய ஒரு வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவொட்டாமல்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

தமிழரசுக்கட்சி தடுத்துவிட்டது என்பதனாலே தான் அவருக்கு ஆக்ரோஷம் ஏற்பட்டு விட்டதோ என்று அரசியல் அவதானிகள் அனைவரும் கருதக்கூடியவகையில் திரு. கெனமன் புதிய பாராளுமன்றத்தில் பேசிய முதற் பேச்சு அமைந்திருக்கிறது.

பழுத்த அரசியல்வாதியான திரு. கெனமன் அவர்களுக்கே அதிகாரமோகம் ஏற்பட்டு—அறிவிழந்து விட்டாரா என்று மக்கள் கருதும் அளவுக்கு வகுப்புத் துவேஷத் தீயை மூட்டத் தலைப்பட்டுள்ளார் அவர்.

வகுப்புவாதத்தைக் கிளறி மக்கள் சபையில் புலம்பிய திரு. கெனமன் அவர்களுக்குத் தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் பிரதிநிதிகள் சபையில் கொடுத்த சாட்டையானது இந்நாட்டு அரசியல் வாதிகளனைவருடைய அகக்கண்களையும் திறந்துவிட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

காலத்துக்குக்காலம், சுய நலத்திட்டங்களைச் சீராக்கும் ஒரே நோக்குடன், கொள்கைவிட்டுக் கொள்கை பாயும் கும்பல் இனிமேலாவது திருந்தி நல்ல வழிநடக்கட்டும்.

### விரக்தி மனப்பான்மை

இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட சகல மக்களும்—அவர்கள் எந்த மொழி பேசினாலும், எந்த மதத்தைப் பின்பற்றினாலும் எந்த இனத்தைச் சார்ந்திருந்தாலும், அவர்களனைவருக்கும் இந்நாட்டு அரசியலில் பங்குகொள்ள சகல உரிமைகளும் உண்டு.

இடையிலே சுய இச்சைகளைப்பூர்த்திசெய்யத் தலைப்பட்டவர்கள், இந்நாடு, ஒரே மொழிபேசும்—ஒரே மதக் கோட்பாடுகளைப் பின்பற்றும்—ஒரே இன மக்களுக்கே உரிமையானது என்ற கருத்தினைப் பரப்ப முற்பட்டனர். அறிவுமுதிர்ச்சியற்ற பாமர மக்களை இம்முறையில் கவர்ந்து விடக் கங்கணங்கட்டியவர்கள், இன்று தங்கள் தீச்செயல்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேடத் தலைப்பட்டுவிட்டனர். இன்றுள்ள சூழ்நிலை, இந்நாட்டுமக்கள் அனைவரும் எதிர்காலத்தில் ஓரளவு நம்பிக்கை வைக்கக்கூடிய முறையை உருவாக்கிவருகிறது. இதற்கிடையில் நாட்டிலே வேண்டா விஷமங்களை எழுப்பவும் ஒருகூட்டம் முற்பட்டுவிட்டது.

### விரக்தியின் விளைவு

இதற்கு விரக்தி மனப்பான்மைதான்காரணம்.

பல தொழிற்சாலைகளில் நாசவேலைகள் புரியப்படுகின்றன.

அரசாங்க இலாக்களில் தவக்கமான நிலையினை சிலர் ஏற்படுத்தி வருகின்றனர்.

சிலர் தார்ப்பூச்சு வேலைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மொழியின் மீது அன்று தாரைப் பூசிய அதே கைகள் இன்று தங்கள் தாய்மொழியான சிங்களத்தின் மீதே தாரடிப்பதைக் காண்கிறோம்.

### தேசியத் தாள்கள்

தேசியப் பத்திரிகைகள் அனைத்தும் இன்று ஒரேயடியாக அரசாங்கத்தை ஆதரிக்கத் தலைப்பட்டுவிட்டன இந்தநிலைமை நீடிப்பது அவ்வளவு நல்லதல்ல. அரசாங்கம் செய்யும் தவறுகளை அவ்வப்போது சுட்டிக்காட்ட வேண்டியது பத்திரிகைகளின் கடமை. இந்தக்கடமையினை இனிமேலாவது பத்திரிகைகள் கடைப்பிடிப்பதே சிறப்புடையதாகும்.

தேசிய அரசாங்கம் ஏற்பட்டமையினால் சகல இன மக்களும் சேமமடைய வழிவகைகள் ஏற்படலாம்! தட்டிக்கேட்க ஆளில்லையானால் தம்பி சண்டப்பிரசண்டனாகி விடுவான், ஆகவே தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்தாலும் ஆணித்தரமான கண்டனங்களையும் தேசியத் தாள்கள் தொடுக்க வேண்டும்.

வேண்டுமென்றே குற்றம் குறைகாணவேண்டும் என்பது எமது கூற்றல்ல; பொருத்தமான வேளையில் பொருத்தமான புத்திமதிகளை, மக்களின் மனோநிலையை எடுத்தோத வேண்டிய கடமையும் தேசியத் தாள்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மீனவர்களுக்கு புனர் வாழ்வு

## புதிய திட்டங்களை தமிழரசார் வழங்கினர்

தமிழ் பகுதி மீனவர்களின் பிரச்சினைகள்பற்றி திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், சி. எக்சு. மாட்டின், க துரைரத்தினம் ஆகியோர் கடற்றொழில், கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவைப் பேட்டி கண்டு ஒரு திட்டத்தைக் கொடுத்துள்ளார்கள். மீனவர்களின் நிலையை உயர்த்துவதற்கு அமைக்கவிருக்கும் குழுவில் இம்மூவரையும் சேர்த்துக்கொள்ளவும் அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளாராம்.

கடந்த ஆண்டு டிசம்பரில் வீசிய கோரப் புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு உடன் புனர்வாழ்வு அளிக்கவும் அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளாராம்.

புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் புனர்வாழ்வு பற்றி திருவாளர்கள் சா. ஜே வே செல்வநாயகம், க. துரைரத்தினம், சி. எக்சு. மாட்டின் ஆகியோர் அமைச்சரிடம் கொடுத்த திட்டம் வருமாறு:

1. கடல் அலைகளால் அமிழ்ந்துவிட்ட 62 படகுகளுக்கும் இணையான புதிய படகுகள் கொடுத்தல்.

2. வலைகளை இழந்தவர்களுக்கு புதிய வலைகள் கொடுத்தல்.

3. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கி புனர்வாழ்வு அளித்தல்.

4. பாதிக்கப்பட்ட மீனவர்களின் வீடுகளைத் திருத்திக்கொடுத்தல்.

5. வலைகளை இழந்த மீனவர்களுக்கு (அறக்கொட்டியான் வலைகள்) சிறியகண் வலைகள் உடன் கொடுத்தல். (கொழும்பிலிருந்து தமிழ்ப் பகுதிகளுக்கு இவ்வலைகள் அனுப்பிவைக்கப்படல்)

பொதுவாக மீனவர்களுக்கு உள்ள இடர்ப்பாட்டை நீக்கும் முறையில் கொடுத்த திட்டங்கள் வருமாறு:

1. மீன்பிடிக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வலை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல். (முன்னைய அரசாங்கம் வலை இறக்குமதியில் 85 வீதத்தைக் குறைத்திருந்தது சுட்டிக்காட்டப்பட்டது)

2. வட-கிழக்கு மாகாணங்களில் புதிதாக மீன்பிடித் துறைகளையும், வான்களையும் கட்டிக்கொடுத்தல்.

இத்திட்டங்களை அமுல் நடத்துவதால் தொழில் வளம் சிறக்கும் என்றும், ஏற்றுமதி வர்த்தகம் கூடுமென்றும், இதனால் வெளிநாட்டுச் செலவாணியைப் பெருமளவில் மீதப்படுத்தலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

உடனடியாக சூறைச் செட்டையும், கடலட்டையும் ஏற்றுமதி செய்ய ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் தூதுக்குழுவிடம் உறுதிமொழி கொடுத்துள்ளார்.

தூதுக்குழுவினர் சமர்ப்பித்த திட்டங்களை ஆராய்வதற்கு அமைச்சின் அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அக்குழுவில் இம்மூவருக்கும் உறுப்புரிமை கொடுப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

### தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'எழுச்சி' ஆசிரியர் திரு. வீர. வேலாயுதமும், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கச் சார்பில் பொதுச் செயலாளர் திரு. ஏ. வி. கனகரத்தினமும் கலந்து கொள்வார்கள். துறைமுக ஊழியர் சங்கத்தினரும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் க. கணேசன், சிவலிங்கம், சண்முகராசா ஆகியோரும் கூட்ட ஒழுங்குகளைக் கவனித்து வருகிறார்களாம். திரு. சு. ம மாணிக்கராசா, ஜனாப் முகமதலி ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களாம்.

#### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேதினக் கூட்டத்தில் அ. எ. வி. சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் திரு. வே. தங்கவேலு, இ இராமநாதன், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் திரு. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திருவாளர்கள் சின்னத்துரை, ப. வித்தியானந்த சர்மா, பொன்னுத்துரை ஆகியோர் அவர்கள் சார்ந்த தொழிற் சங்கங்களின் ஆதரவுடன் கூட்ட ஒழுங்குகளைக் கவனித்து வருகிறார்களாம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல தொகுதியையும் சேர்ந்த கமக்காரர்களைக் கொண்ட இயக்கங்களின் சார்பில் ஒரு வண்டிச் சவாரியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.

திருவாளர்கள் க. துரைரத்தினம், வி. நவரத்தினம், வி. தர்மலிங்கம், வ. ந நவரத்தினம் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

#### வவுனியாவில்

வவுனியாவில் நடைபெறவிருக்கும் மேதினக் கூட்டத்திற்கான ஒழுங்குகளை திரு. பீற்றர் கவனித்து வருவதாகவும், பாண்டியனைச் சேர்ந்த திருவாளர்கள் கந்தசாமி, சிதம்பரநாதபிள்ளை, ஆகியோரும், பண்டிதர் கா. பொ இரத்தினமும் ஏனைய தொழிற் சங்கப் பிரமுகர்களும் கூட்டத்திற் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

#### அட்டனில்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் ஆதரவில் அட்டன் டன்பார் மைதானத்தில் மேதினக் கூட்டம் நடைபெறும். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு ஊர்வலமும் நடைபெறும். ஊர்வலம் காலை பத்து மணிக்கு டன்பார் மைதானத்தை வந்தடைந்ததும் கழகத் துணைத் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், ஜனாப் மசூர் மௌலானா, திரு. கரிகாலன், எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதி திரு. சொக்கலிங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதி திரு. செபரத்தினம், கூட்டுத்தாபன ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. நாகலிங்கம் உட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள்.

### சமசமாஜிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க லிகிதர் சேவா சங்கத்தின் உத்தியோகத்தர்களாக விருந்த சமசமாஜ ஆதரவாளர்களுக்கும் இப்பொழுது கல்தா கொடுக்கப்பட்டுவரும் சம்பவங்களும் வெளியாகிக்கொண்டு வருவதும் கண்கூடு.

#### யாழ்ப்பாணத்தில்......!

கூட்டரசாங்கம் அடுத்து ஆட்சியைக் கைப்பற்ற முடியாத சூழ்நிலை உருவானதும் யாழ்ப்பாணம் போக்குவரத்து சபை ஊழியர்களிடம் முன்னைநாள் செனட்டர் ஒருவர் அண்டி, ஓர் வேலை நிறுத்தத்தை நடாத்த ஒத்துழைப்புத் தரும்படி வேண்டினாராம். தொழிலாளர்கள் அவருடைய கோரிக்கைக்கு செவிமடுக்க மறுத்துவிட்டதாகவும் தெரிய வருகிறது.

### சுற்றி வளைத்துப்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதேனியாப் பிரதிநிதி. அப்பொழுது உடுப்பிட்டிப் பிரதிநிதி அவரைத் 'தமிழ் படியுங்கள்' என்றார் 'தமிழ்த் தெரிந்தால் தம்பதேனியாப் பிரதிநிதி இப்படிப் பேசமாட்டார்' என்றார் பட்டிருப்புப்பிரதிநிதி திரு இராசமாணிக்கம்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலப்பிட்டியா பிரதிநிதி (சமசமாசக்கட்சி) திருத்தப் பிரேரணையொன்றை முன்மொழிந்து தமது கன்னிப் பேச்சை நிகழ்த்துகையில் பலர் குறுக்கிட்டார்கள். டாக்டர் பெரேரா எழுந்து ஒரு உறுப்பினர் கன்னிப் பேச்சை நிகழ்த்துகையில் குறுக்கிடுவது சம்பிரதாயத்திற்கு முரணானது என்றார். 'சம்பிரதாயங்களைக் காப்பாற்றுவேன்' என்று கூறி அமைதியை நிலைநாட்டினார் சபாநாயகர். சபாநாயகர் சில தடவைகள் எழுந்து நின்று அமைதியை நிலைநாட்டவேண்டியேற்பட்டது. சபையில் சூடாக விவாதங்கள் நடைபெற்றன.

விவாதங்கள் சூடுபிடித்த பொழுதிலும், —சொற்கொண்டல்—யாழ்ப்பாணப் பிரதிநிதி அமைதியாகவேயிருந்தார். அவரின் வாய் எதையும் திருவாய்மலர்ந்தருளவில்லை. திரு. கெனமன், ஆர். ஜி சேனநாயக்கா போன்றோர் பேசுகையில் தமிழ் காங்கிரசையும் வம்புக்கு இழுத்தார்கள். ஆனால் காங்கிரஸ் பிரதிநிதிகள் அமைதியாகவே இருந்தனர்.

எதிர்க்கட்சியினரின் பேச்சுக்களில் தமிழரசுப் பிரதிநிதிகள் குறுக்கிட்ட சமயங்களில் எதிர்க்கட்சியினர் வாயடைத்து நின்றனர். கம்பகா பிரதிநிதி திரு. எஸ். டி பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருக்கையில் குறுக்கிட்ட திரு. இராசமாணிக்கம் சபாநாயகரைப் பார்த்து 'அவர் (பண்டாரநாயக்கா) முழுவகுப்புவாதத்தை இங்கு போதிக்கிறார் ஐயா!' என்றார். இப்படிப்பல சந்தர்ப்பங்கள்.

(அரியணை உரைமீது நடைபெற்ற விவாதம் பற்றிய பூரண விமர்சனக் குறிப்பு அடுத்த இதழில் இடம் பெறும்.)

### தந்தைக்கு வரவேற்பு

தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே வே செல்வநாயகம் அவர்களுக்கு நெல்லிப்பழையில் ஒருமகத்தான வரவேற்பு விழா நடைபெறுகிறது. 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இவ்விழாவில் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் உட்பட சகல வடபகுதி தமிழரசுப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள் எனத் தெரிகிறது.

---

### சபைக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரியினருக்கும் வகுப்பு வாதத்தைத் தூண்டும் விஷமிகளுக்கும் சரியான சாட்டையடிகொடுத்தார். அவர்தொடுத்த கேள்விக் கணைகளை எதிர்கொள்ள முடியாது. எதிர்க்கட்சி வரிசையில் பலர் தலைகுனிந்து மௌனிகளாகியிருந்தனர். அவர் கொடுத்த ஒவ்வொரு சூடும் பலருக்கு 'சுரீர்' என்றுதைத்திருக்கவேண்டும்.

பேசிமுடிந்ததும், திரு. அமிர்தலிங்கத்தின் சொல்லாற்றலையும் துணிவையும் பாராட்டி பலரும் புகழ்ந்தனர். அவரை வளைத்துக் கொண்டு பாராட்டுக்களைச் சொரிந்தனர்.

பிரதிநிதிகள் சபையிலே என்றுமில்லாத பரப்பரப்பை யூட்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்த அமிர்தலிங்கம் அவர்களின் முழுப் பேச்சையும் வினிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் கன்னிப் பேச்சையும் அடுத்தவார 'சுதந்திரன்' முழுதாகத் தருகிறது.

---

### அறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"என்று பண்டிதர் இரத்தினம் நமது நிருபரிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


## தேவை

அப்புத்தளைப் பகுதியில் சுதந்திரன் விற்பனை செய்ய விற்பனையாளர் ஒருவர் உடனே தேவை.

முற்பணம் கட்டக்கூடியவர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
சுதந்திரன்.





'அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர்

ஏனெனில்

* 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
* 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
* இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நாலவரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜூபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் பழி

மட்டக்களப்பு நாகலிங்கத்தின் கடையென்றால் ஊரில் எல்லோருக்கும் தெரியும். கடையின் முன்பக்கத்தின் ஒரு மூலையில் களிமண்ணால் தில்லையம்பல நடராசனின் சிலையை வைத்து அதன் அருகாமையில் பெரியதோர் லிங்கத்தையும் செய்து வைத்து அதற்கு ஒவ்வொருநாளும் அன்று அலர்ந்த மலர்களும் மலர்களினால் இழைத்த மாலையும் இட்டு அழகு செய்வார் முதலாளி நாகலிங்கம். அவருக்கு தில்லையம்பல நடராசனில் முழு நம்பிக்கை.

அந்தச் சிலைகளுக்கு அருகில் இரண்டு சிமிழ்களில் குங்குமம், சந்தனம் இருக்கும். அவை மட்டக்களப்பு சிவபக்தர்களின் நெற்றியை அழகுபடுத்தும்.

முதலாளி நாகலிங்கம் மட்டக்களப்பைச் சார்ந்தவரல்லர். பத்து வயதில் தன் குடும்பச் சுமையைச் சுமந்து உழைப்பின் நிமித்தம் வல்வெட்டித்துறையிலிருந்து வந்து மட்டுநகரிலுள்ள யாழ்ப்பாணக் கடையில் சேர்ந்தார். கடையின் சொந்தக்காரர் வேறு யாருமல்ல. அவரின் சின்னப்புதான். முதலில் கடைக்குத் தண்ணீர் அள்ளும் வேலையில் இருந்து பின்னர் சமையற் கட்டிற்கு மாறினார். சமையல் ருசியுடன் செய்வதில் அவர் சாமத்தியசாலி. பின் அவருக்கு நாளுக்கு நாள் வயதுகூடி தகைமை கூடியது. கடைசியில் கணக்குப்பிள்ளையின் இடத்தில் அமர்ந்தார். இருந்தும் அவருக்கு ஒரு குறை. அதாவது சம்பளம் கொடுப்பதில் உள்ள பாராமுகம்தான். எல்லோரையும்விட குறைந்த சம்பளம். பல தடவைகள் சின்னப்புவிடம் கேட்டுப் பார்த்தார். பதிலும் கிடைக்கவில்லை; முடிவும் கிடைக்கவில்லை. இறுதியில் அவரின் மனப் போராட்டத்தில் தனியே தொழில் செய்ய வேண்டும் என்ற பதில் தெளிவாகியது.

நாகலிங்கத்திற்கு நல்ல முகராசி. தொழிலுக்கு முதல் தேட அது இலகுவாகவே கிடைத்தது. விதை முளையாகி, கன்றாகி மரமாகி, பூத்துக் காய்த்து பழுக்கவும் தொடங்கிவிட்டது. பழத்தில் இப்போது எவ்வளவோ விதைகள். இன்று முதலாளி நாகலிங்கம் மட்டுநகரின் சுருட்டு-புகையிலை வியாபாரத்தில் பெரும் புள்ளி.

முதலாளி நாகலிங்கத்திற்கு ஒரே மகன் நவம். இருபத்திரண்டு வயதுக் காளை. யாருடனும் நன்றாகப் பேசிப் பழகத் தெரியாத சுபாவம். தன் சொந்தத் தகப்பனிடம் கூட எதையும் தனக்காக கேட்டுத் தீர்க்க முடியாத பழக்கம். எதுவும் தனக்கு அனுகூலமாக முடிய வேண்டுமென்றால் அன்றிரவைக்கு எதையுமே சாப்பிடமாட்டான். கடையின் மூலையில் இருக்கும் அரிசி மூட்டையின் மேல் அமர்ந்து கொண்டு உண்ணாவிரதக் கோலந்தான்.

'எட மோளை! நீ காந்தி காலத்தில் இருந்திருப்பியேயெண்டால் உனக்கு இப்போ மந்திரி வேலையல்லோ கிடைக்கும்' எனக் கூறிவிட்டு மகனைப் பார்த்து காலமாகச் சிரிப்பார் முதலாளி நாகலிங்கம்.

எது எப்படியிருந்தாலும் ஆர்ப்பாட்டமற்ற உண்ணாவிரதத்தால் எதையும் தன் தகப்பனிடம் தீர்த்துக் கொள்ளும் திறமை நவமிடம் இருந்தது.

இந்த வருட ஆரம்பமே மட்டக்களப்பு விவசாயிகளுக்கு சோதனைக் காலமாக அமைந்துவிட்டது. பருவ காலங்கள் மாறி அந்தி இழைக்கும் அனுபவத்தை பெற்றது இதுவே முதற் தடவை. விதைத்த நெல் முளையாகிப் பயிராகும் காலத்தில் மாரி மழைக்குப் பதிலாக கோடை மழை தகித்து பயிர்களைக் கருகவைத்து அழித்துவிட்டு, தப்பிய பயிர்கள் விளைந்து கதிர் விட்டுப் பழுக்கும் காலத்தில் கோடை வரட்சிக்குப் பதிலாக மாரி பெய்யத் தொடங்கிவிட்டது. தொண்ணூறு சதமாக இருந்த ஒரு கொத்து அரிசி ஒரு ரூபாவாகி ஒரு ரூபாய் பத்துச்சதமாகி இப்போது ஒரு ரூபா நாற்பது சதமாகி விட்டது. ஒரு கொத்திற்கு ஐம்பது சத உயர்வு.

இருந்தும் இந்த விலையிலும்கூட விற்பனைக்கு ஒரு ரூபாய் இருபதுசதத்திற்கு அரிசி கொடுக்கும் செல்லம்மா அக்கையை இரண்டு கிழமையாகக் காணாதது முதலாளி நாகலிங்கத்திற்கு பெருங்குறைதான். இன்னமும் இரண்டு நாட்களுக்கு வராவிட்டால் நவத்தை புதுக் குடியிருப்புக்கு அனுப்பியாகுதல் வரவைக்க வேண்டும் என்ற திர்க்கமான முடிவுக்கு வந்து விட்டார் முதலாளி நாகலிங்கம்.

எஸ். எச். ஜே. ஹுசைன்
மட்டுநகர்

செல்லம்மா அக்கை இரண்டு நாட்களாகியும் வந்தபாடில்லை. நவம், செல்லம்மா அக்கையின் வீட்டை யடைந்து பார்த்தான். வீடு பூட்டிக் கிடந்தது. கதவைத் தட்டினான். கொல்லைப் பக்கத்திலிருந்து யாரது? என்ற குரல் கேட்டது.

## இவ்வாரச் சிறுகதை

எவ்வளவு இனிமையான குரல்! இதுவரை அவன் கேட்டறியாத குரல். இளம் பெண்களின் குரலில் இவ்வளவு சுவையா? அவன் மனதில் எழுந்த கேள்வி இது.

—அவன் இப்போது பக்குவப்பட்டு விட்டான்.

'யாரைத் தேடுறீங்க?' கதவைத் திறந்து கொண்டே கேட்டாள் அவள்.

'செல்லம்மா அக்கை இருக்காவே?'

மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிலே திளைத்த அவளுக்கு, நவத்தின் யாழ்ப்பாண இழுவலுடன் இணைந்த வார்த்தைகளைக் கேட்டவுடனேயே சிரிப்பு வாயை பொத்துக் கொண்டு வந்தது. சிரித்தே விட்டாள்.

அவள் சிரிக்கும் போது கன்னங்களில் விழும் குழியில் தான் எவ்வளவு கவர்ச்சி, எலுமிச்சம் பழ நிறம், கொடிபோன்ற மெல்லிய உடல், வட்டவடிவான முகம், கூரிய நாசி மெல்லிய உதடு, குவிந்த மோவாய், கண்களின் துறுதுறுப்பினிடையே சலனத்தையும் சபலத்தையும் ஏற்படுத்தக்கூடிய பார்வை, செவந்த பெரிய பொட்டு, இன்னும் பல அவனைப் பிரமிக்கச் செய்தன. அவன் மயங்கி நின்றான்.

அவளுக்கும் அவன் பார்வையில் ஒரு வித மயக்கம்.

மயக்கம்தான் காதலின் அத்திவாரமா?

மௌனம்தான் காதலின் அரம்பப் பாசையா?

'சிவமலரக்கா, சோறு புலுங்கிட்டு!' குசினியிலிருந்து தங்கை கொடுத்த குரலில் இருந்துதான், தானடைந்த மயக்கத்திலிருந்து விழிப்படைந்தாள் அவள்.

'அம்மா திருகோணமலைக்குப் போயிட்டாவு, நாளைக்குத்தான் வருவா'

'கொம்மா நாளை வருவாவே? நாளை நான் வர்ரன்'

'அவன் கதவைப் பூட்டாமல் ஏன் நின்று பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும்? நான் ஏன் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும்?' இது அவள் தன் மனதிற்குள் கேட்டுக்கொண்ட கேள்வி.

காதல் மனதில் எழுந்து இடைஇடையே தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சந்திப்புக்களில் வளர்ந்து முற்றிவிட்டது.

அன்று திடீரென்று நவம் வந்தது புரியாமல் சாப்பாட்டிற்கு அழைத்தாள் செல்லம்மா அக்கை. முதலாளியின் மகன் தன் குடிசை வீட்டில் சாப்பிட்டால் அவளுக்கு பெருமை தானே! நன்றாக—விருந்தாக சமைத்துப் போட்டாள்.

அடுத்த நாள் காலை எழுந்த செல்லம்மா அக்கைக்கு பெரிய அதிர்ச்சி. சிவமலரைக் காணவில்லை. சுற்றுடலில் தேடினாள் அங்கும் காணவில்லை. நேராக போலீஸ் அலுவலகத்திற்குச் சென்றார்.

அங்கு—

நவமும் சிவமலரும் திருமணத்தை பதிவு செய்து விட்டு வருவதைக் கண்டதும் அதிர்ந்து விட்டாள்.

'அம்மா என்னை மன்னிச்சிக்கொள்' என அவள் தாயின் காலில் விழ அவனும் விழுந்துவிட்டான்.

மகளும் மருமகனும் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால் எந்தத் தாய்க்குத்தான் மனம் இளகாது.

இதை அறிந்ததுதான் தாமதம் கடையில் பெரிய ஆர்ப்பாட்டமே செய்துவிட்டார் முதலாளி நாகலிங்கம். 'மட்டக்களப்பான் பாயிலக்கிலே ஒட்ட வைச்சிட்டான். அவன் சிவமலரை எனக்குத் தெரியும், பெரிய ஆள் மயக்கியல்லே' என கர்ஜித்தார்.

ஆள் மயக்கி யார்?

அது சிவமலருக்குத் தெரியும்!

**யாழ்ப்பாணத்து நாகலிங்கத்தாரின் மகன் மட்டக்களப்பு செல்லம்மா அக்கை மகளைக் கண்டு, கிறங்கிப் போய், காதலித்து மணக்க—**

**நாகலிங்கத்தார், மட்டக்களப்புப் பெண்களைப் பற்றி யாழ்ப்பாணத்தார் பாரம்பரியமாகக் கொண்டிருக்கும் தவறான கருத்தைத் தான் கூறி கர்ச்சித்தார். 'காதலைப் பாயிலே ஒட்டவைக்க முடியுமோ?**

# செந்தமிழ் வளர்த்த சேதுப்பிள்ளை

## ஈழத்தறிஞரிடம் பயிற்சி பெற்றார்

சொல்லின் செல்வராய், செந்தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய சேதுப்பிள்ளை தமிழ் வளர்த்தவர்; இந்தி அரக்கியின் கொடுமையிலிருந்தும் தமிழணங்கைக் காத்தவர். பல்வேறு துறைகளாலும் தமிழ் வளர்த்தவர். தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் தமிழ் காக்க எடுத்த நடவடிக்கைகளை நாம் என்றும் மறக்க முடியாது.

### இந்திக் கலப்பை எதிர்த்தார்

ஆட்சிமொழி என்ற உருவில் வேற்று மொழிகள் வந்து தமிழை வேரோடு அழித்தொழிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதை உணர்ந்து, ஊர்தோறும் பேசி, ஆவன செய்தவர் சேதுப்பிள்ளை. அரசினரின் மொழியாக்க நிபுணர் குழுவின் தமிழ் நாட்டுப் பிரதிநிதியானார். இந்தி மொழிச் சொற்கள் பலவும் வேறு பாரத மொழிகளிலே கலந்து விட்டால், இந்தித் திணிப்பு எளிதாகி விடுமென அக்குழுவிலே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இதை வன்மையாக எதிர்த்தார்; தமிழின் தொன்மையையும் மரபையும் சுட்டிக் காட்டினார்.

### தமிழ்ப் பற்றின் காரணமென்ன?

கடைசி மூச்சுவரை தமிழுக்கே பணி செய்த சேதுப்பிள்ளைக்குத் தமிழ் மீது இவ்வளவு பற்றும் பாசமும் ஏற்படக் காரணம் என்ன? இதை எண்ணி ஆராயும் போது தான், ஈழத் தமிழர் பெருமிதம் கொள்ள வேண்டிய செய்திகள் வெளிவருகின்றன. ஈழத்திலிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்று தமிழ் வளர்த்த பெரியார்கள் பலர். நாவலர், விபுலானந்தர், தாமோதரம்பிள்ளை,

பேராசிரியர்
ஆ. சிவானந்தம்
எம். ஏ.

சதாசிவம் கதிரவேற்பிள்ளை முதலிய பலர் தமிழ் வளர்த்தனர். தமிழ் வளர்க்க வல்ல பல தொண்டர்களையும் [illegible] பிள்ளையின் தமிழ்ப் பற்று [illegible] விளங்கியவர் ஈழத்தைச் சேர்ந்த செப்பறை அடிகளாவர்.

### யாரிந்த ஈழத்தறிஞர்?

செப்பறை அடிகளாரின் பூர்வீகம் பற்றிய செய்திகள் இலை மறை காய் போல உள்ளன. ஆனால் இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சைவ சமய சாத்திரங்களிலும் மிகுந்த தேர்ச்சியுடையவர் எனத் தெரிகிறது. ஊரிலேயுள்ள பிள்ளைகளுக்குச் சமய அறிவைப் பெருக்க வேண்டுமென்ற பெருவிருப்புக் கொண்டவர். தேர்ச்சியுள்ள பிள்ளைகளுக்குத் தன் செலவிலே தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்து ஊக்க மூட்டுவாராம். சேதுப்பிள்ளை செய்த புண்ணியம் போலும், அவர் பிறந்த ஊரிலேயே செப்பறையடிகளும் தங்க நேர்ந்தது.

சேதுப்பிள்ளை திண்ணைப் பள்ளியிற் படிக்கும் போதே நண்பர்களோடு சேர்ந்து செப்பறை அடிகளாரிடம் தேவாரம், திருவாசகம் முதலியவற்றைக் கருத்தோடு படித்தார். சிவஞான பாடியத்தில் தனி விருப்புக் கொண்டவர் அடிகளார். சில பகுதிகளைப் பிள்ளை கட்கு எழுதிக் கொடுப்பார்; மனனம் செய்வோர்க்குத் தின்பண்டங்கள் தருவதாக வாக்குப் பண்ணுவார். சேதுப்பிள்ளை மற்றையவர்களை முந்திக் கொண்டு மறுநாளே மனப்பாடம் செய்து ஒப்பித்துவிடுவார்; வாய் நிறையத் தின்பண்டங்களை வாங்கியுண்பார். சேதுப்பிள்ளையின் மனனத் திறமை, பாவம், செப்பறை அடிகளாருக்கு அடிக்கடி அதிகச் செலவை வைத்துவிட்டது!

### வாழ்த்துரை பொய்க்கவில்லை

சேதுப்பிள்ளை இளமையிலேயே இன் தமிழ் பேசுவதைக் கண்ட அடிகளார், "பிற்காலத்திற் பெரிய பேச்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடிய தமிழ்ப் பல்கலைக் கழகம் டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## செல்லரித்த ஏட்டுச் சுவடிகளுக்கு வாழ்வு கொடுத்த தமிழ் முனி

ச. தனஞ்சயராசசிங்கம்
பி. ஏ (ஆனர்சு) எம். லிட்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் (1855-1942) தமிழ்ப் பணியினை நாம் தமிழாசிரியர், பதிப்பாசிரியர், நூலாசிரியர் என்ற மூன்று நிலைகளில் நோக்கலாம். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தம் இளமையிலேயே எவரும் ஆற்றுப்படுத்தாமல் தமிழிற் பற்றுக் கொண்டார்கள். அவர்களின் தந்தை இசைப் புலமையுடையவராகத் திகழ்ந்தமையால் மகனையும் இசைக் கலையிற் புலமை எய்துவிக்க முயன்றார். ஆனால் மகனின் எண்ணமுஞ் செயலும் தமிழைக் கற்பதிலும் தமிழறிஞருடன் உரையாடுவதிலும் செல்வதை அவர் விரைவில் உணர்ந்தார். மகனின் இயல்பான தமிழ்ப் பற்றினை உணர்ந்தவுடன் அவர் அதற்குத் தடையாகவில்லாமல் மகனை ஊக்குவித்து வந்தார். சாமிநாதையர் தம் பதினாறும் வயதில் திருவாவடுதுறை யாதீனத்து மா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் தமிழ் பயிலச் சென்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் திருநாகைக்காரோணப் புராணம், நைடதம், திருக்குடந்தைத் திரிபந்தாதி முதலிய நூல்களைக் கசடறக் கற்கத் தொடங்கினார். சாமிநாதையர் ஆசிரியரின் அன்பையும் ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள் சுப்பிரமணிய தேசிகரின் அன்பையும் மிக விரைவிற் பெற்றுவிட்டார். சாமிநாதையர் கல்வி தொடங்கி ஐந்து ஆண்டுகளில் தம் ஆசிரியரை இழந்தார். அதற்குப் பின் பண்டாரச் சந்நிதிகள் சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடம் மேலும் நான்கு ஆண்டுகள் தமிழைக் கற்றார். அவ்வாறு கற்கும் பொழுது சில மாணாக்கர்களுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார்.

### தமிழாசிரியர்
(1880-1919)

கும்பகோணக் கல்லூரியிற் தலைமைத் தமிழாசிரியராயிருந்துவந்த தியாகராச செட்டியார் அவர்கள் வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் படித்தவர். சாமிநாதையரின் தமிழ்ப் புலமையினை ஆசிரியர் வாயிலாக அறிந்திருந்தார். தியாகராச செட்டியார் அவர்கள் 1880ம் ஆண்டில் ஆசிரிய வேலையிலிருந்து இளைப்பாறினார்கள். அவர்கள் அப்பதவியினைச் சாமிநாதையர் அடையத் துணை செய்தார். சாமிநாதையர் பதின்மூன்று ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியராகக் கும்பகோணக் கல்லூரியிற் கடமையாற்றினார்.

1903ம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரிக்கு இவர்கள் மாற்றப்பட்டார். அக் கல்லூரியில் பதினாறு ஆண்டுகள் (1903-1919) வேலை பார்த்தார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முன்னோடியாக மீனாட்சிக் கல்லூரி 1924ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. டாக்டர் இராசா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சாமிநாதையரைத் தமிழ்க் கல்லூரியின் தலைவர் பதவியினை ஏற்குமாறு வற்புறுத்தினார். ஐயர் அவர்களும் அப்பதவியினை ஏற்று மூன்றாண்டுகள் தொழிலாற்றினார்கள். அவர்கள் தமிழாசிரியராகக் கடமையாற்றிய பொழுதெல்லாம் பல மாணாக்கர்களும் தமிழன்பர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்று படித்து வந்தார்கள். அவர்கள் ஆசிரியத் தொழிலிற் சிறந்து விளங்கினாரென்பதனை அறிவதற்கு அவர்கள் கூற்றுக்கள் துணை செய்கின்றன.

"ஆசிரியர்களிடத்திலுள்ள குறைபாடுகளையெல்லாம் விளம்பரப் படுத்துவதில் மாணாக்கர்களுக்கு ஒரு தனி ஊக்கம் இருக்கும். ஆனால் தம்முடைய ஆசிரியர் சிறந்தவர் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டால் அவர்களுக்கு உண்டாகும் அன்பு வேறு விதமாகவே இருக்கும். தங்கள் வாழ்நாள் முழுதும் தங்கள் ஆசிரியர்களை அவர்கள் போற்றி வருவார்கள். அத்தகைய மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உண்டாகும் அன்பு மிக உயர்ந்தது. ஆசிரியராக இருக்கும் கால முழுவதும் இன்பமாக இருப்பதற்கு அவ்வன்பே உதவி செய்யும்" — நல்லுரைக் கோவை 37-38.

### பதிப்பாசிரியர்

ஐயர் அவர்களைப் பதிப்புத் துறைக்கு ஆற்றுப்படுத்திய பெருமை கும்பகோணத்தில் முன்சிப்பாகக் கடமையாற்றிய சேலம் இராமசுவாமி முதலியாரைச் சாரும். திருவாவடுதுறையாதீனத்துத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் வேண்டுகோளுக்கிணங்கி ஐயரவர்கள் இராமசுவாமி முதலியாரைக் கண்டார். முதலியார் அவர்கள் ஐயரவர்கள் கற்ற நூல்களின் பட்டியலைக் கேட்டவுடன் மகிழவில்லை. பழைய நூல்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலியவற்றினை ஐயர் அவர்கள் படித்திருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார். சைவ ஆதீனக் கல்வி பெற்றவராகையால் பிறசமய நூல்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படவில்லை. முதலியார் அவர்கள், ஐயரவர்களிடம் சிந்தாமணியின் ஏட்டுப் பிரதியினைக் கொடுத்து அதனைப் படித்து வருமாறு பணித்தார். சிந்தாமணியின் பொருளை உணர்வதற்குச் சைனர் பலரின் உதவியை ஐயரவர்கள் நாடினார். அந்நூலின் கையெழுத்துப் பிரதிகளைப் பெறுவதில் ஊக்கங்கொண்டார். அவற்றினைப் பெறுவதற்கு அவர்கள் அடைந்த துன்பம் கூற முடியாதது.

"சுவடி தேடுங்காலங்களில் நான் பலவிதமான துன்பங்களை அடைந்தவன். பலவிடங்களில் சுவடிக்குரியவர்களைத் தேடிச் சென்று அலைந்து கால்கள் தேய்ந்து போயின. சிலர் வீட்டில் இருந்து கொண்டே இல்லையென்று சொல்லியனுப்பி விடுவார்கள். சிலர் பலமுறை வரச்சொல்லி அலைக்கழிப்பார்கள். சிலரிடம் எவ்வளவோ நயந்து கெஞ்சிப் பிணை கொடுத்துச் சுவடிகளைப் பெறவேண்டியிருக்கும், சிலரிடம் அவமதிப்புக் கூட அடைந்திருக்கிறேன்" —நல்லுரைக்கோவை 159.

ஐயரவர்கள் 3145 செய்யுட்கள் கொண்ட சிந்தாமணியின் இருபத்துமூன்று பிரதிகளைப் பெற்று படித்து வந்தாரெனின் அவர்களின் உழைப்பினை நாம் என்னென்று சொ[illegible] களைக் கற்பது எளிதன்று. கொம்பிற்கும் சுழிக்கும் ரகரத்திற்கும் காறுபுள்ளிக்கும் வேற்றுமை காணுதல் வேண்டும். மெய்யெழுத்துக்கள் புள்ளியில்லாமல் எழுதப்பட்டிருக்கும். இடையின றகரமும் வல்லின றகரமும் வேற்றுமையில்லாமல் எழுதப்பட்டிருக்கும். எழுத்துக்கள் பல மிகுந்தும் குறைந்தும் பொருள் மயக்கத்தினை ஏற்படுத்தும். இவற்றினையெல்லாம் இராமசாமி முதலியார் போன்றவர்கள் அளித்த ஊக்கத்தினால் பொறுமையுடன் ஆராய்ந்து 1887ம் ஆண்டில் சிந்தாமணியைப் பதிப்பித்தார். யாழ்ப்பாணத்து சி. வை தாமோதரம்பிள்ளையவர்கள் இந்நூலினை "விரைவிற் பதிப்பித்துப் பிரகடனம் செய்யும்படி பலமுறை தூண்டியமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன்" என்று ஐயரவர்கள் முகவுரையிற் குறிப்பிட்டுள்ளார்.

ஐயரவர்கள் சிந்தாமணிப் பதிப்புடன் நின்றுவிடாமல் பத்துப்பாட்டு, புறநானூறு ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், குறுந்தொகை, முதலிய சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய தொடர்நிலைச் செய்யுட்களையும் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம், வில்லைப் புராணம், பழைய திருக்காளத்திப் புராணம், திருக்குடந்தைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், சூரைமாநகர்ப் புராணம், தனியூர்ப் புராணம், மண்ணிப்படிக்கரைப் புராணம், விளத்தொட்டிப் புராணம், ஆற்றூர்ப் புராணம், தியாகராச லீலை முதலிய புராணங்களையும், நன்னூலுக்கு சங்கரநமச்சிவாயர், மயிலைநாதர் உரைகள், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களையும், தக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி, திருமயிலைத் திரிபந்தாதி, திருமயிலை யமக அந்தாதி, சங்கர நயினார் கோயிலந்தாதி, திருக்காளத்தி நாதருலா, திருவாரூருலா, திருவாரூர்க் கோவை பழமலைக்கோவை, மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது. அழகர் கிள்ளைவிடுதூது, புகையிலை விடுதூது, சரபேந்திர பூபாலர் குறவஞ்சி, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் முதலிய சிற்றிலக்கியங்களையும் குமரகுருபரர், சிவக்கொழுந்து தேசிகர், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தியாகராச செட்டியார் முதலியோரின் பிரபந்தத் திரட்டுக்களையும் பதிப்பித்தார்.

இவரின் பதிப்புக்கள் நூல் நுவலும் பொருள் பற்றிய முகவுரை, நூலாசிரியர் பற்றி அறியக்கூடிய வரலாறு, அடிக்குறிப்புக்கள், பாடபேதங்கள், ஒப்புமை காரணமாக பிறநூல்களிலிருந்து மேற்கோள்கள், செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அரும்பத முதலியவற்றின் அகராதி முதலிய சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. பழைய நூல்களில் உரையாசிரியர் எவ்வகையில் ஒரு நூலைக் கையாண்டனரென்பதையும் திரட்டிப் 'பிரயோக விளக்கம்' என்ற தலைப்பில் தம் பதிப்புக்களில் வெளியிட்டார். இவரின் குறுந்தொகைப் பதிப்பிலுள்ள நூலாராய்ச்சி, பாடினோர் வரலாறு முதலிய பகுதிகள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுகின்றன. மணிமேகலை, புத்த சமயத்தைக் கூறுவதால் 'புத்த சரித்திரம்' 'பௌத்த தருமம்' 'பௌத்த சங்கம்' என்னும் பகுதிகளைப் பொருத்தமாகத் தம் பதிப்பிற் சேர்த்துள்ளார்.

மாக்சு முல்லர் (Max muller) ஒல்டன்பர்க்கு (Oldenberg) மோனியர் வில்லியமசு (Monier Williams) முதலிய மேனாட்டு அறிஞர்களுடைய கருத்துக்களையும் 'பௌத்த தருமம்' என்ற பகுதியில் தெரிவித்துள்ளார். நூல்களின் கையெழுத்துப் பிரதிகளைப் பெறுவதற்கு ஐயரவர்கள் வெளிநாட்டு அறிஞருடன் செய்தித்தாள் வாயிலாகவும், கடிதங்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டார்கள். பாரிசு நகரினைச் (Paris) சார்ந்த பேராசிரியர் சூலியன் வின்சன் (Julian Winson) இலங்கையராய பொ. குமாரசாமி முதலியோரைக் கொண்டு முறையே பாரிசிலும் இங்கிலாந்திலுமுள்ள கையெழுத்து நூலகங்களில் சிலப்பதிகாரத்தின் கானல்வரி, வழக்குரை காதை முதலிய பகுதிகளுக்கு உரையடங்கிய கையெழுத்துப் பிரதி இருக்கிறதாவென்று தேடுவித்தார்கள். மணிமேகலையில் காணப்படும் சிக்கலான புத்த சமயவுண்மைகளை அறிவதற்கு வித்தியோதயக் கல்லூரியின் (தற்பொழுது பல்கலைக் கழகம்) தலைவராகிய சிறிசுமங்களர் என்பவரின் உதவியைப் பொ. குமாரசுவாமிகள் வாயிலாக நாடினார். இவ்வாறு ஐயரவர்கள், தாம் மேற்கொண்ட பதிப்பு முயற்சிக்காக மெய் வருத்தம் பாராது பசி நோக்காது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது உழைத்தார்கள்.

நூற் பதிப்பின் பொருட்டுத் தம் வறுமையையும், அறிவுப் பசியையும் நீக்கியவர்களையும் கையெழுத்துப் பிரதிகள் உவந்தளித்தவர்களையும் பதிப்பு வேலையில் உடனிருந்து ஒத்துழைத்தவர்களையும் ஐயரவர்கள் நன்றியுணர்ச்சியுடன் முகவுரைகளிற் பாராட்டியிருப்பது அவர்கள் பதிப்புத் துறையில் கையாண்ட நேர்மையைத்தான் எமக்குப் புலப்படுத்துகிறது. கீழ்வரும் பகுதி அவர்களின் அடக்கத்திற்கும் சான்றாண்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். "சிந்தாமணிப் பதிப்பில் என் அறியாமையினால் சில பிழைகள் அமைந்ததுண்டு. நூற் பெயர்கள், புலவர் பெயர்கள், முதலியவற்றில் பிழையான உருவங்களை முதற் பதிப்பிற் காணலாம். அவற்றை நாளடைவில் திருத்திக் கொண்டேன். மனிதன் சிற்றறிவால் ஆராய்ந்து அமைக்கும் ஒன்றை எப்படி முடிந்த முடிபென்று கொள்ள முடியும்?"—என் சரித்திரம்.

இக்காலத்தில் ஒரு நூலின் இரண்டாவது அல்லது மூன்றாவது பதிப்பு, நூலாசிரியரின் புதிய முகவுரையுடன் வேறு எவ்வகையிலும் மாற்றமின்றி வெளிவருவதை நாம் காணுகின்றோம். ஆனால் ஐயரவர்கள் ஒரு நூலை இருமுறை அல்லது மும்முறை பதிப்பிப்பதாயின் அப்பதிப்புக்களில் பல புதிய விளக்கங்களும் பிழை திருத்தங்களும் காணப்படும்.

### நூலாசிரியர்

ஐயரவர்கள் நூற்பதிப்பில மட்டுமன்றி நூலாக்கத்திலும் சிறந்து விளங்கினார். அவர்கள் கலைமகள், ஆனந்தவிகடன் முதலிய தென்னிந்தியச் சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதியுளார். 'நான் கண்டதும் கேட்டதும்,' 'புதியதும் பழையதும்' நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி, முதலிய நூல்களை ஆக்கியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகம், அவர்கள் 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்' பற்றிப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பத்துச் சொற்பொழிவுகளை வெளியிட்டுள்ளது. 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்ற தலைப்பில் அவர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சிச் சொற்பொழிவும் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றினையும் எழுத முற்பட்டார்கள். ஆனால், அதனை எழுதி முடிக்குமுன் அவர்களை நாம் இழந்துவிட்டோம். ஆயினும் அவர்கள் எழுதி முடிவுபெறாத 'என் சரித்திரம்' நூல்வடிவம் பெற்றுள்ளது. மாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றினையும் எழுதி, வெளியிட்டுள்ளார்கள். சங்கீத மும்மணிகள், உதயணன் கதைச் சுருக்கம், மணிமேகலைக் கதைச் சுருக்கம் முதலிய நூல்களும் இவர்களால் எழுதப்பட்டவை.

ஐயரவர்கள் இயற்றிய நூல்களின் உரைநடை அவர்கள் பதிப்புத்துறையில் ஈடுபட்டிருந்தபொழுது கையாண்ட உரை நடையினின்றும் வேறுபட்டது. இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பொழுது தம் அறிவிற்கேற்ற இலக்கிய நடையினைக் கையாண்டார்கள். உரை நடை நூல்களை இயற்றும் பொழுது அவற்றினைப் பலரும் படித்தின்புறுமாறு எளிய நடையில் எழுதினார்கள். உண்மையில் அவர்களின் உரைநடை நூல்கள் அவர்களின் ஆற்றலுக்கு மாசு தேடின. பலர், அவற்றினை அவர்கள் பெயரில் பிறர் எழுதினர் என்பார். இத்தகைய பழிப்புரைக்குக் காரணம் ஐயரவர்கள் பாமரரும் படித்தறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதியதினைப் பலர் அறியாமையே.

ஐயரவர்களின் உரைநடை நூல்கள், சிறப்புக்கள் பலவற்றினைக் கொண்டுள்ளன. உரையாடற் பகுதிகள், நகைச் சுவை, எளிய நடை முதலிய பண்புகளை நாம் அவர்களின் நூல்களிற் காணலாம். அத்திபூத்தல், துறவியின் தோற்றம், இடித்த புளி, பொன்காத்த பூதம் முதலிய உவமைகளும் சினத்திற்குத் தாளம்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருவும் கென்னடியும் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கென ஒரு சொல்
என்னிட முளது.
என் கல்லறை மீ(து)
எழுதுவன் நானே;
'உலகுடன் எனது போர்
ஊடலே' என்று.

அவரது கவிதைகள் எளிமையும் இனிமையும் மிளிர்வன, அவற்றில் ஒரு ஆழ்ந்த உணர்ச்சி ஊடாடக் காணலாம்; இந்த உணர்ச்சி பளிச் சென்று தெரியும். படிப்பவரிடையே ஒரு பரிவை ஏற்படுத்தும். ஏனெனில், அழகுக் கண்கள் கொண்டு பார்த்து, அன்றாட நிகழ்ச்சிகள் பற்றி எழுதுகிறார், கவிஞர்; அன்றாடம் மனிதரிடையே தோன்றும் உணர்ச்சி வேகங்களைப் பரிவுடன் கண்டு, இரக்கத்துடன் எழுதுகிறார்.

நாம் அனைவரும் கண்டுள்ள காட்சிகள், நாம் அனைவரும் உணர்ந்துள்ள உணர்ச்சிகள் பற்றியே அவர் கூறுகிறார். எனினும், அவர் சொல்லும் விதத்தில் எத்தனையோ புதுமைகளைக் காண்கிறோம்; இன்பங்களை நுகர்கிறோம்; துன்பங்களை உணர்கிறோம். இதுவே இலக்கியச் சிறப்பு.

## கவிஞன் பிறந்தான்

1874 மார்ச் 26-ந் தேதி ஸான்பிரான்சிஸ்கோ நகரில் பிராஸ்ட் பிறந்தார். அவரது முதல் கவிதை நூல் வெளியாகுமுன் அவருக்கு ஏறத்தாழ 40 வயதாகிவிட்டது நூல் வெளியானது, இங்கிலாந்தில்; அமெரிக்காவில் அல்ல, 1963-ல் 89-வது வயதில் அவர் காலமானார்.

செய்யுள் நூலுக்குரிய அரியபுலிட்ஸர் பரிசு நான்கு முறை அவருக்குக் கிடைத்தது. அவரது 75-வது பிறந்த நாளன்று அமெரிக்க செனட் சபை அவருக்குத் தனிச் சிறப்புச் செய்தது, இது வேறு யாரும் பெறாத ஒன்று.

அவர் ஒரு கவிஞராக ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முந்திய 20 ஆண்டுக் காலத்தில் ஆலைக் கூலியாகவும், பள்ளி ஆசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், பண்ணையாளாகவும் வேலை பார்த்திருக்கிறார். பின்னர், பல்கலைக் கழகங்களில் கற்பித்தார். 43 ஆண்டுகள் இன்பமாக மனைவியுடன் வாழ்ந்தார். அமெரிக்காவின் ஆஸ்தான கவிஞராகக் கருதப்பட்ட அவருக்கு ஜனாதிபதி ஒருவரின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளும் முதல் கவிஞர் என்ற சிறப்பு கிடைத்தது. ஜான் கென்னடியின் பதவியேற்பே அது.

இயற்கை அவரைக் கொள்ளை கொண்டது, இந்த இயற்கையின் வழியாகவே அவர் பெரும்பாலும் தமது சொற்களில் தம்மை வெளிப்படுத்துகிறார். அவரது படைப்புகள் எளிமையாகத் தோன்றும்; வேதனையை வெளியிடும், நேருக்கு நேர் சொல்வது போலத் வெளிவாக இருக்கும்.

## கவிதையின் பிறப்பு

"உணர்ச்சியால் தொண்டை அடைத்துக்கொள்ளும் போது; குடும்பத்தையோ, காதலையோ நினைத்து ஏங்கும்போது செய்யுள் பிறக்கிறது. உணர்ச்சியை வெளியிடுவதும், உள்ளம் நிறைவு பெறவும் ஒரு வழியே அது" என்று ஒரு முறை கவிஞர் பிராஸ்ட் கூறினார்.

பாமர மக்களே அவருக்குத் தெரிந்தவர்கள்; அவர்களில் ஒருவராக அவர் இருந்தார்; அவர்களிடையே அவர் வாழ்ந்தார். அவர் கண்டு மனம் பறிகொடுத்த இயற்கைக் காட்சிகள், அவரது குழந்தைப் பருவம் முதலே அவரிடம் முகிழ்ந்த உணர்ச்சிகள் ஆகியவையே அவரது பாடல்களாக உருப்பெற்றன. அவருக்கு உண்மையெனப் பட்டவை பற்றி அவர் எழுதுகிறார்; பெரும்பாலும் பேசுவது போன்ற அவருக்கேயுரிய எளிய தனி மொழியில் அவர் எழுதுகையில் அவை புத்துயிர் பெறுகின்றன.

## வெற்றியின் இரகசியம்

பிராஸ்ட் எழுதிய கவிதைகளின் சிறப்புக்கு ஒரு காரணம், அவர், உயிர் வாழ்ந்த 89 ஆண்டுக் காலத்தில் ஒரு போதும் தம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையையோ, மக்களையோ மறந்தவரல்ல. அகத்திலும் புறத்திலும் அவர் ஒருபோதும் தனியராக இருந்ததில்லை. அவர் வாழ்க்கையில் இரண்டற ஒன்றியவர். மக்களின் அடிப்படையான பிரச்னைகள் குறித்தே அவர் கவலைப்பட்டார்; காலத்தோடு தேய்ந்து மாயும் அற்ப பாறுபாடுகளை அவர் பொருட்படுத்தவில்லை. நிலையான உண்மைகளே அவரது அக்கறை.

அவரது அரிய அற்புதமான செய்யுள்களில் ஒன்றான "கூலிக்காரனின் மரணம்" உள்ளம் உருக்கும் ஒன்று, மக்கள் குலத்திடம் அவர் கொண்டிருந்த பரிவும் பாசமும் அதில் கொப்பளிக்கின்றன. "பெருமையுடன் நினைத்துப் பார்க்கக் கடந்த காலமோ, நம்பிக்கையூட்டும் வருங்காலமோ இல்லாத" தேய்ந்து ஒய்ந்து போன ஒரு கிழவனைப் படிப்படியாகப் படம் பிடித்துக் காட்டுகிறார், கவிஞர். இருந்தும் அக் கிழவன் தன்னுலுள்ள பயன் பற்றியும், தனது தன்மானம் பற்றியும் தான் கொண்டிருந்த பிரமையைத் தனது மரணம் வரை நிலை நிறுத்த அரும்பாடுபடுவதை நாம் காண்கின்றோம்.

## மனமும் வருணனையும்

இயற்கையிடம் அவர் மாளாக் காதல் கொண்டு, அதன் வண்ண வண்ணத் தோற்றங்களில் லயித்துப் போயிருந்த போதிலும் வெறும் வருணனை மட்டும் கவிஞர் பெருமானுக்குத் திருப்தி தருவதில்லை. கவிஞனின் உள்ளம் அவன் எழுத்தில் பிரதிபலிக்க வேண்டும். அவன் மனம் எவ்வளவு ஆபத்தானதாயிருப்பினும் சரி என்று நினைத்தவர், அவர்.

உள்ளம், உணர்ச்சி இவற்றின் கலவையே கவிதை என்பது அவரது கருத்து; எனவே அவரது படைப்பில் நிலைத்து வாழும் ஆழமும் ஆற்றலும் உண்டு.

அவர் இயல்பாகவே அமெரிக்க நாட்டுக் கவிஞர்; தன்னையே பறிகொடுத்திருந்த நியூ இங்கிலாந்து நிலத்தில் விளைந்த ஒரு பாத்திரம் அவர். இருப்பினும் அவரது செய்யுட்கள் உலகப் பொதுமை வாய்ந்தவை. இதற்கு வேண்டிய சான்றுகள் அவரது படைப்பிலேயே உண்டு.

# கோதையரின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னமாகக் கருதப்படுகிறது. சிரசின் பாதுகாப்புக்காக இயற்கை அரணாக அமைந்த சிகையானது சிரத்தையுடன் பாதுகாக்கப்பட வேண்டியது.

சிகைக்கு அளவுக்கு மீறிய சூடோ, அளவுக்கு மீறிய குளிரோ கூடாது. இரண்டும் சமமாகவே இருத்தல் அவசியம்.

முடியைப் பாதுகாப்பதற்கு முதன் முதலில் அவசியமானது சுத்தம். தலைமுடியைக் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாரத்துக்கு ஒரு கடவையோ இருமுறையோ தலை கழுவப்படல் வேண்டும். அத்துடன் முடியினைப் பேணுவதற்காக குறிப்பிட்ட எண்ணெய் தைலங்களைப் பாவித்தல் வேண்டும்.

## முழுக்கு

தலையிலே நீர் ஊற்றிக் குளிக்கும் பொழுது தலையில் படிந்துள்ள அழுக்கு நீங்குவதுடன் மயிர்க்கால்களுக்கு வேண்டிய நீரும் உட்கொள்ளப்படுகிறது. அழுக்கை நீக்குவதற்கு சவர்க்காரம், 'ஷம்போ'போன்ற பொருட்களைப் பாவிப்பதைவிட சுத்தமான சீயக்காய், வெந்தயம் இவ்விரண்டையும் கொதி நீரில் அவித்து தலையில் தேய்த்துக் கொள்ளலாம்.

(சிகைக்காய் தான் செய்யும் முறையினை முன்பே இப்பகுதியில் குறிப்பிட்டுள்ளோம்)

சவர்க்காரம், 'ஷம்போ' போன்ற வற்றால் தலை முடியிலேயுள்ள ஒருவகை பசைத் தன்மை நீங்கி, மயிர்கள் பலம் இழந்து விடுகின்றன.

அடுத்த வாரம் முடியும்

**அடுத்த இதழில்**

இலங்கையில்
**மீன் பிடித் தொழில்**
எதிர்பாருங்கள்!

# நடமாடிய தமிழ்ப்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)


போடுதல், வாயில் மண்ணைப் போடுதல், பறையறைந்து கொண்டு திரிதல், முதலிய மரபுத் தொடர்களும் அவர்களின் நூல்களில் இடம் பெறுகின்றன. அவர்கள் புதியதும் பழையதும் என்ற நூலிற் கையாண்டுள்ள "அன்றாடங் காய்ச்சிகள்" என்ற சொற்றொடர் பொருளாழம் உள்ளது. ஆங் ஆங்கிலத்தில் "Hand to mouth" என்ற மரபுத் தொடரோடு பொருளில் ஒத்துள்ளது. அவர்களின் தெளிவான உரை நடைக்கு ஓர் எடுத்துக் காட்டு. "மூப்பனுருடைய அன்புடைமை அப்பொழுது யாவருக்கும் வெளியாயிற்று. 'கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக் கொடுப்பதையும் கடன் தந்தவர் வட்டியுடன் பெற்றுக் கொள்வதையும் உலகத்தில் கண்டிருக்கிறோம். கடன் வாங்கினவர் திருப்பிக் கொடுத்தால் கொடுத்தவர் அதைப் பெற்றுக்கொள்ளாமல் பின்னும் தொகை சேர்த்துக் கொடுப்பது 'புதுமையிலும் புதுமை' என்று யாவரும்வியந்தார்கள்". ஐயரவர்கள் பிறமொழிச்சொற்களைத் தமிழாக்கஞ் செய்யாமல் கட்டுரையிற் பயன்படுத்தினார்கள். தூய தமிழ்ச் சொற்களினால் உணர்த்தக் கூடிய கருத்துக்களையும் பற்பல இடங்களில் வடமொழிச் சொற்களால் உணர்த்தினார்கள். அவர்களின் உரை நடையில் இக் குறைபாடுகளே உண்டெனலாம்.

நாம் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் அறுபத்திரண்டாண்டுத் (1880-1942) தமிழ்த் தொண்டினை நோக்கும பொழுதெல்லாம், அவர்களைத் தமிழை உய்விக்க வந்த கடவுளாகக் காண்கின்றோம். மேசை, மின்விசிறி, தட்டுப் பொறியாளர், தொலைபேசி, நவீன வசதிகளுடன் அவர்கள் தமிழ்த் தொண்டாற்ற முற்படவில்லை, இச் சூழ்விலே வாழ்ந்திருப்பின் அவர்கள் ஒரு கால் தமிழைப் புறக்கணித்திருக்கவும் கூடும். இராமலிங்க அடிகள் வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடியது போல டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும் வாடிய தமிழ் ஏட்டுச் சுவடிகளைக் கண்டபொழுதெல்லாம் உள்ளம் வாடப் பெற்றார்கள். அவர்கள் அவற்றினை அச்சில் உயிர்ப்பித்துப் பதிப்பித்த பொழுதுதான் மகிழ்ச்சி எய்தினார்கள்.

வாழ்க டாக்டர் சாமிநாதையரின் தமிழ்ப்பணி!

வாழ்க நற்றமிழ்!

# இந்திய தூதுவர் பீமசேன் சச்சார்



பல மாகாணங்களில் தேசாதிபதியாக விளங்கியவரை—பஞ்சாப் மாகாணத்தின் முதன் மந்திரியாகவிருந்தவரை—இலங்கை நாட்டுக்கு இந்தியா தூது அனுப்பியிருக்கிறது.

இலங்கையில் வாழும் பல்லின மக்களும் இணைந்து வாழக்கூடிய இதுவரை வாட்டிய பேதமைகள்—வேதனைகள் ஓரளவு நீங்கப்பெற வாய்ப்புகள் தோன்றியிருக்கக் கூடிய வேளையிலே, அரசியல் சதுரங்கத்தில் பலபடி ஆடி அனுபவங்களைக் கண்ட டாக்டர் பீம்சேன் சச்சார் அவர்களை வரவேற்பதில் இலங்கை பேருவகை அடைகிறது.

சீனாவின் சீற்றத்தையும் பாகிஸ்தானின் பயமுறுத்தலையும் பார்த்து பச்சாதாபப் பட்டுக் கொண்டிருந்த இந்தியா இலங்கையில் போக்கைக் கண்டுதான் உண்மையில் ஏங்கியது என்று கூறினால் மிகையாகாது. கடந்த காலம் இலங்கை சென்ற பாதை அண்டைய நாடான இந்தியாவைப் பொறுத்த வரை கவலையை அளித்தது. இன்று ஏற்பட்டு வரும் மாற்றத்தினால் இந்தியத் தாய் ஓரளவு நிம்மதி அடையவே செய்வாள்.

ஆகவே, டாக்டர் சச்சார் போன்ற ஒரு மேதை இந் நாட்டுக்குத் தூதுவராக வரும் வேளை சுபவேளை-இரு நாடுகளினதும் பண்டைய உறவுக்கு மேலும் உரம் அமைக்கும் பொழுது, என்று கூறுகிறோம்.

டாக்டர் பீம்சேன் சச்சார் அவர்கள் 1893-ம் ஆண்டு டிசம்பர் முதற்தேதி பிறந்து, பஞ்சாப்பில் சட்ட வல்லுனராகி, காந்தியடிகளின் சட்ட மறுப்பு இயக்கங்களில் பங்கு கொண்டுழைத்தார். காங்கிரஸ் இயக்கத்தில் இவர் காட்டிய செயல் திறமைகளினால் பஞ்சாப் காங்கிரஸ் கமிட்டி செயலாளராகி இறுதியில் 1946-47-ல் பஞ்சாப் நிதி அமைச்சராகவும், 1949 லும் 1952 முதல் 1965 வரையிலும் பஞ்சாப் முதல் மந்திரியுமானார். காங்கிரஸ் கட்சியின் உப தலைவர்களில் ஒருவராகவும் இருந்துள்ளார்.

ஒரிசா மாகாணத்தின் தேசாதிபதியாக 1956-57-ம் ஆண்டுகளில் கடமை பார்த்துள்ளார். பின்னர் ஆந்திரப் பிரதேசத்தின் கவர்னராக 1959 முதல் 1962 வரை செயல் புரிந்துள்ளார்.

தேசியப் பற்றும், செயலாற்றும் திறமையும் கொண்ட இக் காந்திய தொண்டருக்கு இப்பொழுது 72 வயதாகிறது. இலங்கையில் வாழும் இந்திய மக்களின் நலத்தில் மட்டுமல்லாமல் இந்நாட்டில் வாழும் சகல மக்களிடத்திலும் நிறையன்பு பூண்டொழுகுவார், டாக்டர் சச்சார் என்று எண்ணுவோமாக.

**வேல் படை மருந்து**

**வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்**

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

**விலை ரு. 1-50** **தபால் சிலவு வேறு**

தயாரிப்பவர்கள்:

**S. P. S. ஜெயம் அன் கோ.,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்!

**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சாந்தி'க்கு தடை விதிக்கக் காரணம் என்ன?

## தமிழகத்தில் பரபரப்பு! நடிகர்களின் வியப்பு!

## பொருத்தமற்ற கதை என தணிக்கை சபை தீர்ப்பு

ஏ. எல். எஸ். தயாரித்த 'சாந்தி' என்ற தமிழ்ப் படத்தை தமிழக தணிக்கை சபையினர் தடை செய்துள்ளனர் சிவாஜி கணேசன், ராஜேந்திரன், விஜயகுமாரி, தேவிகா முதலானோர் நிறம்பட நடித்துள்ள இப்படம் ஏப்ரல் 10ம் திகதி தமிழகமெங்கணும் திரையிடப்பட விருந்தது.



பொருத்தமில்லாத கதை அமைப்பையுடையதானமையினாலேயே இதைத் தடை செய்துள்ளோம் என்று தணிக்கை சபையார் காரணம் கூறியுள்ளனர். ஆனால் இப்படத்தை தயாரிப்பு காலம் முதல் கொண்டு அவதானித்த நமது நிருபர், இப்படத்தை தடை செய்ய வேண்டியதற்கு தணிக்கை சபையார் காட்டியுள்ள காரணம் பொருந்தாது என்று கூறுகிருர்.

'சாந்தி' படத்தில் தமக்கு மிகவும் பொருத்தமான பாகத்தை அளித்துள்ளார்கள் என்று நடிகை விஜயகுமாரி கூறிய செய்தியை ஏற்கனவே இப்பகுதியில் வெளியிட்டிருந்தோம். இப்படம் தணிக்கை சபையாரால் தடைசெய்யப்பட்டதையிட்டு தாம் பெரிதும் வருந்துவதாகவும், தணிக்கை சபையின் முடிவு தமக்குப் பெருத்த ஆச்சரியமாக விருப்பதாகவும் விஜயகுமாரி கூறுகிருர்.

### சிவாஜியின் வருத்தம்

'இத்தகைய அருமையான கதை அமைப்பை பொருந்தாதது எனக் கூறுகின்றார்க

ளே' என்று சிவாஜிகணேசன் வருத்தப்பட்டார். இயற்கைக்கு மாருக இப்படத்தில் எதுவுமே இல்லை என்றும், ஆபாசம் என்று கூறக்கூடிய நிலையிலும்கடுகத்தனை காட்சியும் கிடையாது என்றும் அவர் கூறினுர்.

### நமது நிருபர்

இதுதவிர தமிழ்த்திரைப் படத்துறையிலுள்ள முக்கியமானவர்களே இப்படத்தை பார்த்து விட்டு தணிக்கை சபையின் முடிவை யொட்டி வருத்தம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### இதுதான் கதை!

தமிழகத்துக்கு பொருத்தமற்ற கதையமைப்பு என்று வர்ணிக்கப்படும் 'சாந்தி'யின் கதை இதுதான்:—

இரு கண்களிலும் பார்வையற்ற சாந்தியை ஒருவன் தீண்டிவிடுகிருன். அவளுக்கு சில காலத்தின் பின்னர் கண்களில் பார்வை கிடைக்கிறது. கண்கள் திறபடும் போது அவள் முதற்பார்வை வேறு ஒரு வாலிபனின் மீதுபடுகிறது. அவனே அவளை முதன் முதலில் தீண்டியவன் என்று சாந்தி கருதி விடுகிருள்.


சாந்தியின் கள்ளமில்லாத உள்ளத்தில் பதிந்துவிட்ட கறையைப் போக்க முடியாமல் அவளை முன்பு தீண்டியவனும், அவனுடைய நண்பனும் முயற்சி எடுக்கின்றனர். சாந்திக்கு உண்மை புலப்படும் வேளையில் முடிவு விபரீதமாகிறது. முடிவு சோக முடிவுதான்.

சிவாஜிகணேசனின் நடிப்பு இப்படத்தில் ஒரு புகழ்



பாணியாக அமைந்து விட்டதாக ஒளிப்பதிவாளர் கர்ணன் நமது நிருபரிடம் கூறினுர். இத்தகைய உணர்ச்சிகரமான உன்னதமான சித்திரம் தமிழகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்என்பது உண்மையே என்னும் இதனை தடை செய்ய வேண்டிய அவசியம் எதுவுமே இல்லை என்று திரு. கர்ணன் கூறினுர்.

தடையை நீக்கும்படி தயாரிப்பாளர் திரு. ஏ. எல். சீனிவாசன் மேலிடத்துக்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாரம் இப்படம் திரையிடப்படும் என்று பேசப்படுகிறது.



கல்லூரியில் படிக்க வந்த கட்டிளங்காளையான ஜெய்சங்கர் தமிழ்த்திரை வானில் பிரவேசித்து, எடுத்தஎடுப்பிலேயே நட்சத்திரப் பதவியை எட்டிப்பிடித்துவிட்டார். அவரை அப்பதவிக்குத் உயர்த்தியவர் சிட்டாடல்ஸ் உரிமையாளரான ஜோசப் தளியத். ஜெய்சங்கரின் முதற்படமான 'இரவும் பகலும்' என்டர் டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு அதிவிரைவில் வருகிறது. கேரளக் கடற்கரை ஓரத்தில் தென்னைமரச் சோலையில் ஓய்வெடுக்கிருர் ஜெய்சங்கர்.

## வயது வந்தவர்களுக்கு மட்டும் இரு தமிழ்ப் படங்கள்

திடீரென தமிழ்த் திரைப் படங்கள் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' காட்சியளிக்கத் தலைப்பட்டு விட்டன. ஏப்ரல மாதம் தமிழகத் திரைகளுக்கு வரும் இரு படங்கள் வயது வந்தவர்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீதர் பலவர்ணத்தில் தயாரித்துள்ள 'வெண்ணிற ஆடை' வயது வந்தவர்களுக்கு மட்டும்தான் தமிழகத்தில் காண்பிக்கப்படுகிறது.

பருவத் துடிப்பால் உந்தப்படும் இளம் உள்ளங்களைக் கவர்ந்து இழுக்கக் கூடிய சுவையான பல அம்சங்களை வைத்து வெண்ணிற ஆடை தயாரிக்கப்பட்டுள்ளது. நடிகை சந்தியாவின் புதல்வி ஜெயலலிதா நீர்வீழ்ச்சியில் குளிக்கும் காட்சிகள் பல வர்ணத்தில் படமாக்கப்பட்டுள்ளனவாம்.

ஆரம்ப முதல் ஆசாபாசங்களில் ஈடுபட்டு பருவத் துடிப்பில் புரண்டு எழும் கதாநாயகி, தான் ஏற்கனவே மணமாகி விதவையானவள் என்று அறிந்ததும் சகல போகத்தையும் துறந்து விதவைகளுக்கான வெண்ணிற ஆடையில் தோன்றுகிருர். இதுதான் இப்படத்தின் கருவூலம்.

### 'கார்த்திகைத் தீபம்'

டைரக்டர் காசிலிங்கமும் மார்க்கண்டனும் சேர்ந்து எம். கே. பிலிம்ஸ் என்ற கம்பெனியை நிறுவி கார்த்திகைத் தீபத்தை எடுத்துள்ளனர். இரவும் பகலும் படத்தின் மூலம் பிரபலமடைந்து விட்ட டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக்குழு நடிகையான வசந்தா அசோகன் முதலானோர் சேர்ந்து நடித்துள்ள இப்படமும் வாழ்க்கையிலுள்ள பல அரிய அம்சங்களை வெளியிடுவதாயிருப்பதால் இதற்கும் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற முத்திரை குத்தப்பட்டு விட்டது.




## தமிழிசை மன்னர் மதுரை சோமு

தமிழகத்தில் இன்று பிரபல பாடகராகத் திகழும் மதுரை சோமு அவர்களுக்கு தஞ்சை மாவட்ட சங்கித நடன நாடக சங்கத்தினர் அண்மையில் தமிழிசை மன்னர் என்ற பட்டத்தை அளித்தார்கள்.

'கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் தேவஸ்தானத்தில் 60ம் ஆண்டு சங்காபிடேகவைபவம் நடைபெற்ற போதுதான் இப்பட்டமளிப்பும் நடைபெற்றது. இவ்விழாவில் மதுரை சோமு பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் முன்னிலையில் பல மணி நேரம் இசை மழை பொழிந்தார். இவ்விழாவுக்கு நகராட்சி மன்றத்து காங்கிரஸ் தலைவர் திரு. பி. ராமதாஸ் தலைமை வகித்தார். சங்கச் செயலாளர் திரு. பி. கே. டி. சண்முகம் திரு.. சோமுவுக்கு பொன்னுடை போர்த்தி தமிழிசை மன்னர் என்ற பட்டத்தையும் வழங்கினுர்.

—

## ஜெர்மனியில் ஒரு 'பாசமலர்'

முனிச் (டாட்) — தாமஸ் மேன் என்ற பிரபல மேற்கு ஜெர்மன் எழுத்தாளரின் 'பிளட் ஆப் தி வால்பெங்கன்" என்ற நாவலைத் தழுவித் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இரட்டைக் குழந்தைகளா [illegible] [illegible] யும் தங்கையின் காதல்



கையிலே சட்டத்தின் சான்றுகள், உள்ளத்திலே நீதியின் நாட்டம் கொண்டு புதுமையாகக் காட்சி தரும் புரட்சி நடிகர தேவர் அளிக்கும் 'நீதிக்குப் பின் பாசத்தில் இப்படிக் காணலாம்.

நிறைவேறுவதற்காக அண்ணன் செய்யும் தியாகங்களையும் சித்தரிக்கும் இந்த உருக்கமான படத்தில் அண்ணன் சிக்மண்டாக மைக்கேல் மெயினுப், தங்கை சிங்லிண்டாவாக எலினு நதேனியலும் உருக்கமாக நடிக்கிருர்கள். எழுத்தாளர் தாம்ஸ் மேனிங் மகள் எரிக்கா மேன் திரைக் கதை வசனம் எழுதியுள்ளார். பிரபல ஜெர்மன் டைரக்டர் ரால்ப் தியல் டைரக்ட் செய்திருக்கிருர். இப்படம் எல்லா உலக மொழிகளிலும் 'டப்' செய்யப்பட்டு வருகிறது.

—யூ. பி. எஸ்.



வாழ்க்கையிலேயே சோடிகளாக இணைந்து விட்ட ஏ. வி. எம். ராஜனும் புஷ்பலாதாவும் ஏதோ ஒரு சுவாரசியமான உரையாடலில் மகிழ்ந்து இன்புற்றிருக்கின்றனர். இந்த சோடியை [illegible] மாஸ் அளிக்கும் அடுத்த திரைவிருந்தான பச்சை விளக்கில் காணலாம்

நடந்த கலை நிகழ்ச்சிகள், நடைபெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமான செய்திகளை அனுப்புவோர் இத்துடனுள்ள பகுதியைக் கத்தரித்து கடித உறையின் மேல் ஒட்டி அனுப்பவும்.

**நடந்தவை நடக்கவிருப்பவை**

கலைப்பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துலகிற்கு வித்திட்ட புரட்சிக் கவி



உள்ளத்தின் உணர்ச்சியே கவி. எண்ணத்தின் எழுச்சியே புரட்சி. இவ்விரண்டின் கலப்பே கவியின் புரட்சி. இச் சிறப்பினைப் பெற்றவர் பாரதிதாசன்.

சொற்கோர்வைகளினுல் கவிதைகளை உருவாக்கி, சொல்லலங்காரத்தினுல் அவைகளை இனிமையாக்கி, சொந்த எண்ணங்களால் அங்கு புதுமைகளைப்புகுத்தி, சுய உணர்வினைத் தட்டி எழுப்பிய பெருமை அவரைச் சாரும்.

இருபதாம் நூற்ருண்டில் இணையற்ற நற்கவிகளை உருவாக்கி தமிழ்நாட்டின், முன்னணியில் விளங்குபவர் பாரதிதாசன். ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்ருெராம் ஆண்டு, சித்திரைத் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் புதுவையில் தோன்றிய இப் புலவனின் இயற் பெயர் சுப்புரத்தினம்' இவர் தந்தை பெயர் கனகசபை முதலியார்.

இளவயதிலே பிரஞ்சு மொழிப் பள்ளியில் படித்தாராயினும் அவர் தமிழ் பாடசாலையில் படித்த நாட்களே அதிகம். தமிழ் புலமைத் தேர்வு கருதி, கால்வே கல்லூரியில் தனது பதினெராவது வயதில் புகுந்த இவர். இரண்டாண்டினுள் யாவரிலும் சிறந்து விளங்கினுர் இவரின் திறன் கண்ட அரசியலார் இவரை அரசியல் கல்லூரித் தமிழ் ஆசிரியர் ஆக்கினர். அப்பொழுது அன்னுரின் வயது பதினெட்டேயாகும்.

பிறக்கும் பொழுதே தமிழ்ப் பற்ருேடு பிறந்த இவர், இளவயதிலேயே முத்தமிழிலே முதன்மை பெற்ருர். பள்ளி நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து, பார்த்தவர்களைப் பரவசம் அடையச் செய்தார். அச்சின்ன வயதிலே சிறு சிறு கவிதைகள்புனைந்து மற்றையோர்க்குப் படித்துக் காட்டிச் சிந்தை மகிழ்வார். அன்னுரின் தமிழ்ப்புலமை கண்டு அனைவரும் புகழ்ந்தனர். உள்ளம் மகிழ்ந்தனர்.

## பெருமை சேர்க்கும் புதுமைகள்

நண்பர் திருமணமொன்றில், பாரதியாரின் நாட்டுப் பாடலை இவர் பண்ணிசைத்துப் பாடியபொழுது, அதை அருகிருந்து கேட்ட பாரதியார், ஒரு கவிக்குரிய ஆற்றல் இவரிடமுண்டு என்பதை உணர்ந்து, மற்ருெரு நாள் நண்பர்கள் மத்தியில் தான் எண்ணியதைச் சொல்ல, 'எங்கே கவி இயற்றச் சொல்லுங்கள் பார்க்கலாம்' என நண்பர்கள். கேட்க, 'பாடவும்' எனப் பாரதியார் பணிக்க 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று தொடங்கும் இரு பாடல்களைப் பாரதிதாசன் உடனே பாடினுர். இப்பாடல் பலமொழிகளில், பல பத்திரிகைகளில் வெளி வந்து, அன்னுரின் திறமையைத் தமிழர்களுக்கு விளக்கியது. சக்தியின் மகிமையை விளக்கும் இப்பாடலைத் தொடர்ந்து அவர் பல பாடல்களைக் காவியங்களைத் தீட்டியுள்ளார். கருத்தைக் கவர்ந்த அன்னுரின் கதர்ப் பாட்டுக்களைப்போல் இன்று வரை யாருமே பாடியதில்லை. கீர்த்தனைக்குப் புகழ் பெற்றது அவரின் 'சுப்பிரமணியர் துதியமுது' வாழ்கைமுறை விளக்கியது அவரது 'குடும்ப விளக்கு.' வரண்ட வாழ்வைக் காட்டியது அவரது 'இருண்ட வீடு', இயற்கை அழகை இயம்பியது அவரின் 'அழகின் சிரிப்பு' முத்தமிழை உயர்த்தியது அவரின் 'தமிழியக்கம்.'

வெண்பாவிற்குப்பெருமை அளித்தது 'மணிமேகலை வெண்பா.' வீரத்தை விளக்கியது 'குறிஞ்சித்திட்டு,' காவியத்தைக் காட்டியது 'பாட்டியன் பரிசு,' புரட்சிக்கு வழிவகுத்தது 'இரணியன்,' புதுமைக்கு மெருகூட்டியது. கண்ணகி புரட்சிக் காப்பியம். இவ்வாறே அன்னுரின் அரிய படைப்புக்கள் யாவும் பலதுறைகளில் சிறந்து விளங்கின.

## திராவிட நாடு

பாரதியாரோடு பத்து ஆண்டுகள் நன்ருக ஒன்ருகிப் பழகியவர் பாரதிதாசன். பாரதத்தின் விடுதலை வேண்டிச் சுதந்திரப் போர் பாரதியார் நடத்திய போது, உடனிருந்து உதவியவர்;

ஒரு இனம் இன்னெரு இனத்தை எவ்வாறு ஆளக் கூடாது என்று கருதினுரோ அவ்வாறே, கலை. கலாச்சாரம், பண்பாடு, உறவு முறை ஆகியவற்ருல் முற்ருக வேறுபட்ட ஒரு இனம் இன்னெரு இனத்தோடு சேர்ந்து வாழுதல் இயலாத காரியம் என்பதை அவர் உணரத் தவறவில்லை. இதை அவர் அனுபவத்தால் அறிந்தபின்னரே கூறினர்.

மணிப்புருவும், மாடப்புருவும் ஒரு கூட்டில் வாழமுடியுமென்ருலும்; புள்ளிமானும் பொல்லாப்புலியும் ஒருகாட்டில் வாழ்வது கடினம் என்பதை நன்குணர்ந்த பாரதிதாசன் வட வர்பிடியிலிருந்து விடுபட விழைந்தார். அதனுல் திராவிட நாடு கோரினுர்.

"வடநாடு தென்னுட்டை
விழ்த்தச்—செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி
இடைநாளில் மட்டுமா? சென்ற
இரண்டாயிரத் தாண்டு
பார்த்தார்
விடுவாயடா தன்ன
லத்தை—உன்
விடுதலை திராவிடர்
விடுதலையி லுண்டு."

## 'எழில்இறை'

பிரிவினை கோரும் கவிஞன் குறுகிய நோக்கம் கொண்டவர் என்று நினைப்பின், அது தவறு என்பதைத் தொடர்ந்து படிப்பின் தெரிந்து கொள்வீர். தமிழைத்தன்னுயிரிலும் மேலாக மதித்த அவர், தமிழரைத் தன் உடலிலும் சிறப்பாக நினைத்த அவர், தனித் தமிழ்நாடு கோராது கூடிவாழும் தென்னவர் ஆட்சியை வேண்டுகிருர் என்ருல் அன்னுரின் கூட்டு வாழ்க்கையின் நாட்டம் நன்ருகப் புரிந்து விடும்.

"கேரளம் என்று
பிரிப்பதும்—நாம்
கேடுற. ஆந்திரம் புய்ப்பதுவும்
சேரும் திராவிடர்
சேரா தழித்திடச்
செய்திடும் சூழ்ச்சி
அண்ணே—அதைக்
கொய்திட வேண்டும்
அண்ணே."

இங்கு இவர் மொழிவழி பிரிந்து. இனவழி ஒன்றுபடும் கொள்கையை வேண்டுகிருர் என்பது ஈண்டு புரிகிறது.

## தமிழனும் அவன் தாய்மொழியும்

உயரியதோர் சமுதாயம் உருவாக வேண்டும்; அங்கு அரியதோர் ஆட்சி அமைய வேண்டும்; அவற்றில் பெரியதோர் நிலைபெண்கள்பெறவேண்டும்; யாவரும் நிறையவே கலைகள் கற்க வேண்டும்; எவரும் நிலையான கொள்கைகள் பெறவேண்டும்; முறையே மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும்; முத்தமிழ் ஓங்கவேண்டும்" என்ற அவரின் எண்ணற்ற எண்ணங்களையும் கவிஞரின் தமிழ் பற்றையும் உள்ளக் கிடக்கையும் புலப்படுத்துகிறது.

முதற் தோன்றிய ஐந்து மொழிகளில் முதன்மை பெற்று விளங்குவது தமிழ் மொழி. காலப்போக்கில் கரைந்துபோன மற்றைய மொழிகளைவிட என்றும் கன்னிமொழியாக விளங்குவது கவினுறு தமிழ்மொழி. இயல், இசை, நாடகம் மூன்ருேடும் இணைந்து நிற்கும் தமிழ்மொழி இயல்பாகவே இனிமையுடைத்து, இன்னுயிரிலும் மேலான அம்மொழி பற்றி இயம்புகிருர் நம்கவி.

"கனியிடை ஏறிய
சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்—
—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு மொழியும் பாலும்—
—தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன்
எனினும்,—தமிழை
என்னுயிர் எனபேன் கண்டீர்!
பொழிலிடை வண்டின்
ஒலியும்,—ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும்
இசையும்,—வீணை
கொட்டிடும் அமுதப்
பண்ணும்,
குழவிகள் மழலைப்பேச்சும்,—
—பெண்கள்
கொஞ்சிடும் இதழின்
வாய்ப்பும்,
விழைதுவ னேனும்,
தமிழும்—நானும்
மெய்யாய் உடலுயிர்கண்டீர்!"

அந்நியர் ஆட்சியால் தமிழர் ஆட்சி இழந்துவிட்டார்; அயலவர் ஆதிக்கத்தால் அவர் மொழி மறந்து விட்டார்; தாய்மொழி மறந்து பிறமொழியின்பிடியில் சிக்கிவிட்டார்; தமிழ்மொழி மறந்ததால் தமிழர் வாழ்வு குன்றிவிட்டார். தடுமாற்றமான இந்த நிலையைத் தடுத்துத் தாழ்வுற்றிருக்கும் தமிழருக்குத் தமிழின் மேன்மையை விளக்க விழைகிருர் புரட்சிக்கவி.

"தமிழுக்கு
அமுதென்றுபேர்!—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள்
உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்றுபேர்!—
—இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின்
விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்றுபேர்!—
—இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு
நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்!—
—இன்பத்
தமிழ் எங்கள்
உரிமைச்செம்பயிருக்கு வேர்!"

தமிழின் இனிமை காட்டியவர், தமிழின் பெருமை நாட்டியவர், அத்துடன் நிற்கவில்லை. தமிழைத் தன்னுடனிருந்து பிரிக்க முடியாத ஒரு பொருளாகவே கருதுகிருர் கவிஞர். வானத்திற்கு வைர நிலாபோல், வண்ணமலருக்கு நறுமணம் போல், வீரனுக்குக் கூர்வாள் போல், மென்யாழுக்கு இன்னிசைபோல், கண்ணும் ஒளியும்போல் தானும் தமிழும் என எண்ணுகிருர் கவிஞர். இயற்கையினுற் கூடி இரண்டறக் கலந்திருக்கும் இரு பொருட்களின் தன்மை போல் அவர் தமிழையும் தன்னையும் கருதுகிருர்.




## செந்தமிழ்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சானுவாய்!" என்ற அடிக்கடி வாழ்த்துரை வழங்குவார்; இனிய தமிழ்ப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து மனப்பாடம் செய்விப்பார். அடிகளாரின் ஆசியுரை பொய்க்கவில்லை. சொல்லின் செல்வரானுர் சேதுப்பிள்ளை. 1951-ல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாவிலே சேதுப்பிள்ளையின் செந்தமிழ்ப் பேச்சைக் கேட்ட எவர்தான் அதனை மறந்து விடுவர்?

### திருக்குறட் பயிற்சி

பாளையங்கோட்டை உயர் நிலைப் பள்ளியிற் சேர்ந்த பின்பும் அடிகளாரின் தொடர்பு அறுந்துவிடவில்லை. சேவியர் கல்லூரியிலே தமிழ்ப் பாடத்திலே முதன்மை பெற்ருர். வரலாற்று வகுப்பிலே மறந்தும் தமிழ் பேசினுல் தண்டப் பணம் கொடுக்க வேண்டுமென்பது ஆசிரியர் கட்டளை. அடிக்கடி தமிழ் பேசி தண்டப் பணம் கொடுப்பதிலும் முதன்மை பெற்ருர். எழாம் வகுப்பிலே இருக்கும் போது நல்லொழுக்கப் பரிசாகத் திருக்குறள் நூல் கிடைத்தது.

அப்பரிசு நூலை அடிகளாரின் திருவடிகளில் வைத்து வணங்கி வாழ்த்துப் பெற்ருர். விடவில்லை அடிகளார். விடுமுறை நாட்களில் ஒவ்வொரு நாளும் ஐந்து குறள் வீதம் மனபபாடம் செய்து ஒப்புவிக்கும்படி வேண்டினுர். நாள் தோறும் குறளின் கருத்தையும் விளக்கி வந்தார். சில நாட்களில் அறத்துப் பால் முழுவதையுமே மனனம் செய்துவிட்டாராம் சேதுப்பிள்ளை.

இவ்வாறு இளமையிலேயே ஈழந் தறிஞர் ஒருவரிடம் பெற்ற இன் தமிழ்ப் பயிற்சி சேதுப்பிள்ளையை செந்தமிழ்க் காவலராக்கியது என்பதை எண்ணும்போது நாமெல்லாம் இறும்பூதெய்த வேண்டாமா?

## எங்கள் வாழ்வும்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கோதி நுணுக்காய்க் குடுமி
முடித்துக்
காதில் தொங்கும் கடுக்கனைத்
துடைத்துச்
சாப்பிட மாட்டேன் சற்றும்
இக்கிரேன்,
என்று புறப்பட்டுப் போய்
விட்டார்."

அவர் வீட்டுத் தலைவி தூங்கும் தூக்கமே தனி!

"நவாபுக் குதிரை நாடு
முழுவதும்
சவாரி வந்து தரையில்
புரழல்போல்
படுத்துப் புரண்டு
பிடித்தாள் உறக்கம்"

இப்படி வீடிருந்தால் என்ன வாகும்?

"எனக்கு வந்த அஞ்சலட்டையில்
இருந்தவை பத்து வரிகள்—
அவற்றில்
இருந்தவை நூறு பிழைகள்!"
"இனிப்பை இனிப்பென்
றெழுதிவைத்தார்
இழுப்பை இளுப்பென்
றெழுதி வைத்தார்"

இவை எழுத்துப்பிழைகள் இலக்கணப் பிழைகள் உண்டா?

"அவைகள் வந்தது
பாட்டி செத்தது
சேய் பிறந்தாள்.
எந்தன் செல்வம்
எவரைக் கண்டீர்
எப்படி சொன்னீர்"

இவற்றைப் படித்தால் சிரிக்காமல் இருக்க முடியுமா?"

### தமிழே உயிர்

இவற்றிற் கெல்லாம் மேலாகத் தமிழே தன் மூச்சு தமிழே தன் உயிர் என உறுதியாய் உரைக்கிருர்.

"நாயினும் கீழாய்ச்
செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி
அவர் நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்"

என்று தன் தாயின்மேலாணை, தந்தை மேலாணை, தமிழக மேலாணை, என் தூய தமிழ்மேல் ஆணையிட்டுத் தோழரே இதை உரைக்கின்றேன் என்று உறுதி கூறுகிருரே!

'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்றுரைத்து அக்ககைய தமிழர்க்கொரு தீமை வரினும் இமைப்பினில் ஓடித் தரக்கடவேன் நான் இனிதாம் என் ஆவி' என்று தன் உயிரையே தரக் காத்திருக்கிருரே. அவர் உறுதியே உறுதி;! தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று தமிழை உயிராகக் கருதுகிருர்.

"தமிழுண்டு தமிழ்
மக்களுண்டு இன்பத்
தமிழுக்கு நாளும்
செய்வோம் நல்லதொண்டு"

என்று நம்மையும் ஊக்குகிருர்.

'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!' என்ற அவர் முழக்கம் நம் நெஞ்சை விட்டு நீங்குமா? ஆம், அவர் கூற்றுப் போல் நாம் வாழ வளம்பெற மங்காத் தமிழை வளர்க்கவேண்டும். தமிழின் வாழ்வே தமிழன் வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சிறிது நேரத்தில்...! இரண்டு இயந்திரப் படகுகளும் கரையை அடைந்தன. அடுத்த விநாடி... அவற்றிலிருந்து பல ஆயுதந் தாங்கிய போலீஸ் காரர்கள் கரையில் குதித்தனர். படகில் பதுங்கியிருந்த பையன்கள் பயத்தில் கூச்சல் கிளப்பியபடி முண்டியடைத்துக் கொண்டு பற்றைகளுக்குள் பதுங்கிக் கொண்டனர்.

"ஏய்! தம்பிகளே! பயப்படாதிர்கள்...உங்களைக் காப்பாற்றத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். எல்லோரும் வெளியே வாருங்கள்..." என்று இரைந்து கத்தினார் ஒரு போலீஸ் அதிகாரி. அதிகாரியின் வேண்டுகோளை யடுத்து எல்லாச் சிறுவர்களும் வெளியே மெதுவாக வந்தனர். அவர்களுடைய இதயங்கள் 'படக் படக்!' என அடித்துக் கொண்டு தான் இருந்தன. ஒவ்வொருவராகத் தங்கள் சோகக் கதையைப் போலீஸ் அதிகாரியிடம் விவரித்தனர். சிறிது நேரத்தில்...!

சிறுவர்கள் உதவியுடன் முரட்டு மீனவர்களின் குடிசையைப் போலீசார் சூழ்ந்து கொண்டனர். சிறுவர்களைக் குடிசைக்குப் பக்கத்தில் போய்க் கூச்சல் போடும்படி கூறிவிட்டுப் போலீஸ் அதிகாரியும் மற்றவர்களும் பற்றைக்குள் பதுங்கிக் கொண்டனர். அவருடைய கையில் சுழல் துப்பாக்கியொன்று மின்னிக் கொண்டிருந்தது.

சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு கூச்சல் போட்டனர். உடனே......! குடிசைக் கதவு இலேசாகத் திறக்கப்பட்டது. ஒரு முரட்டு மீனவன் மெதுவாகத் தலையை நீட்டி வெளியே பார்த்தான். அடுத்த விநாடி..." அண்ணே! அண்ணே! ஓடி வாங்க... அதோ எல்லாப் பையன்களும் கூட்டமா நிக்கிறாங்க..." என்று பலமாகக் கத்தினான்.

சிறிது நேரத்தில் பல மீனவர்கள் தடிகள் சகிதம் ஓடிவந்து சிறுவர்களை வளைத்துக்கொண்டனர். உடனே...!

'டுமீல்! டுமீல்!' என்ற துப்பாக்கி வெடிச்சத்தம் அந்தத் தீவையே கிடுகிடுக்க வைத்தது. சூழ்நிலைக் கெதிர் பாராதவிதமாக எழுந்த அத் துப்பாக்கி வெடிகளால் அதிர்ச்சியடைந்த மீனவர்கள் அதிர்ச்சியால் அப்படியப்படியே அசையாது நின்றனர்.

அந்த நேரத்தில் போலீசார் அவர்களை வளைத்துக் கொண்டனர். போலீஸ் அதிகாரியின் உத்தரவுப்படி அவ்வளவரும் கைதுசெய்யப்பட்டு இயந்திரப் படகில் ஏற்றப் பட்டனர். அத்துடன் குடிசையுள் காணப்பட்ட பல திருட்டுப் பொருட்களும் படகில் ஏற்றப்பட்டன.

அன்றிரவு...!நேரம் சுமார் பதினொன்று இருக்கலாம். அப்போது ..! குகையைப் பின் பற்றிச் சென்ற போலீஸ் குழுவினர் போலி நூறு ரூபா நோட்டுத் தயாரிக்கும் திருடர்களின் குகையைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது...!போலி நோட் தயாரிக்கும் இயந்திரம் 'கிடுகிடு' என்று இரைச்சலுடன்வேலை செய்து கொண்டிருந்தது.

சுமார் அரை மணி நேரத்தின் பின்... இயந்திரம் அமைதி அடைந்தது. பின்பு ...குகைக் கதவு மெதுவாகத் திறந்ததைத் தொடர்ந்து ஐந்து முரடர்கள் போலி நூறு ரூபா நோட்டுக்கள் அடங்கிய பெட்டிகளுடன் வெளியே வந்தனர். முன்னுக்கு வந்து கொண்டிருந்தவனுடைய கையில் ஒரு சுழல் துப்பாக்கி மின்னிக் கொண்டிருந்தது. திடீரென்று...'டுமீல்' என்ற துப்பாக்கி வெடி எங்கிருந்தோ கிளம்பியது. முரடனுடைய கையில் காட்சியளித்துக் கொண்டிடுத்த சுழல் துப்பாக்கி தொலைவில் போய் விழுந்து நொருங்கியது. உடனடியாக...!

அத்தனை முரடர்களும் கைது செய்யப்பட்டனர். அதுமட்டுமன்றி குகையுள் பதுக்கி வைக்கப் பட்டிருந்த ஏராளமான ரூபா நோட்டுக்களும், இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன. முரடர்கள் அனைவரும் விலங்கு மாட்டப்பட்டு இயந்திரப் படகில் ஏற்றப்பட்டனர். பின்பு...!

இன்ஸ்பெக்டரின் வேண்டுகோளுக்கிணங்க குகன் கள்ளத்தனமாகக் 'கசிப்பு'த் தயாரிக்கும் கள்வர் குகைக்குச் சுரங்க வழியினூடாக நுழைந்து சென்றான். அவனை இன்ஸ்பெக்டரும், நான்கு போலீசாரும் தொடர்ந்து சென்று குகையுள் நுழைந்தனர். அங்கு......

சில முரட்டு மனிதர்கள் கசிப்புத் தயாரிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பென்னம் பெரிய பாத்திரமொன்றில் கசிப்புத் திராவகம் 'கழபுழ' வென்று கொதித்துக்கொண்டிருந்தது.

## நன்றி! நன்றி!...

எனது தொடர் கதையான 'பயங்கரத் தீவை'ச் சுதந்திரன் வளர்மதியில் தொடர்ந்து வெளியிட்டு ஊக்கமளித்த வளர்மதி மாமா அவர்கட்கும், வாசகர்கட்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

அன்பன்,
மாஸ்டர் சிவலிங்கம்.

"யாருமே அசையக் கூடாது...கைகளை மேலே உயர்த்தியபடி அப்படியே நில்லுங்கள்" என்றபடிசுழல் துப்பாக்கியுடன் நெருங்கினார் இன்ஸ்பெக்டர். அதிர்ச்சியடைந்த முரடர்கள் அப்படியப்படியே கைகளை உயர்த்தியபடி நின்றனர். இன்ஸ்பெக்டரின் உத்தரவுப்படி முரடர்களுக்கு விலங்கு மாட்டினர் போலீசார் சிறிது நேரத்தில்......! அவர்களையும் இயந்திரப் படகில் ஏற்றிக் கொண்டு பையன்களுடன் பட்டினத்தை நோக்கி விரைந்தனர். தீவில்...! பயங்கர அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

(முற்றும்)

அன்புள்ள மருமக்களே!

வணக்கம். நீங்கள் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துக்கள் கிடைக்கப் பெற்றேன் நன்றி.

நீண்ட இடைவெளிக்குப் பின் இம்மடலைத் தங்களுக்கு வரைகிறேன். தேர்தற் போராட்டம் யாரைத்தான் விட்டு வைத்தது. தேர்தற் பிரச்சினை காரணமாக உங்கள் பகுதிகூட சிறப்பாக வெளிவர முடியாமற் போய் விட்டது. அனைத்திற்கும் சேர்த்து ஒரு மன்னிப்பு.

வளர்மதி உறுப்புரிமை பற்றிய ஒரு செய்தியைத் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். வளர்மதி உறுப்பினர்களிற் பலர் குறிப்பிட்ட வயதைக் கடந்த பின்னரும் கூட மன்றத்தில் உறுப்பினர்களாக விருக்கிறார்கள். இவர்களைத் தெரிந்தெடுத்து நீக்குவது கடினமானது. எனவே உறுப்புரிமையை புதுப்படுத்தலாம்என்று தீர்மானித்துள்ளேன். ஆகவே, வளர்மதி மருமக்களாகிய நீங்கள் மீண்டும் மூன்று உறுப்புரிமைப் படிவங்களை நிரப்பி மாமாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். உங்களுக்கு புதிய இலக்கமும் அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பப்படுவதுடன், உங்கள் பெயரும் முகவரியும் வளர்மதியில் பிரசுரிக்கப்படும்.

இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து உறுப்புரிமை கோரி புதிதாக மனுச் செய்தவர்கள் மீண்டும் மனுச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

அடுத்த வாரத்திலிருந்து மருமக்களின் பெயர் தொடர்ந்து வெளியாகும்.

அன்புள்ள,

வளர்மதி மாமா

# கல்வியே கருந்தனம்

## புதுமைகள் பாரீர் பாரினிலே-(41)

—அன்ரனி பெர்னண்டோ, இரிலப்பளை—

### மருத்துவர் வராமலே மருத்துவம் செய்யலாம்

தூரதேசங்களில் மருத்துவ நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள். தமது மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் இந்த நிபுணர்களை நாடினால் குணமாகக்கூடும். ஆனால், கடல் கடந்து சென்று பரிகாரம் பெறுவது இலேசான காரியம் அல்லவே. போகவர ஏகப்பட்ட பணம் செலவாகும், அத்தோடு நோயாளியின் உடம்புக்கும் தூரப்பயணம் அவ்வளவு நல்லதல்ல. இனி, மருத்துவ நிபுணரை நோயாளியிடம் வரவழைக்கலாமென்றால் அது கூடச் செலவையும் சிரமத்தையும் கொடுக்கும் செயலாகவே இருக்கிறது.

மருத்துவர் தன் வீட்டிலேயே இருந்துகொண்டு தூரத்தில் உள்ள ஒரு நோயாளியைச் சோதித்துப் பரிகாரம் கூற முடியாதா? அதெப்படி முடியும் என்றுதான் எவரும் சொல்லிவிடுவர். ஆனால், அமெரிக்க அறிவர்கள் அப்படிச் சொல்லாமல் முயற்சி செய்து பார்த்தனர். அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நோயாளியைக் கூட மருத்துவர் தன் வீட்டிலிருந்தே சோதிப்பதற்கு ஏற்ற கருவிகளை அவர்கள் கண்டுபிடித்துவிட்டனர்.

2,500 மைல்களுக்கு அப்பால் லாஸ் ஏன்ஜலஸ் என்ற இடத்திலிருந்த ஒரு மனிதனின் இதயத்துடிப்பை நியூயோர்க் நகரில் இருந்து ஒரு திரையிலே கண்டனர் அமெரிக்க அறிவர்கள். அந்த மனிதனின் மேல் சட்டைப் பையிலே ஊற்றுப் பேனாவின் அளவையும் வடிவத்தையும் கொண்ட ஒரு கருவி இருந்தது. இக் கருவியோடு இணைக்கப்பட்ட இரு ஒலிவாங்கிகள் அவனுடைய இருதயத்தின்மேல் நெஞ்சைத் தொட்டுக் கொண்டிருந்தன. சட்டைப் பையிலிருந்த சின்னஞ்சிறு கருவி அவனது இதயத்துடிப்பின ஒலியை மற்றொரு பெரிய கருவிக்கு அனுப்பியது. இந்தப் பெரிய கருவி அதைத் தொலை பேசிக் கம்பிகளினூடே நியூயோர்க்கிற்கு அனுப்பியது. இந்த ஒலி மின்குறிகளாக மாறி தொலை நோக்கித் திரையிலே தோன்றியதைத் தான் அமெரிக்க அறிவர்கள் கண்டனர்.

இப்போது இதைவிட இன்னும் எவ்வளவோ மின் கருவிகள் இந்த வேலையைச் செய்கின்றன. இவை தேகத்தில் எழும் ஒலி, அதன் வெப்ப நிலை போன்ற பல விபரங்களை மின்குறிகளாக மாற்றிப் பதிவு செய்கின்றன. இந்த மின்குறிகள் தான் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள திரைகளில் தெரிகின்றன. மருத்துவர்கள் இந்த மின்குறிகளைப் பார்த்து நோயாளியின் தேக நிலையை நேரில் கண்டு அறிவது போல் மிகச் சரியாக அறிந்துகொள்ள முடிகிறது.

இனிமேல் மருத்துவரைத் தேடி நோயாளி போக வேண்டியதில்லை. மருத்துவர் நோயாளியை நாடவும் தேவையில்லை. இருவரும் அவரவர் வீட்டில் இருந்து கொண்டே பரிகாரத்தை முடித்துக் கொள்ளலாம்.

## நினைவு வாழுமம்மா!

கல்முனை-நோ. மணிவாசகன்

வாழ்க வாழ்க வாழ்க—'பாரதி
தாசன்' வாழ்க வாழ்கவே!

பொன்னும் பொருளும் தேட—அவர்
பிறந்த வரில்லை யம்மா!
மண்ணில் மாளிகை வாழ்வு-அவர்
வாழ்ந் ததுமில்லை யம்மா!

ஏழையின் வறுமை, பசி, துயரம்—கண்டு
உள்ளந் துகித்த வரம்மா!
கோழையைக் கண்டால் வெகுண்—டெழுந்து;
மனத் திரஞ் சேர்த்த வரம்மா!

நாட்டுப் பற்றில் லாதவனைக்—கண்டு
நெஞ்சங் கொதித் தாரம்மா!
நாடும் மொழியும் விழிகளென—அவர்
நினைக்க வைத்தாரம்மா!


பாலுந் தேனும் கலந்ததுபோல்—சுவை(ப்)
பாடல் பாடி னாரம்மா!
ஞாலம் உள்ள மட்டிலும்—அவர்
நினைவு வாழு மம்மா!

வாழ்க வாழ்க வாழ்க—'பாரதி
தாசன்' வாழ்க வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வூட்டும் 3-வது வாரம்!

மூன்று இள உள்ளங்களில் காதல் புயலை எழுப்பிவிட்டு, அவர்களுடன் இரசிகர்களின் உள்ளங்களையும் ஊஞ்சலாட்டுகிறாள்!





## குலமகள் ராதை

டைரக்ஷன்:
ஏ. பி. நாகராஜன்

இப்பொழுது
**எல்பின்ஸ்டனிலும்**
மற்றும் பல திரைகளிலும்...


கெபிட்டலில்
28ம் திகதி புதன்கிழமை முதல் திரையிடப்படும்.

---

மக்கள் போற்றும்
3வது வாரம்!

**சென்ட்ரல் - ஈரோஸ்**
(மருதானை) (பாமன்கடை)

★ கவர்ச்சி நடனங்களும்
★ களிப்பூட்டும் காட்சிகள்
★ சுவையான இசை நிறைந்த



## சிகாரி

(இந்தி)
ஈஸ்ட்மன் கலர்

அஜித் — ராகினி
ஹெலன் — சிங்
நடித்தது.

---

எண்டெர்டெயின்மெண்ட்ஸ் அளிக்கும்
## அடுத்த திரை விருந்து!

தங்கள் முதல் படத்திலேயே ஒப்பற்ற நடிகர்கள் என்று புகழீட்டிய புதுமுகங்களான

**ஜெய்சங்கர் — வசந்தா**
நடித்த

சிட்டாடலின்





## இரவும் பகலும்

அசோகன் தன் சொந்தக் குரலில் இப்படத்தில் பாடியுள்ளார்.

டைரக்ஷன் : ஜோஸப் தளியத் (ஜூனியர்)

---

# புலி பாயும் கானகத்துள் புரட்சிக் குரல்!

## 3வது வாரமாக ஒலிக்கிறது

தமிழ்த் திரைப் படங்களிலே ஒரு புரட்சிப் பாதை அமைத்து விட்டான்

# வேட்டைக்காரன்



நடிகர்கள்:
எம். ஜி. ராமச்சந்திரன், சாவித்திரி,
நம்பியார், அசோகன், எம். ஆர். ராதா,
நாகேஷ், மனோரமா, ராஜம்மா,
நடித்தது

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**விஜயா** (மட்டக்களப்பு) **ராஜ்** (நீர்கொழும்பு) **தீவொளி** (நுவரெலியா) **மொடேர்ன்** (பண்டாரவளை)
**விஜிதா** (அட்டன்) **ஜுபிட்டர்** (குருநாகல்) **இலட்சுமி** (இரத்தினபுரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஏப்ரல் மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.